9

காவேரி

JUNE 1945

பார்த்திப - ஆனி

9

3-JUL 1945
MADRAS

4-11

/6

Widest Circulated Monthly

சுத்தம்

ப்ரொட்யூசர்
T.V.S. காஸ் பிளான்டின்
முக்கிய அம்சம்



காஸ் பிளான்ட் அமைக்கப் பட்ட உங்கள் பஸ் அல்லது லாரி சுகமாக ஓட காஸ் சுத்த மாய் இருப்பது அவசியம். T. V. S. ப்ரொட்யூசர் காஸ் பிளான்ட் மற்றெல்லா தயாரிப் பையும்விட மிக சுத்தமான காஸை கொடுக்கிறது.

7000-க்கு மேற் பட்ட பிளான்டு கள் இந்தியாவில் விற்பனை ஆகி இருக்கின்றன.

T·V·S

T.V. சுந்தரம் அய்யங்கார்

அன் சன்ஸ், லிமிடெட்.

மதுரை & மதருஸ்

TVSK-15-TM

Estd. 1904 Tel. KETIOR

உலகப் புகழ்பெற்ற விஜயபுரம்

K.T.R

வாஸனு திரவியங்கள்
உபயோகித்து என்றும்
ஆனந்தம் அடையுங்கள்

பன்னீர்

குளிர்ச்சியுடைய சந்தனுதி &
அரைக்கீரைவிதைத் தைலங்கள்,
ஒயிட்ரோஸ் ஹேராயில், கிருஷ்ணு
அகர் பத்தி, ராஜா பற்பொடி
மார்கெட்டில் நற்கியாதி வாய்ந்தது
எங்கும் கிடைக்கும்.

மதராஸ் ஏஜண்டு:

GIRISON & Co.

PARK TOWN
MADRAS



சேனாரில் — தேநீர் அருந்தும் நேரம்

பனி மூடிய மலைகளின் பிம்பத்தைப் பிடித்துக் காட்டும் நதிகள், ஏரிகள், காடுகள் இவை காஷ்மீரின் அழகில் உள்ளடங்கியவை. இப் பள்ளத்தாக்கிலுள்ள நீர்நிலைகளில் செல்லும் ஓடங்களின் வனப்பை வேலைப்பாடமைந்த மரத்தட்டுகளும்; சோடிப்புச் சாமான்களும் அதிகப்படுத்திக் காட்டுகின்றன.

காஷ்மீர் சென்று அநாயாசமாய்ப் பொழுதுபோக்க ஓய்வு நாள் பெற்ற பாக்யசாலிகள் பிற்பகலில் தேநீர் பருகுவது உண்டு. ஆற்றோரம் உலாவி வருவதால் காலதாமதம் ஏற்பட்டாலுங்கூட அந்தத் தேநீர் அருந்தும் நேரத்தை அவர்கள் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

ஓடங்களில் அமைத்த பல வீடுகளில் வர்ணப் பூச்சுக்களால் பளபளவென்று கண்ணைப் பறிக்கும்படி செய்த பல காஷ்மீர் மண்பாண்டங்கள் தேநீர் அருந்துவதற்காக வைத்திருக்கிறார்கள். இங்கே, ஐரோப்பிய முறையில் தேநீர் உபசரிக்கப்படுகிறது. கோப்பையில்தான் தேநீருடன் பாலும் சீனியும் கலக்கப்படுகின்றன.

காஷ்மீருக்குப் பொழுதுபோக்குக்காக வருகிறவர்களுக்கு மற்றப் பிரதேசங்களில் அவர்களுக்குக் கிடைப்பதுபோலவே புத்தப்புதிய ப்ருக் பாண்ட் தேயிலை சுலபமாய்க் கிடைக்கிறது.

ப்ரூக் பாண்ட்

"இரு இலையும் ஒரு மொட்டும்"

No. 1- கிராம முன்னேற்றம்

யுத்தத்திற்குப் பின் செய்யவேண்டிய கிராம அபிவிர்த்தியின் முக்கிய வேலைகளில் ஸிமெண்ட் காங்கிரீட் தலை சிறந்து விளங்குவதாகும். ரிப்பேர் போன்றுள்ள செலவைக் குறைத்து உறுதிப்பாடுடன் சிக்கனமாக கட்டிடங்கள் எழுப்புவதில் இது நிகரற்றிருப்பது இதன் விசேஷ குணம். சுத்தத்தின் அவசியத்தை உணரவேண்டிய இடங்களாகிய ரோடுகள், நடைபாதைகள், வீடு, ஆஸ்பத்திரி, சந்தையின் தளம், பால் கறக்குமிடம், கிணறு, சாக்கடை—இவைகளுக்கு இதன் உபயோகம் ஒப்பற்றது.

கிராம உத்தாரண திட்டங்களில் ஈடுபடுபவர்களுக்கு இலவச வசதி, காங்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா, 199, மவுன்ட் ரோடு, மதராஸ் அளிக்கிறது.

காங்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா

தி ஸிமெண்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெடின்

போதனுமுறை ஸ்தாபனம்.

இந்தியாவிற்காகவும் உங்களுக்காகவும்

சிக்கனக் குறிப்புக்கள்

இந்தக்காலத்தில் ஏழைகளுக்கு உதவும் பொருட்டு நாம் எல்லோரும் அநேக சாமான்களைக் குறைவாகவே உபயோகிக்க வேண்டும். அவற்றைக் குறைவாக உபயோசிப்பதின் மூலம் அவை மிக அவசியமாக தேவையுள்ளவர்களுக்கு அதிகம் கிடைக்கும்படி செய்கிறீர்கள். இழையிட்ட காலர் ஒட்டுப்போட்ட ஜோடுகளையும் பெருமையோடு அணிந்துக்கொள்ளுங்கள். இந்தக்காலத்தில் பொருட்களை மிச்சமாகச் செலவிடுவது நாட்டுப்பற்று மட்டுமன்றி நாகரிகமுங்கூட.

மற்றுமொரு நன்மையும் இதனுல் உண்டு. பழைய சாமான்களைக் கொண்டே காலம் கடத்துவதாலும், நாள்தோறும் எல்லாவற்றிலும் சிக்கன முறையைக் கையாளுவதாலும் அதிகத் தொகை மிச்சமாகிறது. விலைகள் குறைகிறபோது பொருட்களை வாங்க அதிக ரூபாய்கள், கையில் இருக்கும்.

பொருட்களை மிதமாய்ச் செலவிட்டு, அவை தாராளமாய்க் கிடைக்கும்படிச் செய்யுங்கள்.

1 பற்பசைகளை சிக்கனமாய் உபயோகியுங்கள். பழைய ட்யூப்களை குப்பைக் கூடங்களுக்கு அனுப்புங்கள்.



2 சமீபத்தில் உள்ள இடங்களுக்கு நடந்தோ அல்லது சைகிளிலோ சென்று, பணத்தை மிச்சப்படுத்துங்கள்.



3 ஒவ்வொரு வேளை ஆகாரத்திற்கும் உணவு வகைகளைக் குறையுங்கள்.



4 நன்கு பராமரிக்கப்பட்ட விளக்குக்கு, குறைவான மண்ணெண்ணெய் போதும்.



5 புது நகைகள் வாங்காதீர்கள். நீங்கள் அதற்குக் கொடுக்கும் விலைக்கு, அது தகுந்ததல்ல.

6 பென்சில், இங்கி, எழுதும் காகிதம் மற்ற எல்லா ஸ்டேஷனரி சாமான்களிலும் சிக்கனத்தைக் கையாளுங்கள்.

உங்களுக்கு இன்றியமையாதவை தவிர பிறவற்றை வாங்காதீர்கள்

இந்திய சர்க்கார் இ. & பி. இலாகா வெளியீடு

சிறந்த ஆபரணங்களுக்கும்
வைரங்களுக்கும்
P.A. ராஜசெட்டியார் & பிரதர்
கடைத்தெரு, கோயமுத்தூர்
போன் 218A - தபால்பெட்டி 139 - தந்தி "ராஜா"

★ ★ மைஸூர் கவர்மெண்டு தயாரிப்பு ★ ★

மின்சார வசதி இல்லாத இடங்களில்
ஒலிபெருக்கிகள் அமைக்கவேண்டுமாயின்

நேஷனல் ரேடியோஸ்
பாட்டரி ஒலிபெருக்கிகள்
— விரும்பப்படுகிறது —

★ **நேஷனல் ரேடியோஸ்** ★

பிர்மன்கோவில் தெரு - கும்பகோணம்

ஜீவாம்ருதம்

ஆண்மைக்கும்
ஆரோக்கியத்திற்கும்



ஆண்மைக்கும்
ஆரோக்கியத்திற்கும்
நிகரற்ற இந்த டானிக்
1898 வருஷம் முதல் பிரசித்தி பெற்
றது. இது நரம்புகளுக்கு வலுவை
யூட்டி எக்காலத்திலும் எதையும்
எதிர்த்து நின்று ஜெயிக்
கக்கூடிய சக்தியை
அளிக்கிறது.

ஆயுர் வேதாஸ்ரமம், மதருஸ்

டிரேட் மார்க்கை
கவனியுங்கள்!



ஒவ்வொரு
வீட்டிலும்
உட்வார்ட்ஸ்
க்ரைப் வாட்டர்
இருக்கவேண்டும்

WOODWARD'S GRIPE WATER

keeps baby well

1-WW112-111 W. WOODWARD LTD. LONDON ENGLAND

Agent:— T. T. KRISHNAMACHARI,
12A Lingha Chetty Street, :: G. T. MADRAS.

சங்கீதம்
ஜாதிமத வேற்றுமை அறியாதது
இதை நிரூபிக்க என்றே
முஸ்லிம் இனத்தில் ஓர் ஸங்கீத
ஒளி ஜகத்ஜோதியாய்
பிரகாசிக்கத் தொடங்கியுள்ளது



இந்த இசை ஒளி தான்
கர்னாடக சங்கீத வித்வான்
கும்பகோணம்
A. D. சுல்தான்

இவரது கச்சேரி சமீபத்தில் நடைபெறும் இடங்கள்:-

21—6—45 கடயநல்லூர்.
24—6—45 பாரத் ஸங்கீத ஸபா
அஸெம்பிளி ஹால், உதகமண்டலம்.
27—6—45 ராசிபுரம்.
28—6—45 நாமக்கல்.
31—7—45 அகில இந்திய ரேடியோ
திருச்சி.

பொருளடக்கம்

பார்த்திப மலர் 4 — ஆனி இதழ் 11

கழுதையா குதிரையா? ... 10

கதம்பம் ... 11

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் 13
ராமய்யா

உணவு ... 17
தி. சே. சௌ. ராஜன்

இருளுக்குப்பின் ... 22
கே. சுந்தரம்மாள்

காலக்கண்ணாடிக் கதைகள் ... 25
யோகி சுத்தானந்த பாரதியார்

உலோகங்கள் ... 32
ஆர். கே. விசுவநாதன்

பாகவத நாடகம் ... 35
டாக்டர் வே. ராகவன்

நானிஜீ சொன்ன கதை ... 44
சாரி

குழந்தை ... 53
ரா. வீழிநாதன்

வானுலகில் ஹிட்லர் ... 54
ஜய்லன்

அமிர்தமும் கள்ளும் ... 59
ஜி. எஸ். மணி

குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

★ காவேரி ★

பார்த்திப மலர் 4 | "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார் | ஆனி இதழ் 11

கழுதையா குதிரையா?

பிரிட்டன் குட்டிபோடப் போகிறது போடப்போகிறது என்று பலதடவைகளில் இந்தியர்கள் ஏமாந்திருக்கிறார்கள்.

இன்று பிரஸவமாகப் போகிறது என்ற செய்தியைக் குதூகலத்துடன் இந்திய மக்கள் வரவேற்காததற்குக் காரணம் இந்த ஏமாற்றமே.

முன்பு ஒரு தடவை யுத்த நெருக்கடியினால் பிரஸவ வேதனை ஏற்பட்டது. கிரிப்ஸ் துரை அப்பொழுது மருத்துவம் செய்தார். "பிறந்துவிட்டது அழகான குதிரைக்குட்டி; பருவ காலத்தில் இது உங்களைச் சுதந்திரத்திற்குக் கடத்திச் செல்லும்" என்று கரடியாகக் கத்தினார். ஆனால் நமது தலைவர்கள் அக் குட்டியின் வெள்ளை மூக்கைக் கண்டு அதை அங்கீகரிக்க மறுத்துவிட்டனர். கழுதைக் குட்டியின் ஸ்வபாவம் யாருக்குத்தான் தெரியாது? "இன்றும் அக்குட்டி உயிருடன்தானிருக்கிறது; என்று வேண்டுமானாலும் இந்தியர்கள் அதை ஏற்றுக் கொள்ளலாம்" என்று அடிக்கடி பிதற்றி வந்தார் அமெரி துரை. பலிக்கவில்லை. இந்தியர்கள் கேட்பதாயில்லை.

இப்பொழுது மறுபடியும் பிரிட்டனுக்குப் பிரஸவ வேதனை ஏற்பட்டிருக்கிறதாம். பிரிட்டிஷ் பொதுத் தேர்தலினால் ஏற்பட்ட பிரஸவம் இது. இந்தத் தடவை என்ன பிறக்கப்போகிறது என்பது திட்டமாகத் தெரியவில்லை. இப்பொழுது பிரஸவ சிகிச்சை செய்பவர் கிரிப்ஸ் துரைக்குப் பதிலாக நமது அட்டைப் படத்தில் காணப்படும் ராணுவ வைஸிராய் லார்ட் வேவல். இவர் கைராசியாவது நன்மையாகவிருக்குமென எதிர்பார்க்கிறோம்.

ஆனால் நமக்கு மட்டும் எப்பொழுதும் ஒரு சந்தேகம். கர்ப்பம் தரிக்கச் செய்தவர் பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சில். அவர் கைவைத்தால் அநேகமாகக் கர்ப்பம் தரிக்காது. அப்படியே ஆனாலும் பிறப்பது வெள்ளை மூக்கு வர்க்கமாகத்தான் இருக்கும். உலகத்தில் அவரை வானளாவப் புகழ்கிறார்கள். இன்று பெரிய வெற்றி வீரராக முழங்குகிறார். ஒருகால் இந்தத் தடவையாவது நல்ல ஜாதி பிறக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தாம் விடுத்த தேர்தல் அறிக்கையில் இந்தியா விஷயத்தில் அவர் கொண்டுள்ள அபிப்பிராயத்தைப் பார்த்தால் இத்தகைய நல்ல ஜாதியை எதிர்பார்க்க இடமில்லை எனத் தெளிவாகத் தெரிகிறது.

குதிரைக் குட்டிக்கும் கழுதைக் குட்டிக்கும் வித்தியாசம் கண்டுபிடிப்பது கஷ்டம். அதுவும் சர்ச்சில்'—அமெரி கோஷ்டியார் வியாபார தந்திரத்தில் கைதேர்ந்தவர்கள். குதிரையைக் கழுதை என்றும் கழுதையைக் குதிரை என்றும் பிறரை நம்பவைத்து வியாபாரம் செய்வதை ஒரு கலையாகப் பயின்றவர்கள். ஆகையால் பொது ஜனங்கள் வெகு ஜாக்கிரதையுடன் இப்பொழுது உதிக்கப்போகும் குட்டியைக் கவனித்து அங்கீகரிக்கவேண்டும்?

நம் நாடு இருக்கும் சீர்கேடான நிலையில் எதை அளித்தாலும் நாம் எற்றுக்கொள்ள வேண்டும் என்று சிலர் புத்திமதி கூறுகிறார்கள். சவாரி செய்யவேண்டியது அவசியம்; அது குதிரையானாலென்ன, கழுதையானாலென்ன? என்று கேட்கிறார்கள்.

அந் நிலைக்கு நாம் வந்துவிட்டோமா என்றுதான் நமக்குப் புலப்படவில்லை. தன்னம்பிக்கை நமக்குக் குறைந்துவிட்டதோவென அஞ்சவேண்டி வருகிறது.

ஜாதிக் குதிரைக்குட்டி கிடைத்தாலொழிய நாம் சவாரி செய்யத் தயாராய் இல்லை என்று உதறித்தள்ளுவதுதான் முறை. அப்பொழுதுதான் இந்திய சுதந்திர லக்ஷியத்தை என்றாவது நாம் அடைய முடியும். கழுதைக்குட்டியானாலும் சரி என்று சவாரிக்குக் கிளம்பிவிட்டால் கொஞ்சதூரம்தான் போகமுடியும். கழுதை சுமைதாங்குமேயொழியத் தூரம் கடத்திச் செல்லாது. வழியில் சண்டித்தனம்செய்யும். பின்காலைப் பிரயோகிக்க ஆரம்பித்துவிடும். இதை நம்பிப் பிரயாணமானால் நம் கதி அதோகதிதான். ஆகையால் சுதந்திர மடையப் புறப்படும் நாம் சவாரி செய்வது குதிரையா கழுதையா என்பதை நன்கு பரிசீலனை செய்து குதிரையாயின் மட்டுமே பிரயாணத்தைத் தொடங்குவது நன்மை எனப்படுகிறது.

பிறக்கப்போவது குதிரைக் குட்டியா கழுதைக்குட்டியா என்பதைப் பொறுத்திருக்கிறது எல்லாம். குட்டிவரப் போகிறதா அல்லது——............ வரப் போகிறதா பார்ப்போம்.

கதம்பம்

MADRAS 3-JUL 1945

கருணை காட்டுங்கள்!

'கருணை காட்டுங்கள்' என்ற ஓலம் இப்பொழுது அதிகமாகிவிட்டது. தாக்குத் தண்டனை அடைந்தவனுக்குக் கருணை காட்ட வேண்டும் என்று மன்றாடுவதில் அர்த்தமுண்டு. கடன் கொடுத்தவன், பெற்றுக் கொண்டவன் காலில் விழுந்து "கருணை காட்டு என் தெய்வமே" என்று கெஞ்சினால் நகைப்புக்கிடமாகத் தோன்றுகின்றதல்லவா! காலம் அப்படியிருக்கின்றது:

இந்தியாவுக்குப் பிரிட்டன் 14000 லக்ஷம் பவுன்கள் கடன்பட்டுள்ளது. அதைத் திருப்பிக் கேட்கும்போதெல்லாம் பலவித தப்புச் சால்சாப்புகள் சொல்லிவரப்படுகின்றன. அக்கடனையே "இல்லை" என்று பட்டவர்த்தனமாகச் சொல்லிவிட வேண்டும் என்று சீமையில் ஒரு கட்சியும் உள்ளது. இந்தியாவுக்குச் சேரவேண்டிய கடன் தொகை விஷயமாய் ஓர் அறிக்கை வெளியிடப்படும் என்று பொருளாதார மெம்பர் சட்ட சபையில் கூறி, பல மாதங்களாகியும் ஒன்றும் வரக்காணோம். அமெரிக்காவில் நடந்த உலகப் பொருளாதார மகாநாட்டில் "இது பிரிட்டனின் சொந்த விஷயம். இங்கு விவாதிக்கக் கூடியதல்ல" என்று சொல்லி விடப்பட்டது.

"பணமாகக் கொடுக்காவிட்டாலும், சாமான்களாகக் கொடுங்கள், உங்களிடம் சாமான்கள் இல்லாவிட்டால் அமெரிக்காவில் நாங்கள் சாமான்கள்பெற வசதி அளியுங்கள்" என்று இந்திய முதலாளிகள் கரடியாகக் கதறி வருகின்றனர். இந்தக் கதறல் சீமையில் அதிகாரம் வகிக்கும் ஸர் ஜான் அண்டரஸன் பிரபுவையும் சற்றுக் கலக்கிவிட்டது. அவருடைய சமீப பதிலைக் கவனியுங்கள். "ஒரு நியாயமான முறையில் இந்தியாவின் கடன் தீரவேண்டியதுதான். ஆனால் இவ்வித கடன்களை சாதாரணக் கடன்கள் மாதிரி நினைத்துத் தீர்க்க நிர்ப்பந்திப்பது கூடாது. இவ்வளவு பெரிய கடன் சுமையைப் பிரிட்டன் தாங்குவது என்பது நியாயமானதல்ல, நேர்மையானதல்ல"! எப்படியிருக்கின்றது விஷயம்?

அண்டரஸன் துரை இவ்வாறு சீமையில் கூறிவிட்டது நாட்டில் பீதியைக் கிளப்பியுள்ளது. சென்னையிலுள்ள தென்னிந்திய வர்த்தக சங்கத்தார் கல்லும் கரையுமாறு ஒப்பாரி வைத்து அழுது, இந்திய சர்க்காருக்குத் தெரிவித்துக்கொண்டுள்ளார்கள்.

"ஏராளமாக இந்தியா இந்த யுத்தத்தில் தியாகம் செய்துள்ளது. பணம், பொருள் மட்டுமா? மகத்தான யுத்தசேவை வேறு. பட்ட கடனைத் திருப்பிக் கேட்பதில் விட்டுக் கொடுத்தலும், மத்தியஸ்தமும் எப்படிப் பாதிக்கும்? நாங்கள் ரொக்கமாகவா திருப்பிக் கேட்கின்றோம்? நீங்கள்தான் இந்தியாவின் பணம் பத்திரமாகச் சீமைக் கடன் பத்திரங்களாய் இருக்கின்றது என்று சொல்லுகிறீர்களே? அவைகளில் ஒரு பாகத்தையேனும் நாங்கள் எங்கள் நாட்டின் அபிவிருத்திக்காகச் செலவழிக்க அனுமதி அளிக்கக் கூடாதா? வேண்டாம்! அன்னிய மார்க்கெட்டுக்களில் சாமான்கள் மலிவாகப் பெறவாவது உதவக்கூடாதா? அண்டரஸன் சொல்லுவது அழகா? ஏட்டில் இருப்பதைத் தவிர, கொள்ளை கொள்ளையாக எவ்வளவோ இழந்திருக்கிறோமே. வேர்வை, இரத்தம், உழைப்பு, இந்திய மக்களின் கண்ணீர்! எல்லாம் சேர்ந்தது எங்களுடைய பணத்தில்! கருணை காட்டுங்கள்!"

இவ்வார்த்தைகளைப் படித்த மாத்திரத்தில் எந்த இந்தியனுக்குத்தான் மனம் பதறாது? ஆயினும் அடிமை செய்யக்கூடியதென்ன? தலைவிதியைத்தான் நொந்துகொள்ளவேண்டும்!

நீடித்திருக்குமா?

ஆண் பிள்ளையென்றால் அறுபது ரூபாய் சம்பளம். எழுதப்படிக்கத் தெரிந்தால் எண்பது ரூபாய். பெண் என்றால் இன்னும் பெரும் தொகை சம்பளம். நொண்டி, முடம், சப்பாணி, குருடு இவர்களைத்தவிர எல்லோருக்கும் வேலையுண்டு. குமரிப்பருவம் நீங்கி, கிழப்பருவம் கிட்டியவளுக்கும் பணம் சம்பாதிக்க வழியுண்டு! யாராயிருந்தாலும் 'மிலிடரி'யில் சேர்ந்து சம்பாதிக்கலாம்! இந்தச் சுபிக்ஷகாலம் எப்பொழுதுமே நீடித்திருக்குமா?

இந்திய சர்க்கார் யுத்தத்துக்குப் பின்னும் ராணுவ சேவை செய்தவர்களுக்கு வேலைகள் கிடைக்க வசதி ஏற்படுத்தப்படும் என்பதாகப் பிரசாரம் செய்துவருகிறார்கள். ஆனால் இது சாத்யமான காரியமா?

யுத்தம் முடிந்ததும் வேலையில்லாத் திண்டாட்டத்தின் கொடுமை அதி பயங்கரமாயிருக்குமே என்பதைச் சீமை அறிவாளிகள் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர். பிரபல லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகை "வேலை

யில்லாக்கொடுமையின் அபாயம்'' என்ற ஓர் தலையங்கம் எழுதியிருக்கின்றது.

சர்க்கார் பிரசாரத்தைத் தவிர வேறு உருப்படியான திட்டம் யாதொன்றும் இங்கு வகுக்கப்படவில்லை. ராணுவ சேவை செய்தவர்களுக்குக் கொடுத்த பிறகே மற்றவர்களுக்கு உத்தியோகங்கள் என்றுமட்டும் சொல்லப்படுகிறது. ராணுவ சம்பந்தமான இலாகாக்களில் வேலை செய்த அவ்வளவு பேருக்கும் சர்க்காரால் வேலைகள் கொடுப்பதென்பது சாத்யமில்லாத காரியம். தொழிற்சாலைகளும் அதிகரிக்கவில்லை.

அன்னிய தேச முதலாளிகளின் சேஷ்டைகளால் நமது நாட்டில் பல தொழிற்சாலைகள் மூடப்படக்கூட நேரிடுமென்பதாக நினைக்கவேண்டியுள்ளது. பல கிராமங்களிலிருந்து லக்ஷக்கணக்கான விவசாயத் தொழிலாளிகள் ராணுவ சேவைசெய்யச் சென்றுவிட்டனர். அவர்கள் ஊர் திரும்பியதும் பழைய வேலைசெய்ய லாயக்குள்ளவர்களாக ஆவார்களா? இவ்வித எண்ணற்ற பிரச்சனைகள் எழுகின்றன.

சிந்திப்பாரில்லை. நமது நாட்டில் பொருளாதார நிலைமையும் வெகு சீர்கேடாகத்தானிருக்கும். நினைத்தாலே பயங்கரமாயிருக்கின்றது.

காலஞ்சென்ற மடாதிபதி

தருமபுர ஆதீன கர்த்தராகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பண்டார சன்னிதிகள் அகால மரணமடைந்ததைக் குறித்து மிகவும் வருந்துகிறோம்.

அவர் பீடத்துக்கு வந்து பதினோர் ஆண்டேயாகியும் மிகவும் போற்றத்தக்க சீர்திருத்தங்களைச் செய்ததுடன் இச் சைவ மடங்கள் காலத்திற்கேற்ப எந்தெந்தத் துறைகளில் ஈடுபட்டு மதப் பிரசாரம் தர்ம பரிபாலனம், பொதுநல சேவை செய்ய வேண்டுமோ, அவைகளைச்செய்து அழியாப் புகழை அடைந்துவிட்டார். கொடையில் அவருக்கு நிகரில்லை என்பதை எவரும் ஒப்புக்கொள்வார்கள். இத்தகைய பெரியாரைத் தமிழ்நாடு இழந்தது பெருந்துர்பாக்கியமாகும்.

இப் பீடத்துக்கு இப்பொழுது வந்துள்ள ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பண்டார சன்னிதிகள் அறிவிற் சிறந்தவர்கள்; ஆற்றலுடையவர்கள்; ஞானசம்பந்தம் என்ற பத்திரிகையின் ஆசிரியராகவிருந்தவர்கள். இவர்கள் காலத்தில் இவ்வாதீனம் புகழ் ஓங்கி, தமிழ் நாட்டிற்கே ''ஞான ஒளி''யாக விளங்குமென எதிர்பார்க்கிறோம்.

நாகரீக முன்னேற்றத்தில்
பெண்களின் அழகை சோபிக்க
அவரவர்கள் விருப்பத்திற்கேற்ற

6, 7, 8, 9, 10 கெஜங்களில் சொந்த தயாரிப்பில் நீடித்த உழைப்பிற்கு உத்தரவாதமுள்ள கல்யாண காலங்களுக்கு உயர்ந்த ரகங்களிலும் தினசரி உபயோகத்திற்கும், பட்டு & நூல் புடவைகளும், வேஷ்டி தினுசுகளும் கிடைக்குமிடம்

ராதா ஸில்க் எம்போரியம்

H. O. மயிலாப்பூர், மதராஸ்
போன் நெ. 8016

119, பெரிய தெரு,
கும்பகோணம்

குறிப்பு:— பூரா ஜரிகை கொடிவேலை செய்த ''கிங்காப்'' சேலை ஓர் ஸ்பெஷல் ரகம்.

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

ராமய்யா

நேற்று சாயந்திரம் வரையில் இந்த வியாசத்துக்குச் சரக்கே கிடைக்கவில்லை. நேற்று இரவு ஒரு நண்பர் வந்து சேர்ந்தார். அம்மாஞ்சியும் அவரும் நானும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது அம்மாஞ்சி அபூர்வமான குஷியிலிருந்தான். அவன் பேசியதெல்லாம் எழுத முடிந்தால் வெகு தமாஷாயிருக்கும். சாத்தியமான வரையில் எழுதுகிறேன்.

நண்பருடைய பெயர் சாமி என்று வைத்துக்கொள்ளுவோம். சாமியுடைய பெண்ணுக்குக் கலியாணம் செய்யத் தயார்செய்திருந்தார். அது சம்பந்தமாகப் பட்டணத்தில் பிள்ளைவீட்டுக்காரரிடம் கலந்து யோசனைகள் செய்துகொண்டிருக்கிறார். மேளக்காரர் யார், கச்சேரிக்கு யார், ஒரு மேளமா இரண்டு மேளமா, பாண்ட் வாத்தியம் வைப்பதா வேண்டாமா, கச்சேரி ஒன்றா இரண்டா, ஆண் கச்சேரி ஒன்று பெண் கச்சேரி ஒன்றாக வைப்பதா, அல்லது இரண்டும் ஆண் கச்சேரிகளாகவே வைத்துவிடுவதா, இப்படிப் பலவித யோசனைகள் சாமிக்கு ஏற்பட்டிருந்ததாகவும், அவைகளையெல்லாம் சம்பந்திப் பிராமணனிடம் கலந்து யோசனை செய்ததாகவும், அவருடைய வீட்டில் இந்த யோசனைகளுக்கு ஜவாபு அவருடைய பெண்களும், மருமகளும் அளித்துவிட்டதாகவும் நாங்கள் அறிந்தோம். கடைசியாக முடிவு வந்தபிறகு, ஏற்பாடுகளை அம்மாஞ்சியிடம் சொல்லிவிட்டுப் போகலாமென்று சாமி நேற்று வந்தார். வந்தவரை அம்மாஞ்சி வாய் திறக்க விடவில்லை. எல்லா யோசனைகளும் தற்கால கலியாண சம்பிரதாய முறைப்படி அம்மாஞ்சியே லிஸ்ட் போட்டுக் கொடுத்துவிட்டான். "எல்லாம் ஸ்டாண்டர்டைஸ் (Standardise) செய்தி வைத்திருக்கிறார்களே சாமி, உனக்கெதற்காக யோசனை? நீ ஏன் சிரமப்படவேண்டும். இதோ பார், எத்தனை ஜாப்தாக்கள் போட்டு வைத்திருக்கிறேன். முப்பதினாயிரம் ரூபாய் கலியாணம், இருபத்து ஐயாயிரம் ரூபாய் கலியாணம், இருபதினாயிரம் ரூபாய் கலியாணம், பதினைந்து ஆயிரம் ரூபாய் கலியாணம், பத்தாயிரம் ரூபாய் கலியாணம், அதற்கப்புறம், ராமானுஜகூடம் கலியாணம், திருச்சானூர் கலியாணம், என்றெல்லாம், ஜாப்தாக்கள் தயாராயிருக்கின்றன. ராமய்யாவைப் படித்துக்காட்டச் சொல்லு" என்றான் அம்மாஞ்சி!

எனக்குத் தூக்கிவாரிப் போட்டதே பாருங்கள்! இந்தமாதிரி விஷயங்களில் சர்ச்சைக்கே இடம் வைக்காமல் பேசும் அம்மாஞ்சி, உடம்பு வணங்கி உட்கார்ந்து ஜாப்தாக்கள் தயார்செய்து தன்னுடைய அபிப்பிராயத்தைக் கேட்பவர்களுக்கு உபகாரம் செய்யவா ஏற்பட்டுவிட்டான் என்று சந்தேகிக்கலானேன். பிறகுதான் தெரிந்தது அவனுடைய தாத்பரியம். சென்ற இரண்டு வருஷங்களாக நடந்த கலியாணங்களில் ஏற்பட்ட சம்பிரதாயங்களைச் சரிவரக் கவனித்துவைத்து, பொறுப்புடன் எழுதிவைத்து, நாகரிகத்தின் போக்கைக் கவனித்து வைத்திருக்கிறான் அம்மாஞ்சி. அதைப் படித்துப்பார்த்த எனக்கு எவ்வளவு வேடிக்கையாயிருந்தது தெரியுமா? ஜாப்தாக்களைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன் கவனியுங்கள்.

முப்பதினாயிரம் ரூபாய் கலியாணம்: ஜானுவாசம் — சாயந்திரம் $6\frac{1}{2}$ மணி—ஊர்வலம் உருவம் மாறாத மோட்டார்கார் — புஷ்பச் சிங்காரம்—நாகசுரம் திருவீழிமிழலை சகோதரர்கள் அல்லது வீருசாமிபிள்ளை—பாண்ட் இருக்கவேண்டும். அடுத்த நாள் முகூர்த்தம். அன்று சாயந்திரம் ம. ஷ. சுப்பலக்ஷ்மி அம்மாள் கச்சேரி. ராத்திரி ஊர்வலம்—ராஜரத்தினம்பிள்ளை நாகசுரம்-அதற்காகப் பிரத்தியேக பந்தோபஸ்துகள் வேண்டிவரும்—அங்கங்கு ரஸ்தாவில் நாற்காலிகள், பீடங்கள், பிளாட்பாரங்கள், பாய்கள் வேண்டியிருக்கும். போலீஸ் பந்தோபஸ்து தயாரிக்கவேண்டும் வாத்தியக்காரர்களுக்கு மோட்டார் லாரி ஏற்படுத்தவேண்டும். ஊர்வலத்துக்காக ஏற்பட்ட மோட்டார்கார்வண்டி மயில்மாதிரியோ, ஹம்ஸம்

மாதிரியோ புஷ்பத்தால் தயாரிக்கப்பட வேண்டும். மூன்ருவதுநாள் அரியக்குடி ராமானுஜய்யங்கார் கச்சேரி. வந்தவர்களுக்குச் சாப்பாடு. (வந்தவர்களெல்லாம் ரேஷன் அரிசியை முன்னதாகவே அனுப்பி வைத்திருப்பார்கள்). சங்கீதக் கச்சேரி நடக்குங்கால் வந்தவர்களுக்கெல்லாம் ஓய்வில்லாமல் சிகப்பு வர்ணமாகவோ அல்லது மஞ்சள் வர்ணமாகவோ "கிரஷ்" கொடுக்கவேண்டும். ஜீ. கே. வேல் கம்பனி ஆட்கள் காமிராவைத் தயாராக வைத்துக் கொண்டு, வந்தவர்களில் பிரபலமான ஸ்திரீ புருஷர்களைப் படம் பிடிக்க வேண்டும். வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் முதலியவை சாமானியருக்குக் காகிதப் பையிலும், மற்றவர்களுக்கு நூக்கமரத் தட்டுக்களிலும் கொடுக்கவேண்டும். இது தான் முதல்தரமான கலியாணம்.

இருபத்து ஐயாயிரம் ரூபாய் கலியாணம்: நாகசுரம் ஒன்றுதான், அதாவது வீருசாமி பிள்ளையோ அல்லது திருவீழிமழலை சகோதரர்களோ. கச்சேரி ஒன்றுதான் அதாவது ம. ஷ. சுப்பலக்ஷ்மி அம்மாள். மற்றப்படி ஏற்பாடுகள் மேற்கூறியபடி. வெற்றிலை பாக்கு காகிதப் பையில்தான்.

இருபதினுயிரம் ரூபாய் கலியாணம்: மதராஸ் நாகசுரம, மதராஸ் பாண்டு. கச்சேரிக்கு அரியக்குடி, அல்லது செம்மங்குடி அல்லது ஜீ. என். பி. ... ஜீ. கே. வேல் புகைப்பட ஏற்பாடு அனுவசியம். கச்சேரி கேட்க வருகிறவர்கள் புகைப்படத்துக்கு லாயக்கானவர்களாகவிருக்கமாட்டார்கள். கிரஷ் கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படாது. இந்த மூன்று வகைக் கலியாணங்களுக்கும் சமையல் அப்பாசாமி அய்யர் கோஷ்டியார் வேண்டிவரும்.

பதினையாயிரம் ரூபாய் கலியாணம்: நாகசுரம் மாத்திரம் உண்டு. கச்சேரி இண்டர்வது ரகம் ஆட்கள். ஜானுவாசம் ஊர்வலம் இரண்டுக்கும்கூட்டம்சேர்ப்பிக்கவேண்டும்.

பத்தாயிரம் ரூபாய் கலியாணம்: ஜானுவாசம் ஊர்வலத்துக்குச் சொந்த மனுஷாள் மாத்திரம். சாப்பாட்டுக்கு ரேஷன் அரிசி முன்னதாகவே அனுப்பிவிடவேண்டிய அவசியம் இராது. கச்சேரிக்கு மூன்ருவது ரகம் பாடகர்கள் போதும். கேட்பதற்கு ஆட்கள் சேமிக்கவேண்டிவரும்—கச்சேரி அந்தியில் குழந்தைகள் கூட்டம் மாத்திரம் காணப்படும்.

மேற்கூறிய முதல் இரண்டாவது ரகக் கலியாணங்களுக்குப் போலீஸ் சார்ஜண்ட் சகிதமாக டாணுகாரர் ஏராளமாக வேண்டியிருக்கும். மோட்டார் வண்டிகள் விட்டு வைக்க அக்கம்பக்கத்தில் உள்ள காலிமனைகளைத் தயார்செய்ய வேண்டும். மின்சார சம்பந்தமாகச் சிப்பந்திகள் இருபதுபேர் தயாராக இருக்கவேண்டும். ஒரு லாரி, நான்கு டாக்ஸி, பத்து மோடார் வண்டிகள் வசதியாக வைத்துக்கொள்வது நலம்-முதல் ரகத்துக்கு நாற்காலிகள் ஆயிரம், இரண்டாவது ரகத்துக்கு நாற்காலிகள் எழுநூற்றைம்பது, மூன்ருவது ரகத்துக்கு ஐந்நூறு, நான்காவது ரகத்துக்கு இருநூறு, ஐந்தாவது ரகத்துக்கு நூறு, இதுதான் கணக்கு. முதல் ரகத்தில் பில்லைபோட்ட சேவகர்கள் கொந்தளிப்பார்கள்; இரண்டாவதில் பத்துப் பதினைந்துபேர் இருப்பார்கள்; மூன்ருவதில் இரண்டுபேர்களிருக்கலாம்; நான்காவது ஐந்தாவது ரகத்தில் முனிசிபாலிடி பில்லைச் சேவகன் மாத்திரம் இனுமுக்குக் காத்துக் கொண்டிருப்பான்.

இந்த வர்ணனை எல்லாம் படித்தபிறகு நமக்குக் கலியாண விமரிசைகள் எவ்வளவு தூரம் Standardise ஆய்விட்டது, அதாவது நிர்த்தாரணமாகிவிட்டது என்று பார்த்தீர்

நரையை ஒழியுங்கள்!

நரை எவ்வளவு முதிர்ந்ததாக இருந்தாலும் கேசத்திற்கு முன்போல் நிரந்தரமாகக் கருமை அளிப்பதில் **விவலேன் ஹேர் ஆயில்** நிகரற்றது. சென்ற 10 வருஷங்களாகப் பிராபல்யத்துடன் இருந்து வருகிறது. பெரிய பாட்டில் ரூ. 3/4- சிறிய பாட்டில் ரூ. 2/- முழு சிகிச்சைக்குத் தேவையான 3 பாட்டில்கள் வாங்கினுல் தபால் செலவு இனும்.

ஏஜண்டுகள்: **அப்பா & கோ.,**
கெமிஸ்ட்ஸ், எஸ்ப்ளனேட், மதராஸ்.

பிறவிக் குருட்டைத் தவிர

கேடரைன்

மற்றெல்லாக் கண் உபாதைகளையும் மாயமாக நிவர்த்திக்க வல்லது. கண்ணுடி போடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். கேடரைன் உபயோகித்து மீண்டும் யதாப் பிரகாரம் கண் பார்வையைப் பெறுங்கள், கண் படலத்திற்கு (Cataract) உத்தரவாதத்துடன் கூடிய நிர்ப்பயமான சிகிச்சை. ரூ. 2/-

ஏஜண்ட்ஸ்: **அப்பா & கோ.,** கெமிஸ்ட்ஸ்,
286, சைனு பஜார் ரோட், மதராஸ்,

களா? "என்ன ஸார், கலியாணம் என்ன, பெரிய கலியாணமா, சிறிய கலியாணமா," என்று கேட்கவே வேண்டாம் இனிமேல். கலியாணத்தில் கச்சேரி யார், என்று கேட்டால் போதும்! ம. ஷ. சுப்பலக்ஷ்மி அம்மாள் என்று சொன்னவுடன், ஓஹோ! இது முதல் வகுப்பு. அய்யர்வாளுக்கு முப்பதாயிரம் அல்லது இருபத்து ஐந்தாயிரம் பழுத்தது என்று சொல்லிவிடலாம். அதுமாதிரி தான் எமது நண்பர் சாமியின் சங்கதி வெளிப்பட்டது. முதல் வகுப்புக்குச் சிறிது தாக்கலாகவே சாமி அய்யர் பெண் கலியாணம் நடக்கப்போவதாக நான் தீர்மானித்துக்கொண்டேன். ஏனென்றால் மாப்பிள்ளை பையனுடைய தமக்கை ம. ஷ. கச்சேரி வேண்டும் என்றதும், அவனுடைய மதனி வஸந்த கோகிலம் இருக்கட்டுமே என்றாளாம்; அவன் தம்பி, அரியக்குடி வேண்டாமா எனவும், அவனுடைய அத்திம்பேர் ஜீ. என். பீ. இல்லாமலா என்றாராம்; சாமி அய்யர் ஊர்வலத்துக்கு இரண்டு ஜதை நாகசுரத்துக்கு முன்னதாக அச்சாரம் கொடுத்துவிட்டார்; பிறகு கேட்பானேன்? பாங்கியில் செக்கு வெட்டவேண்டியது தான்!

இந்தச் சமயத்தில் முப்பது வருஷத்துக்கு முன் கேட்ட ஒரு சம்பந்திப்பாட்டு ஞாபகத்துக்கு வருகிறது. எழுதுகிறேன் படியுங்கள்:—

"ஜானுவாசம் அழைக்கும்போது
ஜம்பத்துடன் காணணும்
பிள்ளையுடைய கையிலொரு வைரமோதிரம்
மின்னணும்
அன்றைக்குள்ள செலவுக்கெல்லாம் அம்பது
பவுன் கொடுக்கணும்
தாலி முடியும் தங்கைக்கு தங்கத்தோடா
போடணும்
ஆறும் மாசம் தீபாவளிக்கு அரணுள்
பண்ணிபோடணும்
அப்போதுள்ள செலவுக்கெல்லாம் அம்பது
பவுன் கொடுக்கணும்"

இப்படிப்பட்ட சம்பந்தி பாட்டுக்கள் இப்பொழுது இல்லாமல் போனதற்குக் காரணம், செலவுகளும் கட்டணங்களும் வேறு விதமாக ஏற்பட்டுவிட்டபடியால் என்று தெரிகிறது. சுமார் இருபது வருஷங்களுக்குமுன் கலியாணம் என்றால், மளிகைக் கடைக்காரன், பந்தல்காரன், புஷ்பக்காரன், சமையல்காரன், மேளக்காரன் இவர்களைத் தயார்செய்துகொண்டால், கலியாணம் விமரிசையாய் நடந்துவிடும். இப்பொழுதோ, மளிகைக் சாமான்களுக்கு நூற்றுக்கணக்கான ஆட்களைப் பிடித்துச் சலாம்போடவேண்டும்; பந்தல் கொட்டகை அலங்காரத்துக்கு அசாத்திய சிபாரிசு இருந்தாலொழிய நடவாது; ஏராளமான பணத்தைச் செலவழித்தாலும் கட்டுப்பாடாக உபகாரம் செய்வதற்கு ஆட்கள் சேர்ந்தாலொழிய, அழைப்புப் பத்திரத்தை மரியாதை செய்துவந்த அதிதிகளுக்குக் கௌரவமில்லாமல் போய்விடுகிறது; பெரிய சங்கீதக் கச்சேரியும், நாகசுரக் கச்சேரியும் சேர்ந்துவிட்டால் வேறு வினையேவேண்டாம். இவ்வளவு பணத்தைச் செலவுசெய்து இவ்வளவு பெரிய காரியத்தை எதற்காக ஏற்றுக்கொண்டோம் என்று தோன்றிவிடும்! சந்தர்ப்பமோ கலியாணம். வந்தவர்கள் ஒருவரிடமும் அவமரியாதையாகப் பேசலாகாது. அழைப்புப் பத்திரம் இல்லாமல் வந்திருப்பவர் பலர் இருக்கலாம். அவர்களை வெளியேற்ற முடியுமா? உயர்ந்த நாகசுரக்காரர் வந்தால் ஊர்வலத்தில் உற்சாகம் மேற்கொள்ளும்! ஆனால் கூட்டமும் அபரிமிதமாக அதிகரிக்குமே! இதற்கென்ன செய்வது?

சுமார் முப்பது வருஷங்களுக்குமுன் சம்பிரதாயம் எப்படியென்றால், ஒரு பெரிய மனுஷர் வீட்டுக் கலியாணத்தில் ஒரு வித்வான் கச்சேரி செய்தால் அந்தக் கௌரவம் கலியாணத்தின் மூலமாக வித்வானுக்கு ஏற்படுமாம். ஜட்ஜ் மணி அய்யர் வீட்டுக் கலியாணத்தில் பிடில் வாசித்துவிட்டு வந்தபிறகு திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் தமக்குக்கௌரவமாக அதைச் சொல்லிக்கொள்ளுவார். ஜட்ஜ் பாஷியம் அய்யங்கார் வீட்டில் பூச்சி அய்யங்கார் கச்சேரி செய்தால், அந்தச் சந்தர்ப்பம் தமக்கு வாய்த்தது என்று ஒரு பெருமையாகப் பூச்சி அய்யங்கார்சொல்லிக் கொள்ளுவார். இப்பொழுது அப்படியல்ல. கச்சேரி செய்தவருடைய கியாதியைப் பொறுத்து, கல்யாணம் சிறியதாகும் அல்லது பெரியதாகும். சரியான புள்ளிகளாக மாத்திரம் கச்சேரியும், நாகசுரமும் வைத்துவிட்டால், மோட்டார்காருக்கும் கூட்டத்துக்கும் குறைவேயில்லை. அந்தக் கலியாணம் பெரிய வைபவத்தில் ஒன்றாகிவிடும். இதுதான் ரகசியம்! கலியாணம் செய்தவர் பரம்பரைப் பிரபுவாக இருக்கலாம், அல்லது பெரிய உத்தியோகஸ்தராயிருக்கலாம், அல்லது ஒரு பிரபலமான வம்சத்தைச் சேர்ந்தவராய் இருக்கலாம். ஆயினும் இரண்டாவது ரகம் மூன்றாவது

ரகம் வித்வான்களில் ஒருவரைக் கச்சேரி செய்ய வைத்துவிட்டாரோ, அவர் செய்த கலியாணம் சின்ன கலியாணம் ஆகிவிடும்! இது இப்படியிருக்க, புத்திசாலிகளான புதுப் பணக்காரர் இரண்டு மூன்று ஆயிரங்களை வீசி, முதல்ரகக் கச்சேரிகளாக வைத்து, கொட்டகையை நிரப்பி, அக்கம் பக்கத்தில் அரை மைல் தூரத்துக்கு மோட்டார்கார்மயமாகச்சேர்த்துவிட்டால், புதுப் பணக்காரர் ஒரே ராத்திரியில் பெரிய மனுஷராகிவிடுகிறார். ஆதலால் சங்கீத வித்வான்களுடைய சௌகரியத்தை யொட்டி முகூர்த்தங்களை முன்னும் பின்னுமாக வைத்துக்கொள்ளுவார்கள்போலிருக்கிறது. முன் காலத்தில் "வித்வான்களை ஆதரித்த பிரபுக்கள்" என்றோம், இப்பொழுது "பிரபுக்களை ஆதரித்த வித்வான்கள்" எனலாம் போலும்! ரொம்ப சரி என்கிறான் அம்மாஞ்சி!

இரண்டொரு தினங்களுக்குமுன் 'ஹிந்து' பேபரில் ஏதோ ஒரு இசைத்தட்டைக் குறித்து ஒரு பிரசாரம் இருந்தது. ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தியடிகளைக் குறித்துப் பாடிய பாட்டை இசைத் தட்டில் எடுத்திருக்கிறார்கள். அந்தப் பிரசாரத்தில் ஸ்ரீமதி கஸ்தூரிபாயுடைய படமும், டி. கே. பட்டம்மாளுடைய படமும் அச்சிட்டிருக்கிறதைக் கவனியுங்கள். அம்மாஞ்சி நேற்றைய தினம் இதைக் கவனித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது அடுத்தாற்போல் வேலை செய்துகொண்டிருந்த தச்சன் ஒருவன் "இது யார், சாமி, இந்தக் கிழ அம்மா; அவங்கதான் டி. கே. பட்டம்மா தெரியுது! இந்தக் கிழ அம்மா யாருங்க?" என்றான். அதற்கு அம்மாஞ்சி "இது தெரியாதா, உனக்கு மஹாத்மா காந்திஜி சம்சாரம், கஸ்தூரிபாய் அம்மா" என்றான். தச்சன் "அந்தம்மா படம் ஏன் பட்டம்மா பக்கத்திலே போட்டிருக்குது" எனவே, அம்மாஞ்சி "பட்டம்மா பாடியிருக்காங்களாம் ஒரு பாட்டு கஸ்தூரிபாயைக் குறித்து; அதைக் கிராமபோன் பிளேட்டில் பிடித்திருக்காங்களாம்; அதற்காக இரண்டுபேர் படத்தையும் போட்டிருக்காங்க" என்றான். உடனே தச்சன், "அப்படீங்களா? ரொம்ப சரி. போடவேண்டியதுதான். இல்லாகிட்டி போனா நமக்கு என்ன தெரியும் கஸ்தூரிபாய் போட்டோ மாத்திரம் போட்டாக்க. ஏதோ பட்டம்மா பாடியிருக்காங்கன்னுக்கே, பெரிய மனுஷியாத்தான் இருப்பாங்கன்னு நாம்ப நம்பணும். சாமன்யமா உங்களைப் பத்தியும் என்னைப்பத்தியும் பட்டம்மா, சுந்தராம்பா, சுப்பலக்ஷ்மி இவங்கள்ளாம் பாடிடுவாங்களா" என்று போடுபோட்டான்.

ஸ்ரீமதிகஸ்தூரிபாய்காந்தியடிகளைப்பற்றி பாடியது டி. கே. பட்டம்மாளுக்குக் கௌரவமா அல்லது கஸ்தூரிபாய்க்குக் கௌரவமா என்று இந்தப் பிரசாரப் படத்தைப் பார்த்தபின் சந்தேகம் ஏற்படுகிறது. "கஸ்தூரிபாயைப்பற்றிப் பாடினாலும் பாடட்டும், பட்டம்மாள் பாடியதல்லவா என்று சிலர் இந்த இசைத்தட்டை வாங்குவார்கள்; பட்டம்மாள் பாடினாலென்ன யார் பாடினாலென்ன, கஸ்தூரிபாயைப்பற்றியல்லவா என்று மற்றும் சிலர் இசைத்தட்டை வாங்குவார்கள்; ஆகக்கூடி இசைத்தட்டுச்செலவாகும்" என்கிறான் அம்மாஞ்சி.

இந்த மாதம் பட்டணத்தில் இன்னொரு சங்கீத சபை ஸ்தாபனமாகிறது. அதாவது புரசைப்பாக்கத்தில். எமக்கினி நமபய மேது, என்பதுபோல், சங்கீதப் பெருக்குக்கு என்ன குறைவு? ஒரே பெருமனாகப் பெருத்துக்கொண்டேபோய், படால் என்று ரப்பர் பெலூன் மாதிரி வெடித்துவிடுமோ என்கிறான் அம்மாஞ்சி.

மதுரைக் காலேஜ் அபிவிருத்தி சங்கத்தினர் ஒருபாட்டுக்கச்சேரிக்கு 250 ரூபாய் ஒரு டிக்கட்டுக்குக்கட்டணம் வைத்திருக்கிறார்களாம். முதல் வகுப்பு டிக்கட்டு ரூபாய் 250. இது என்ன ஒன்றும் நன்றாக இல்லையே, என்கிறான் அம்மாஞ்சி. "250 ரூபாய் கொடுத்து ஒரு டிக்கட் வாங்கி அதை அதிஜாக்கிரதையாக இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டிவைத்து, கச்சேரியன்று எடுத்து உள் பாக்கட்டில் போட்டுக்கொண்டு, கச்சேரிக்குச்சென்று, நான்கு மணி நேரம் சிரமப்பட்டுக் கேட்டுவிட்டு வருவது கொடுத்தவர்களுக்கு விசாரம். காலேஜ் அதிகாரிகள் தங்களுடைய பிரயத்தனத்தால் பெரிய தொகை வசூலாயிற்று என்று நினைத்துக்கொள்வது ஒரு பக்கம்; கச்சேரி செய்பவர் தம்முடைய சங்கீதத்துக்காக இவ்வளவு பெரிய தொகை வசூலாயிற்று என்று நினைத்துக்கொள்வது மற்றொரு பக்கம்; இந்த வைபவத்தைப் பிரசாரப்படுத்தும் பத்திரிகை நிருபர், கச்சேரி செய்தவருக்கு முழு கௌரவத்தையும் கொடுப்பதா, அல்லது சிரமப்பட்டு வீடுவீடாகத்திரிந்து டிக்கட்டுகள் விற்று வசூல் செய்தவர்களுக்கு நன்மொழி கூறுவதா என்று திக்குமுக்கலாடிக்கொண்டிருப்பது இன்னுமொரு பக்கம்; இப்படி எல்லாம் தர்ம சங்கடங்கள் ஏற்படுத்துவது நன்றாயில்லையே" என்கிறான் அம்மாஞ்சி. உங்கள் அபிப்பிராயம் என்னவோ?

உணவு

தி. சே. சௌ. ராஜன்

"சுக வாழ்விற்கு ஏற்ற உணவு எது" என்பதைப்பற்றிச் சமீப காலத்தில் பல பிரச்னைகள் கிளம்பி யிருக்கின்றன. ஆராய்ச்சிச் சாலையும், உணவு நிபுணர்களும் ஏற்பட்டுவிட்டார்கள். எலிகளைப் பலவித உணவுகள் கொடுத்துப் பரீக்ஷைகள் செய்து பார்த்து, அதனின்று சில உண்மைகளைக் கண்டு, மனிதர்களுக்கான திட்டங்கள் வகுத்து அறிக்கைவெளியிட்டு வருகிறார்கள். இம்முயற்சி மிகவும் முக்யமானது. ஆனால் இந்தத் திட்டப்பிரகாரம் உணவு சேகரித்து, தயாரித்து உண்பதற்கு நமது நாட்டில் பெரும்பான்மையானவர்களுக்குச் சக்தி கிடையாது. தேவையான பொருள் கிடையாது; அரைப் பட்டினி கிடக்கும் மக்களுக்குப் பாலும், மோரும், பச்சைக் காய்கறியும், பழவர்க்கங்களும் எங்கிருந்து கிடைக்கும்? நமது வாழ்க்கைத் தரம் மாற்றி அமைக்கப்பட்டாலன்றி உணவுப் பட்டியல்கள் எவ்வளவு கணக்காகத் தயாரிக்கப்பட்டாலும், ஏழை மக்களுக்குப் பயன்படப் போவதில்லை.

உணவில்லாமல் உயிரில்லை. சித்தர்களும், யோகிகளும் உணவில்லாமல் வெகு நாட்களாக ஜீவித்திருப்பதாய் நமது நாட்டில் சொல்லிக்கொள்ளுகிறார்கள். சில நாட்கள் உணவில்லாமல், தண்ணீரை மட்டிலும் குடித்துக்கொண்டு, உயிர்வாழ முடியும். சில காலத்திற்கு முன்பு மேல் நாட்டு உணவு ஆராய்ச்சி நிபுணர்கள், மனிதன் இரண்டு வாரங்களுக்குமேல் உணவில்லாமல் உயிர்வாழ முடியாதென அபிப்பிராயம் கொண்டிருந்தார்கள். ஆனால் சிறையில் சத்யாக்கிரகம் செய்தவர்கள் பட்டினி கிடந்து மூன்றுமாத காலம் உயிர் வாழ்ந்திருப்பதைக் கண்டவுடன் அந்த எண்ணம் மாறிவிட்டது. ஆனால் பெரும்பான்மையானவர்கள் சித்தர்களுமல்ல, சத்யாக்கிரகிகளுமல்ல; அன்றாடம் உணவு உண்டு உயிர்வாழும் மனிதர்கள்; உண்ணாவிரதம் பிடிப்பவர்களல்ல. ஆகையால் உயிர்வாழ்வதற்கு உணவு அவசியம் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டும்.

தாயின் வயிற்றில் வளர்ந்துவரும் சிசுவிற்குக்கூட உணவு தேவை. தாயின் ரத்தம் சிசுவின் தொப்புள் கொடி வழியாக வந்து அதற்கு உணவு அளிக்கிறது. சிசு பிறந்தவுடன் தாயின் பாலைக்குடித்து உயிரைக் காப்பாற்றிக்கொள்ளுகிறது. அதன் வயதிற்கும் திறனுக்கும் ஏற்றபடி தாயின்பால் ருசியாகவும், தண்ணீர் அதிகம் கொண்டும், கொழுப்புச் சத்து மிகக் குறைந்தும் இருக்கிறது. குழந்தை வளர வளர, அதன் தேவைக்கும், வளர்ச்சிக்கும் தகுந்தவாறு தாய்ப்பாலின் குணமும் மாறிக்கொண்டே வருகிறது. ஆகையால் தாயின் பாலைக் காட்டிலும் சிறந்த உணவு குழந்தைகளுக்கு வேறு எதுவும் கிடையாது. தாய் பால் கொடுத்து வளர்க்கப்படும் குழந்தை வயதிற்குத் தகுந்த வளர்ச்சியும், மேனியும் பெற்று, சுறு சுறுப்பாகவும், அடிக்கடி அழுது அவதிப்படாமலும் சிரித்த முகத்துடனிருக்கிறது. பிறக்கும் ஒவ்வொரு ஜீவனும், உயிர்வாழ்வதற்கான சாதனங்களும் உலகில் ஏற்பட்டிருக்கின்றன. ஒருகாலத்தில் மனிதனும், மிருக பக்ஷிஜாதிகளைப்போலவே இயற்கையாகக் கிடைத்த உணவை உண்டு உயிர்வாழ்ந்திருந்ததாக நாம் படித்திருக்கிறோம். நாளடைவில், உணவைச் சேகரிப்பதும், பக்குவப்படுத்துவதும், மற்ற மிருகங்களிடத்து உண்டாகும் அதிகப்படி உணவை நமக்கு உபயோகப்படும் முறையில் தயாரிக்கவும் நாம் அறிந்துகொண்டிருக்கிறோம்.

உயிர் இருப்பதற்கு அடையாளம் உடலின் சூடு. இறந்தவுடன் உடல் குளிர்ந்து விடுவது எல்லோருக்கும் நன்கு தெரிந்திருக்கிறது. உயிர் வாழ்வதற்குத் தேவையான அனல் அல்லது சூடு உணவிலிருந்து வருகிறது. ஒரு நாளொன்றுக்கு, ஒவ்

வொரு மனிதனுக்கும் இவ்வளவு கனலி (அனல், சூடு) (Calorie) உள்ள உணவு தேவை என்பதைக் கணக்கெடுத்து அதற்குத் தகுந்தபடி உணவுப்பட்டியலைத் தயாரித்திருக்கிறார்கள். கனலி என்பது ஓர் அளவுகுறி. ஒரு கிராம் (gramme) அல்லது ஒரு சிரெடை சுத்தத்தண்ணீரை ஒரு பாகை (Degree) உயர்த்துவதற்குச் செலவாகும் உஷ்ணத்திற்கு கனலி (Calorie) என்று பெயர். உடலின் எடைக்கும், தினசரி உழைப்பிற்கும் தகுந்தபடி உணவின் அளவு கனலிக் கணக்கில் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்தக்கணக்கின் பிரகாரம் ஒரு நாளொன்றுக்குச் சுமார் நூற்றைம்பது பவுண்டு எடையுள்ள ஒருவனுக்கு 2800 கனலிகள் அடங்கியுள்ள உணவுவேண்டும். உணவுப் பதார்த்தங்கள் ஒவ்வொன்றும் இவ்வளவு கனலிகள் கொண்டுள்ளதெனக் கணக்கெடுத்து, அவைகளில் எவ்வளவு சாப்பிடவேண்டுமென்கிற அளவு திட்டமிடப்பட்டிருக்கிறது. இதுதான் நவீன உணவுச் சாத்திர கணிதம். கணக்கு மிகவும் சரியானதுதான். மனிதனை ஓர் இயந்திரமாக நினைத்து அதற்குத் தேவையான அளவு உஷ்ணம் உண்டாக்கக்கூடிய உணவை வகுத்திருப்பது நியாயம். ஆனால் மனிதன் கேவலம் இயந்திரமட்டுமல்ல. உயிரோடு உணர்ச்சியும் பெற்றிருக்கிறான். ஜீவராசிகளுள் பெருத்த மூளை பெற்றவன். மூளைச் சத்தியால் மற்ற ஜீவன்களை அடக்கி ஆளவும், தனது வாழ்வை உயர்தர முறையில் நடத்தவும், மனத்தின் பாகுபாட்டினால் தீமையை விலக்கி, நன்மையைக் கடைப்பிடித்து அழியாத சுகத்தைப் பெறவும் முயல்கிறான். பசி உணவின் தேவைக்கு அறிகுறி. ஆனாலும் மனிதனுக்கு ருசி என்பது உணவில் முக்கியமான அம்சம். பழக்கத்தினால் ருசி ஏற்பட்டு உணவையும் அதற்குத் தகுந்தவாறு பக்குவப் படுத்தி உண்பதினால் பசி தணிவதோடுகூட மகிழ்ச்சியும் உண்டாகிறது. உணவில் மகிழ்ச்சி ஆரோக்கியத்திற்கு அவசியம். ஆகையால் கணக்குப்படி தயாரித்த உணவுமட்டும் மனிதனுக்குப் போதாது. மகிழ்ச்சி உண்டாக்கக்கூடிய உணவாகவும் இருக்க வேண்டும். உணவுஆராய்ச்சி நிபுணர்கள் தயாரிக்கும் பட்டியலும் கணக்கும் சரியாக இருக்கின்றன. ஆனால் ருசியும் மகிழ்ச்சியும் தரும் அம்சங்கள் நன்கு கவனிக்கப்படவில்லை. அதை மனிதர்களின் பழக்கவழக்கங்களுக்கு ஒத்திருக்கும்படி நாம் தயாரிக்கவேண்டும். தேவையான கனலிகள் அடிப்படையாக வைத்துக்கொண்டு கிடைக்கக் கூடிய பொருள்களைக்கொண்டும், ஏழைமக்களும் சமாளிக்கக் கூடிய ஒரு திட்டம் வகுக்கவேண்டும்.

தமிழ் நாட்டில் முக்கிய உணவுத் தானியம் நெல். அதற்குப்பிறகு கேழ்வரகு அல்லது கேப்பை, சோளம், கம்பு, தினை இவைகள். நெல்லைக் குற்றி, தோலைப் போக்கி, அரிசியாக்கிச் சாப்பிடுகிறோம். கைக்குற்றல்அரிசி தேகத்திற்குச் சுகத்தை கொடுக்கும். அரிசியைப் பளபளப்பாகத் திட்டக்கூடாது. அப்படிச் செய்வதால் அதிலுள்ள உயிர்ச்சத்து போய்விடுகிறது. திருச்சி ஜில்லாவில் தஞ்சாவூர் ஜில்லாவைப்போலக் கிராமங்களில் நெல் அரைக்கும் மில்கள் அதிகம் கிடையாது. ஆகையால் இந்த ஜில்லாவில் கிராமங்களில் நெல்லைக் கையால் குற்றும் பழக்கம் அடியோடு மறைந்து விடவில்லை. பச்சை அரிசி சாப்பிடுபவர்கள் கையினால் குற்றின, தீட்டாத அரிசியைச் சமைத்து உண்ணவேண்டும். சமீபத்தில் மில்களில் அரைக்கும் அரிசியைப் பளபளப்பாக்கக் கூடாதெனச் சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறார்கள். இருந்தபோதிலும் இன்னும் மில் முதலாளிகள் இந்த உத்தரவின் தத்துவத்தை அறிந்ததாகத் தெரியவில்லை. பச்சை அரிசியைக் காட்டிலும் புழுங்கல் அரிசி உணவிற்கு மேலானது. இதை மில்லில் அரைத்தாலும்கூட அதன் உயிர்ச்சத்து அதிகம் குறைவதில்லை. நல்லவேளையாக நமது நாட்டில் ஏழைகளில் பெரும்பாலோர் புழுங்கல் அரிசிச்சோறு உண்பதால், சுகக்கேடு அதிகம் உண்டாகாமலிருக்கிறார்கள். மேலும் புழுங்கல் அரிசிச்சோறு மிகுதியைத் தண்ணீரில் ஊறவைத்து, பழைய சோறாக உண்பதற்குப் பக்குவமாகவிருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் அநேகமாய் எல்லோரும் புழுங்கல் அரிசியையே உபயோகிக்கிறார்கள்

உழைப்பாளிகளுக்குச் சிறந்த உணவு கேப்பை, சோளம், கம்பு, தினை இவைகள். நெல்லை அரிசியாக்கினால் சரிபாதிக்குமேல்

குறைந்துவிடுகிறது. ஆனால் கேப்பை, சோளம், கம்பு வகையரா சுத்தப்படுத்துவதில் சிறிதளவே குறைகின்றன. மேலும், இவைகளில் அரிசியைக் காட்டிலும் பிசிதச் சத்து அதிகம். ஆனால் ஜெரிப்பது கடினம். பசியைத் தணித்து, உழைப்பதற்கு வேண்டிய சக்தியையும் கொடுப்பதால் கிராமாந்தரங்களில், உழைக்கும் ஏழைகளுக்கு ஏற்ற உணவு கம்பு, சோளம், கேப்பை, தினை முதலிய தான்யங்கள். இவற்றை ஏழைமக்கள், உணவாகக் கொண்டிருப்பதால், இந்த உணவிற்கும் நடைமுறையில் ஒரு கேவலம் உண்டாகி விட்டது. "களிபொத்தன், கேப்பை முண்டன்" என்று இகழ்ந்து பேசவும், அதை ஒரு வசைச்சொல்லாகவும் எண்ணும் நிலைமைக்கு நாம் வந்து விட்டோம், தமிழ் நாட்டு ஹரிஜன சேவா சங்கத்தின் ஆதரவில் நடக்கும் ஒரு மாணவர் விடுதிக்கு உணவுப் பட்டியல் தயாரிக்க முற்பட்ட பொழுது, காலையில் முளைக் கட்டின கேப்பைமாவு கஞ்சியுடன் பாலும் சர்க்கரையும் சேர்த்துக் காப்பிக்குப் பதிலாகச் சாப்பிட ஏற்பாடு செய்தோம். இந்த மாறுதலைக் கேட்டவுடன் விடுதியிலுள்ள மாணவர்கள் எல்லோரும் சண்டைக்கு வந்து விட்டார்கள். "நாங்கள் ஹரிஜனங்கள் என்பதற்காகத்தானே எங்களுக்குக் கஞ்சி ஏற்பாடு செய்கிறீர்கள். உங்களுக்கெல்லாம் காப்பி, எங்களுக்குக் கேப்பைக் கஞ்சியா?" என்று சொல்லி, கஞ்சி குடிக்க மறுத்துவிட்டார்கள். இந்த மனோபாவத்திற்கு நம்மவர்கள்தான் காரணம். "ஏழைகள் கஞ்சிதான் குடிக்க வேண்டும். சற்றே வசதி வாய்ந்தவர்கள் காப்பிதான் சாப்பிடவேண்டும். உயர்தர வாழ்க்கைக்கு இது அறிகுறி; தாங்கள் காப்பி சாப்பிடுவதும், விருந்தினருக்குக் காப்பி வழங்குவதும், அதைப்பற்றித் தாங்கள் பெருமையாக நினைத்துக் கொள்வதும், பிறரும் தங்களை அப்படியே மதிக்க வேண்டுமென நினைப்பதும் நமது கொள்கையாக இருப்பதுதான் இவர்கள் இப்படி நினைப்பதற்குக் காரணம். நன்மை செய்யப் புகுந்து கெட்ட பெயர் வாங்க வேண்டாமென அவர் கேட்ட காப்பியையே அவர்களுக்கு வழங்கி அவர்களைப் பெரிய மனிதர்களாகவே இருக்கும்படி விட்டு விட்டோம். இந்த எண்ணம் கலைவதற்குச் சமூகத்தில் பெரும்பான்மையோர் கேப்பை, சோளம், கம்பு முதலிய தான்யங்களைக் கொண்டு பக்குவப்படுத்தி, கஞ்சி தயாரித்துக் காப்பிக்குப்பதிலாகச் சாப்பிடும் பழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும்.

தமிழ் நாட்டினருக்கு ஓர் உணவுப்பட்டியல் வேண்டும். ஆராய்ச்சியாளர்கள் ஒரு குறிப்பு வெளிப்படுத்தி இருக்கிறார்கள். அதன் கணக்கும், விவரமும் முறைப்படியிருக்கின்றன. ஆனால் நமது ஏழைகளுக்குச் சுலபமாகக் கிடைக்கக்கூடிய பொருள்களினின்று ஒரு பட்டியல் தயாரிக்க வேண்டும். இதில் உடற்கூறு அமைப்பின்படி சில இயற்கைச் சாதனங்கள் இருப்பதை நாம் மறந்துவிடக்கூடாது. பிசிதம். மாக்கூர், கொழுப்பு மூன்றும் நமது உணவில் கணக்குப்படி சேரவேண்டும். அப்படிக் கணக்காகச் சேர்க்க முடியாமல் வயிறு நிரம்புவதற்கு ஒருவகை உணவே உட்கொள்ள வேண்டிய அவசியம் நேரிடும். எந்தத் தான்யம் பயிரிடுகிறானோ அதுதான் குடியானவனுக்கு அதிகமாகக்

கண்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்

ஜாய் கெமிகல் ஒர்க்ஸ் தயாரிக்கும்

ஜாரிட்

காடராக்ட் என்னும் கொடிய நோயை அகற்றி, கண் பார்வையை அதிகரிக்கச்செய்கிறது. மிகவும் பிரசித்தமானது. காடராக்ட் ஆரம்பத்திலேயே இதை உபயோகித்தால் அதிக பலன் தரும். ஒபாஸிடி கார்னியா குளுகோமாவினால் கண் பார்வையின்மை கண் நரம்புகள் கெட்டுப்போனதினால் ஏற்படும் வியாதிகள், எல்லாக் கண் உபாதிகளுக்கும் கைகண்ட ஔஷதம்.

காடராக்ட் ஆபரேஷனுக்குப் பிறகும் உபயோகிக்கலாம். பார்வையைத் தெளிவுபடுத்தும். நீண்டு தொடர்ச்சியாக உபயோகித்தால் கண்ணாடி போடவேண்டிய நிர்ப்பந்தம் தீரும்.

2 டிராம் ... ரூ. 1—4—0
4 டிராம் ... ,, 2—0—0

ஒரு ஜர்மன் தொழிற்சாலையில் வேலை செய்த அனுபவத்தினால் ஹோமியோ & பயோ-கெமிக் மருந்துகளை நாமே பரிசுத்தமாகத் தயாரிக்கிறோம். உங்கள் தேவைக்கு எழுதுங்கள்.

Dr. R. Mahalanovis,
P. O. Box No. 10013,
கல்கத்தா.

கிடைக்கும். பலவகைப்பட்ட உணவு அவனால் சேகரிக்கமுடியாது. சோளச்சோறோ, கேப்பைக் களியோ, நெல்லஞ்சோறோ, இரண்டு வேளையும் சாப்பிட வேண்டி வருகிறது. ஆனால் ஒரே விதமான உணவை அதிகம் உண்பதினால், தேவையான பல்வகை உணவை ஒருவாறு நமது உடல் கொஞ்சம் தயாரித்துக் கொள்ளுகிறது. அதனால்தான் ஏழைகள் ஒரே உணவை உண்டபோதிலும் குறைந்த சுகத்தோடாகிலும் உயிர்வாழ முடிகிறது. இவர்களுக்குப்போதிய உணவுப் பட்டியல், தேவைக்குச் சற்று குறைவாகவிருந்தபோதிலும், பலன் சீக்கிரம் கிடைக்கும். சென்னைச் சிறைச் சாலைகளில், கைதிகள் எல்லோருக்கும் குறைந்த பக்ஷம் ஓர் ஆழாக்குப் பால் கொடுக்கவேண்டுமெனக் காங்கிரஸ் ஆட்சி நடத்தியபொழுது ஏற்பாடு செய்யப்பட்டது. ஜெயிலிலேயே பாலைக் காய்ச்சி, தயிராக்கி, அதிலிருக்கும் வெண்ணெயுடன் மோராக்கி, தினசரி ஆள் ஒன்றுக்கு ஒரு பைண்ட் வீதம் கொடுத்ததில், வருஷம் இரண்டு லக்ஷத்திற்குமேல் சர்க்காருக்கு அதிகச் செலவு ஏற்பட்டது. ஆனால் உணவில் இந்த ஓர் அம்சம் தேவைக்கு வெகு குறைந்த முறையில் கொடுக்கப்பட்ட போதிலும், அதனின்று ஏற்பட்ட பலன் ஏராளமாகவிருந்தது. ஒவ்வொரு கைதியும் சராசரி ஐந்து பவுண்டு எடையில் ஏற்றம் பெற்றான். வாய் வேக்காடு, வயிற்றுப் புண், சீதபேதி, வயிற்றுப் போக்கு மிகவும் குறைந்தது, ஒவ்வொரு சிறையிலிருக்கும் கைதிகளின் சுகம் அதிகமடைந்ததாக ரிப்போர்ட்டுகள் கிடைத்தன. கிராம வாசிகள், உழைப்பாளிகள் இவர்களுக்குப் பயன்படக்கூடிய ஒரு பட்டியல் இம்மாதிரி இருக்கவேண்டும்.

காலையில் கேப்பைக் களி: (முதல் நாளிரவு தயாரித்தது) ஏதாகிலும் ஒருதுவையலுடன் (பொதினா, பச்சைக் கொத்துமல்லி, மிளகாய் புளி சேர்த்து அரைத்துக் கொண்டு தயாரிப்பது. அல்லது புளிச்சைக்கீரைத் துவையலுடன்) பன்னிரண்டு அவுன்ஸ் எடையுள்ள களியோ அல்லது கூழோ வேண்டும்.

(2) சோளச் சோறு—தண்ணீரில் ஊறப் போட்டது. மேலே சொல்லப்பட்ட துவையலுடன், அல்லது ஈர வெங்காயத்துடன்.

(3) அரிசிக்கஞ்சி அல்லது பழைய சோறு தண்ணீரில் போட்டு வைத்தது- வெங்காயம், அல்லது துவையல் ஐந்து அவுன்ஸ் மோருடன் ஒரு பைண்ட் (காலே அரைக்கால் படி) சோறும் தண்ணீருமாகக் குடித்தல்.

(4) சற்றே வசதியுள்ளவர்களுக்கு, தோசை ,ஆப்பம், இட்டிலி, காப்பி பால் சர்க்கரையுடன்.

நடுப்பகல் வேளை: உழைப்பாளிகளுக்குக் காலையைப் போல. மற்றவர்களுக்கு—சோறு பருப்பு வகையில் ஏதாகிலும் காய்கறி அல்லது மாமிசம், குழம்பில் வேக வைத்தோ அல்லது தனியாகத் தயாரித்தோ, மோர் அல்லது தயிர் இவைகளோடு வேண்டும்.

இரவு-வேளை: சமைத்த அரிசிச்சோறு அல்லது கேப்பை, கம்பு, சோளம் முதலியவை, மொத்தம் நபர் ஒன்றுக்கு எட்டு அவுன்ஸ் மறுநாள் கஞ்சிக்கும் சேர்த்துச் செய்யவேண்டும். அகப்படும் காய்கறியோ அல்லது பலவித கீரைகளில் நான்கு அவுன்ஸ். வெங்காயம், உள்ளிப் பூண்டு சேர்த்துச்செய்யும் குழம்பு. இதில் பருப்பு அல்லது மாமிசம் கிடைத்தால் அதையும் சேர்த்துத் தயாரிக்க வேண்டும். ஏழைகளுக்கு உயிர்ச்சத்து கொடுக்கக்கூடியதும் அதிக விலையில்லாததுமான காய்கறி பழவர்க்கங்களில், முள்ளங்கி, கொய்யா, குச்சி வெள்ளிக்கிழங்கு சர்க்கரைவள்ளிக் கிழங்கு, பலவகைப்பட்ட கீரைகள், ஐந்து அவுன்ஸ் மோர் இவைகள் அந்த உணவில் சேர வேண்டும்.

ஓர் சுலபமான இரகசியம்

டாம்கோ கூந்தல் தேங்காயெண்ணெயைத் தலையில் தடவி நன்கு தேய்த்தல் மயிர்க்கால்களுக்குப் போஷணையூட்டுகிறது. டாம்கோ தேங்காயெண்ணெய் ஷாம்பூவால் வாரத்திற்கோர்முறை அலசிக் கழுவுதல் கூந்தலை யெப்பொழுதும் சுத்தமாயிருக்கச் செய்வது மன்றி அதன் இயற்கைப் பளபளப்புடன் சோபிக்கவும் செய்கிறது.

A TATA PRODUCT

டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

இருளுக்குப்பின்

கே. சுந்தரம்மாள்

"யாரம்மா நீ. தடதடவென்று நுழைகிறாய்? நில். உள்ளே செல்லக் கூடாது." என்றான் சேவகன்.

"அப்பா! உனக்குக் கோடி புண்ணியமுண்டு. உன் குடும்பம் க்ஷேமமாக வாழட்டும். என்னைச் சற்று உள்ளே போகவிடு." என்றாள் தரித்திரமே உருவெடுத்து வந்தது போல், கிழிந்த அழுக்கடைந்த புடவையும், பரட்டைத் தலையும், குழிவிழுந்த கண்ணும் இடுப்பில் சிறு அழுக்கு மூட்டையுமுள்ள இருபத்தைந்து வயது மதிக்கத்தகுந்த ஒரு பிராம்மண ஸ்திரீ.

"நீ சொல்லாட்டா என் குடும்பம் வாழாதோ. போம்மா வெளியே எஜமான் வெளியே போகும் சமயம்" என்றான்.

"அப்பா இந்த வீட்டுப் பெரியம்மா ஏழைகளிடத்தில் அதிக தயவு காட்டுவார்களாம். நான் மிகவும் கஷ்ட நிலையிலிருக்கிறேன் ஏதோ ஒருவரை நம்பி இவ்வூர் வந்தேன். என் போதாக் காலம் அவர் இவ்வூரில் இல்லை. புது இடத்தில் என்னை ஏற்பார் ஒருவருமில்லை. நேற்றுக்காலை சாப்பிட்டது. கையிலும் தம்பிடி இல்லை. என்னை உள்ளே போகவிடு. உனக்கு ஒரு குறையும் நேராது"

"ஆமாம் அந்த அம்மாளுக்கு வேலையென்ன? ஐயர் சம்பாத்தியத்தில் பாதி ஏழைகளுக்குத் தானம் பண்ணிவிடுகிறார்கள். ஐயர் பூலோகத்தில் பிறவாத பிள்ளை. இந்த வீட்டில் இதே எளவாப்போச்சு. நிச்சயம் நீ உள்ளே போகக்கூடாது"

"அப்பா கெஞ்சுகிறேன் தயவுகாட்டு"

"போகிறாயா? இல்லையா?" என்று அதட்டினான்.

"அடே நாராயண சிங், யாரை வெரட்டுகிறாய்" என்று கேட்ட வண்ணம், நரை விழுந்த தலை முடிச்சும், காதில் வைரத் தோடும் கையில் தங்க வளையும் கழுத்தில் சங்கிலியும் அணிந்து, ஜரிகைக் கரை போட்ட பட்டுப்புடவை உடுத்தியிருந்தும். முகம் விதவைக் கோலத்தைப் பறையடிக்க, அவ்விடம் வந்தாள் வீட்டுப் பெரியம்மா.

"இல்லீங்க......" என்று விழித்தான்.

பரிதாபத்துடன் அவளைப் பார்த்துக் கொண்டு நிற்கும் பெண்ணைப் பார்த்து, 'வா அம்மா! உள்ளே போகலாம் வா?' என்று சொல்லிவிட்டு, "நாராயணசிங் இப்படி விரட்டக்கூடாது என்று எவ்வளவுதடவை சொல்லுவது. இது கடைசி எச்சரிப்பு. இன்னொரு தடவை இப்படி நேர்ந்தால் நிச்சயம் நீ விலக்கப்படுவாய்" என்றாள்.

"இல்லீங்க, மன்னிச்சுடுங்கள். இனிமேல் ஒருநாளும் இப்படிச் செய்யமாட்டேன்" என்று கும்பிட்டான்.

இந்தச் சொல்லும், பதிலும் இது எத்தனாவது தடவையோ, கண்டிப்பாகத் தன்னைப் போகச் சொல்லமாட்டாள் பெரியம்மா என்ற தைரியம் நாராயண சிங்கின் மனதில் ஊன்றிவிட்டபிறகு, தனது அதிகாரத்தை அடக்கிக்கொள்ள அவனுக்கு அவசியமில்லையல்லவா?

தன்னுடன் கூட்டிச்சென்று, முன் ஹாலிலுள்ள சோபாவில் தான் உட்கார்ந்து கொண்டு, அவளையும் பக்கத்தில் உட்காரும்படி சொன்னாள் பெரியம்மா.

"கீழே விரித்திருக்கும் கார்ப்பெட்டில் உட்கார்ந்தால்கூடத் தனது அழுக்கு ஒட்டி விடுமோ என்று பயந்தவளாக, நின்றாள் வந்தபெண் ஜானகி.

"பரவாயில்லை உட்காரு" என்று சொல்லி விட்டு, "யாரடி பார்வதி! ஒரு தமிழர் காபி கொண்டுவா.!" என்றாள்.

கீழே உட்கார்ந்து, கொடுத்த காப்பியைக் குடித்தாள். நாள்முழுவதும் காய்ந்த வயிறு சூடான காப்பியை விட்டதும் குபீரென வியர்த்துக்கொட்டினது. முகத்தைத் துடைத்துக்கொண்டு தலைப்பினால் விசிறிக் கொண்டாள் ஜானகி.

பக்கத்திலிருந்த ஸ்விட்ச்சைப்போட்டாள் பெரியம்மா. மின்சார விசிறி சுழன்றது. அந்த இடமும், தன்னைக் குளிர்விக்கும் காற்றும் சேர்ந்து ஜானகிக்கு அது தேவலோகமா, பூலோகமா என்ற பிரச்னை ஏற்

பட்டது. பிறகு, "நீ யார், எந்தஊர்? இவ் வூருக்குப் புதிது போலிருக்கிறது யாரைத் தேடி வந்தாய்; குழந்தைகளிருக்கின்ற னவா?" என்று அன்பாக விசாரித்தாள் பெரியம்மா.

"அம்மா உங்கள் முகத்தில் விழித்தாலும் பாபம் தீரும் என்பது நிச்சயம். பச்சக் குடி என்பது எனது ஊர். ஏழுவயதில் ஒரு பிள்ளை இருக்கிருன். கிழட்டுத்தாயாரும் நானும், என் கணவர் இறந்த இந்த ஒரு வருஷமும், இருந்த நகை நட்டுக்களை விற்றுக் காலங் கழித்தோம். ஹோட்டலில் வேலை செய்து வந்தார். சாப்பிடத்தான் கண்டது. அவ்வூரிலேயே வேலைசெய்து பிழைக்கலா மென்ருல் தாயாதிகள் ஏசினுர்கள். பிச்சை எடுக்கும் நிலைமை ஏற்பட்டது. குழந்தை பிச்சை வாங்கி வந்து இரண்டுமூன்று நாள் கழித்தோம். நிலைமை மோசமாகவே துணிந்து கிளப்பில் அரைக்கச் சென்றேன். அந்தச் சமயம் இவ்வூரிலிருந்த எனது தோழி ஒருத்தி எனது கஷ்டத்தைக் கேள்வியுற்று, இவ்விடம் வந்தால் பிழைப் பிற்கு வழி ஏற்படும் என்று கடிதம் எழுதி ளுள். விடிந்தது நமது கஷ்டம் என்று, ஏதோ சார்ஜுக்குமட்டும் பணத்தைக் கடன் வாங்கி எடுத்துக்கொண்டு இவ்வூர் வந்தேன். என் துரதிர்ஷ்டம் எங்கேசென்ரு லும் பின் தொடருமல்லவா? அவள் தாயா ருக்கு ஆபத்தென்று சென்று விட்டாளாம். அந்த வீட்டில் நான் வேலை செய்வதாகச் சொன்னேன். அவர்கள் என்னை நம்ப வில்லை. திரும்பிச் செல்லக் காசும் இல்லை; இந்த நிலைமையில் அநேக இடங்களில் வேலைக்குக்கேட்டேன். ஒருவராவது ஏற்றுக் கொள்ளச்சம்மதிக்கவில்லை. பணக்காரர்கள் ஒருவாய் சாதம்கூட இல்லையென்ருர்கள். தண்ணீரெடுத்துப் பிழைக்கும் ஒருத்தி நேற்று எனக்கு அன்னமிட்டாள். கடைசி யில் இன்று மத்தியானம் ஒரு புண்ணியவதி உங்கள் பெயரைச் சொல்லி, இடத்தையும் காட்டி, நிச்சயம் உதவி செய்வீர்களென்று சொன்னுள். சேவகன் சொல்லில் நீங்களும் கைவிடுவீர்களென்று நினைத்தேன். ஆனுல் தெய்வம் போல் எனக்குக் காட்சி கொடுத் தீர்கள். நான் ஊர்போய்ச்சேர உதவி செய் தீர்களானுல் என்றென்றும் உங்களை மறக்க மாட்டேன்" என்று விழுந்து நமஸ்கரித் தாள்.

"அம்மா, இன்றுடன் உன் கவலை தீர்ந் தது. பணம் தருகிறேன். உன் அம்மாவையும் குழந்தையையும் அழைத்துவந்துவிடு. தோட் டத்திலுள்ள சிறிய வீட்டில் குடியிரு. உன் பிள்ளையைப் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டு வருவது என் பொறுப்பு. உன க்கு வேலை தருகிறேன். பசுகள் பஞ்சம் பத்து வருஷம். பிறகு உனது சோற்றை நாலுபேர்கள் உண்பார்கள்" என்ருள்.

ஜானகிக்கு ஒன்றுமே தோன்றவில்லை. சந்தோஷமிகுதி பேசமுடியவில்லை. அந்தச் சமயம் சூட் தொப்பியுடன் வந்த கலெக்டர் "என்ன விசேஷம் அம்மா?" என்ருன் அன் புடன்.

"சுருக்கமாக ஜானகியைப்பற்றிக் கூறி, தனது அபிப்பிராயத்தையும் கூறி உனது அபிப்பிராயம் என்ன?" என்ருள்.

"உன் விருப்பத்திற்கு மாறுபாடுஉண்டா? ஆள் துணையுடன் அனுப்பு" என்று சொல்லி விட்டு வெளியே சென்ருன்.

அதுவரை கதவு மூலையில் பதுங்கி நின்ற ஜானகி, வெளியில் வந்து "அம்மா! நான் அனேக பாவம் செய்திருந்தும், சிறிது புண் ணியம் செய்திருப்பதிளுல்தான் உங்களைக் காணும்பாக்கியம் கிடைத்தது. பரம்பரைச் செல்வம் அடக்கம்தான். நிறை குடம் தளும்பாது. வழி வழியாகத் தோன்றும் அந்தஸ்தின் குணம் சிறந்ததுபோலும்" என்று முடிக்குமுன்.

"அம்மா வழிவழியாக வந்த செல்லமல்ல. இன்று அநேக ஜீவன்களைக் காக்கும் சக்தி யும், கணக்கற்ற பணங்களை இக் கைகளி ளுல் செலவு செய்யும் நான், அநேக ஆள் களை அதிகாரத்துடன் வேலை வாங்கும் நான், ஒரு காலத்தில் உன்னைப்போல் கண்ணும் கண்ணீருமாக திக்கற்றுத்தவித்து நின்றேன்; உலகத்தை அறிந்தேன். உட்கார், என் கதையைச் சொல்லுகிறேன். கேட்டாயா ளுல் உன் மனம் கவலையைவிடும். முதலில் ஸ்னனம் செய்துவிட்டு நான் கொடுக்கும் புடவையை உடுத்திக்கொள். என் கதை யைக்கேட்டு முடிவதும் சாப்பாட்டு வேளை வருவதும் சரியாக இருக்கும்" என்ருள் பெரியம்மா.

ஸ்னனம் செய்து வந்ததும் தன் கதை யைத் தொடங்கிஞள் பெரியம்மா.

"என் தாயாருக்கு நாங்கள் இரண்டு பெண் கள். தந்தை சிறு பொழுதில் இறந்து விட்டார். இருக்கும் ஜவேஜை விற்று அக் காவின் கல்யாணம் நடந்தது. இங் குள்ளதை அங்கே கொண்டு போட்டுவிட்டு யமனை அடைக்கலம் புகுந்தாள் அக்கா.

என்னுடன் ஒரு வீட்டில் வேலை செய்து காலங்கழித்தாள் தாயார். அந்த வீட்டு எஜமானி கூடியமட்டும் என்னை நன்றாகவே நடத்தினாள். எனது கல்யாணக் கவலையை அவளே ஏற்றுக்கொண்டாள். அவர்கள் வீட்டிற்கு வந்த விருந்தினர் ஒருவர் நாற்பது வயது அடைந்தவர் என்னை இரண்டாந்தாரமாக ஏற்றுக்கொள்வதாகச் சொன்னார். ஆள் கண்ணிற்கு நன்றாக இருந்தபடியினால் நான் சந்தோஷமாகவே ஒத்துக்கொண்டேன். அவருக்கு ஐவேஜி ஒன்றும் கிடையாது. செட்டி வீட்டில் கணக்கெழுதி மாதம் ஐம்பது ரூபாய் சம்பாத்யம், அவ்வளவே. அந்த நிலைமையில் குபேரனாகத் தோன்றியது எங்களுக்கு. கல்யாணம்செய்து கொண்டு தாயாரையும் என்னுடன் அழைத்துச்சென்றார். பதினைந்தாம் வயதில் ஒருபிள்ளையும், பதினேழாம் வயதில் ஒருபிள்ளையும் பெற்றேன், அவ்வளவே. பத்து வருஷ காலம், உலகம் இப்படியென்று அறியாமல் சுகமாக வாழ்ந்து வந்தேன். நிலம் வீடு என்று வாங்கா விட்டாலும், கஷ்டமில்லாமல் சாப்பிட்டு வந்தோம். குழந்தைகளும் செல்வமாக வளர்ந்து வந்தார்கள். ஒரு காலத்தில் நாம் கஷ்டப்பட நேரிடுமென்று சொப்பனத்தில்கூட நினைக்காமல் வாழ்க்கை நடத்தினேன்.

மூத்தபையனுக்குப்பத்துவயது. திடீரென மார்படைத்து இறந்தார் என் கணவர். அவரது ஈமக்கடனுக்குக்கூடப் பணமில்லை அப்பொழுதுதான் எனக்குக் கஷ்டத்தின் சாயை தெரிந்தது. அவரது ஈமக்கடனைச் செட்டி ஏற்றுக்கொண்டான். அத்துடன் சரி. பிறகு எங்களைக் கவனிப்பாரில்லை. பழையபடி தாயார் நாலு வீட்டுக்குத் தண்ணீர்கொண்டு கொடுக்கத் தொடங்கினான்.

குழந்தைகளைச் சம்பளமில்லாமல் பள்ளிக் கூடத்தில் சேர்த்துக்கொண்டார்கள். நான் உள்ளே இருந்தபடி அப்பளம் வடம் இட்டு விற்றேன். யுத்தகால அகவிலையில் ஜீவனம் நடப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது. லஜ்ஜையைவிட்டு நானும்சில வீடுகளில் வேலைசெய்யச் சென்றேன். சில ஆசார சீலர்கள் அவர்கள் வீட்டில் என்னைப்போல் பெண்களிருந்தும், நான் தலையைக் களைத்தால்தான் வேலைக்கு வரலாமென்றார்கள். 'இதென்ன கொடுமை பணம் இருந்தால் ஒரு நியாயம், இல்லாவிட்டால் ஒரு நியாயமா?' என்று நினைத்தேன். யார் அதைக் கவனிப்பவர்கள்.

(தொடரும்)

S. K. R. & CO.

PERFUMERS

Arunachala Asari St. :: Jothy Building

SALEM TOWN

1. சக்தி அகர்பத்தி
2. சக்தி ஜவாஜிபத்தி
3. சக்தி தர்பார்பத்தி
4. பத்மா அம்பர்பத்தி
5. ஜோதி ஜவாஜிபத்தி
6. S. K. R. ஸ்பெஷல் கஸ்தூரிபத்தி

எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை

விபரங்களுக்கு

எஸ். கே. ஆர். அண் கோ.

பர்ப்யூமர்ஸ்

அருணாசல ஆசாரி தெரு :: ஜோதி பில்டிங்

சேலம் டவுன்

2/9018

காலக்கண்ணாடிக் கதைகள்

யோகி சுத்தானந்த பாரதியார்

இவை தொடர்கதைகளல்ல. தனித் தனிக் கதைகளே. ஆனால் உலகக் காட்சிகளையும் உலகச் சீர்திருத்தத்தையும் இக்கதைகள் முறையாக விளக்கி வரும். இக்கதைக் காட்சிகள் இன்று நம்முள் உள்ள உலகத்தைத்தான் கண்ணாடிபோலக் காட்டுகின்றன.

இக்கதைகளைச் சொல்லும் தர்மவனத்துப் பாரதமணி சுவாமிகளை இந்த மாதம் காவேரி இதழில் அறிமுகப்படுத்துகிறோம். அதுவும் ஒரு கதையாகவே வருகிறது.

I. தர்ம வனம்

"என்ன செய்வேன், இப்படிப் பிள்ளைகள் பிறந்து ஊரைக் கெடுக்கிறார்களே" என்று மானசபுரி ராஜன் சிந்தாமணி அடிக்கடி கவலையுற்றான். அவன் மனைவி சங்கற்ப குமாரியோ "என் பிள்ளைகளுக்கென்ன குறையாம், பிள்ளைகளா? நீங்கள் இஷ்டப்படி இருங்கள்" என்று சொல்லிக்கண்ணை மூடிச் சென்றாள்.

பிள்ளைகள் பெயரைக் கேட்டாலே குணம் பளிச்சென்று தெரியும்.

கர்மசேனன், மோகராஜன், மதசிங்கன் என்னும் மூன்று பிள்ளைகளும் மூன்று புலிகளே; தகப்பனார் வாழ்க்கை விஷப்புதராயிருந்தது; வயது முதிரமுதிர இவர்கள் செய்யும் அக்கிரமமும் வட்டிபோட்டு வளர்ந்தன; பொய், சூது, வாது, களவு, வஞ்சம், லஞ்சம், போர், பொறாமை, சதி, கொலை எல்லாம் உடன்பிறந்தவர்போல் இந்த மூன்று மூதேவிகளையும்பற்றி ஆட்டின. சிந்தாமணி எவ்வளவோ நயம் பயமாகப் பார்த்தான்; பிள்ளைகள் தகப்பனை எதிர்த்து மீறினர். இவர்கள் சென்ற இடமெல்லாம் கூக்குரல் தான்; கால்வைத்த இடமெல்லாம் கலகந் தான்; கைவைத்த இடமெல்லாம் நாசந் தான்.

"இப்படிப்பட்ட எமன்களா நமக்கு வாய்க்கவேண்டும்.........என்ன செய்வேன். ஐயோ தெய்வமே என்ன செய்வேன்?" என்று சிந்தாமணி தினம் நூறுதரம் நொந்து கொள்வான். அவன் பிள்ளைகளைப் படிக்க வைத்தான்; பிள்ளைகள் உபாத்தியாயரைச் சிரித்துக் கேலிசெய்து, "நெடுமால் திருமருகா நித்தநித்தம் இந்த இழவா" பாடிவிட்டு ஓடினர். படிப்பேறவில்லை; நாத் தடிப்பே ஏறியது. சிந்தாமணி ஒரு நல்ல புலவரைக்கொண்டு, வீட்டில் இராமாயண பாரத பாகவதப்பிரசங்கம் வைத்து,"பிள்ளைகளா கேளுங்கள் புத்திவரும்" என்றான். "ஆஹா, கேட்கிறோம்; கேட்டபடியே நடக்கிறோம்" என்று பிள்ளைகள் ஒப்புக்கொண்டார்கள். சிந்தாமணி இனிப் பிள்ளைகள் திருந்துவார்கள் என்றிருந்தான். நம்பிக் கையில் மண்விழுந்தது; இராவணன், கீசகன், கம்சன், துரியோதனன், சகுனி மாமா, சிசுபாலன் முதலியோர் உதாரணங்களே பிள்ளைகளுக்குப் பிடிபட்டன. சாத்திரியார் கோபிகாலீலை படிக்கும்போது தடிப்பிள்ளைகளும் அப்பா பெட்டகத்தைச் சுரண்டிப் பாபிகாலீலைசெய்ய ஆரம்பித்தனர்; பாரதத்தில் சூதுபோர்ச் சருக்கம் படித்தபோதே மூன்றுபேரும் சகுனியும் துரியோதனனும் துச்சாதனனும் ஆனார்கள். அந்த மட்டுடன் நிற்கவில்லை. இராமாயணத்திற்கு எதிராக ஒரு இராவணாயனம், பாரதத்திற்கு எதிராக துரியோதன விஜயம், பாகவதத்திற்குப் பதிலாக "தர்மவதம்" புனைந்து தமது காலிக்கூட்டத்துடன் பிரசாரம் செய்தனர்.

அற நூல்களை யெல்லாம் தீ வைத்துக் கொளுத்தினர்; இராவணன், துரியோதனன், கம்சன் ஆகிய மூன்றுபேர் ஆவியும் தம்முன் வந்து இறங்கியிருப்பதாகவும், இராமனும், தருமனும், கண்ணனும் செய்த அட்டூழியங்களுக்குப் பழி வாங்கவே தாம் அவதரித்திருப்பதாகவும் பறை சாற்றினர். வாய்ப்போரில் அவர்களை யாரும் வெல்ல முடியவில்லை.

"உங்கள் ராமனைச் சாமி என்கிறீர்களே; சாமிக்கு மாயமானை ஏன் தெரியாமல் போனது?

சூர்ப்பணகை இராவண ராஜா தங்கை; அவளை மூக்கறுத்தது குற்றமா இல்லையா? அதற்குப் பதில் செய்யவே இராவணனுர் சீதையைத் தூக்கிச் சென்ருர். இதிலென்ன குற்றம்?

இராமனுக்கும் சீதை புளித்தது; அதனுல் அவளை அவனே காட்டிற்கு விரட்டியடித்தான்; அவன் கொடுமை பொறுக்கமாட்டாமல் சீதை மண்ணில் மறைந்தாள்.

மனைவியைக் கௌரவமாக நடத்தத் தெரியாதவன் மனிதனு? தருமன் மஹா சாது, பொறுமையே பூஷணமானவன் என்கிறீர்கள். அவன் எங்கள் சகுனியுடன் ஏன் சூதாடினுன்? சூதாடுகிறவன் சாதுவா? இதில் தோற்றவன் பணயப் பொருளை இழப்பது நியாயந்தானே? மனைவியைத் துகிலுரிந்தபோது சும்மா பார்த்துக்கொண்டிருந்த அலிகளை வீரர் என்னலாமா?

மூத்தவருக்கு மூத்தவனுகப் பிறந்த துரியோதனனே அரசுரிமை பெற்றவனன்ருே? பாண்டவர் சிற்றப்பா பிள்ளைகள் தாமே. அவர்களுக்குப் பாத்தியமேது? நாட்டிலிருந்து இவர்கள் புரட்சி செய்வார்களென்றே துரியோதனன் பாண்டவரைக் காட்டிற்கு விரட்டினுன்...... கொடையிலே கர்ணன், வில்லிலே துரோணன், விரதத்திலே பீஷ்மன் முதலிய மேதாவிகள் துரியோதனன் பக்கம் இருந்ததே அவன் பெருமையைச் சொல்லுமே. கிருஷ்ணன் யோக்யதை பிருந்தாவனத்தில் வெட்டவெளிச்சமாகிறதே; குளிக்கிற பெண்களின் புடவையைத் திருடி ஒளிப்பவன் மனிதனு? பால் கொடுக்கவந்த ஸ்ரீமதி பூதகிதேவியைக் கொன்றவன் மனிதனு?

இந்தக் கிருஷ்ணனே பாரதப்போரைத் தூண்டினுன்; இரக்கங்கொண்டு வில்லைக் கீழேபோட்ட விசயனைக் கிளப்பி மகத்தான வீரரையும் பெரியாரையும் கொல்லத் தூண்டியது யார்? கிருஷ்ணன் அன்ருே? இதெல்லாம் தெரிந்துதான் புண்ணியவானுகிய கம்சன் அவனை மூளையிலேயே கிள்ளி எறிய முயன்ருன். அவன் எண்ணம் பலித்திருந்தால், கோடானுகோடிப் பேர் போரில் உயிரிழந்திருக்கமாட்டார்களே; பாரதப்போரே நடந்திராது; நாட்டில் இத்தனை விதவைகள் கண்ணீர்விடமாட்டார்கள். பேசாமல் ஐந்துபேரைச் சரிபண்ணிவிட்டுத் துரியோதனன் நாடாள்வான்; போரில் இறந்த அத்தனைபேரும் உயிரோடிருந்திருப்பார்கள். கிருஷ்ணன் அவதரித்து அப்படி என்ன பெரியகாரியம் சாதித்தான்? அவனை நம்பிய கோபாலர்களே திருந்தவில்லையே, குடித்துப் போராடி மடிந்தார்களே; அவனுல் கோடானுகோடிப் பேர் இறந்ததைத்தவிர என்னலாபம்? உங்கள் புராணத் தெய்வங்களெல்லாம் நாட்டைக் கொலைபண்ணவே வந்தன.

இத் தெய்வங்களுக்குக் கோயில் கட்டி அரஹரா என்று கன்னத்தில் போட்டுக்கொண்டு, காலில் விழுகிறீர்களே—உங்கள் புத்தி இப்படிப் போனதை......பகுத்தறிவுள்ள மனிதர் இப்படி மூடக் குப்பைகளில் புரளலாமா? நாங்கள் சொல்வதைக் கேளுங்கள்

இதோ உலகம் உள்ளது; உடல் உள்ளது; உடல் இருக்கும்போதே உலகை அனுபவியுங்கள்; பாப புண்ணியம் பரோபகாரமெல்லாம் கட்டி வைத்துவிடுங்கள்; நன்ருகச் சாப்பிடுங்கள், உடம்பைக் கட்டுமஸ்தாக வளருங்கள்; கண்டால் பிறர் நடுங்கும்படியாக வாழுங்கள்; சொத்தை வேதாந்தத்தை விட்டுவிடுங்கள்; பலவானுக்கே உலகம். கண்முன் கண்டதே உண்மை. உலகை வெல்வதே வெற்றி. உலகை அடக்கியாள எப்போதும் துப்பாக்கி தயாராக வைத்திருங்கள்; சுக போகங்களைத் தாராளமாக ஏராளமாக அனுபவியுங்கள்; சாத்திரத் தடைகளைத் தகர்த்தெறியுங்கள். முத்தண்ணு சாருவாகன், சித்தண்ணு ஹெக்கல் முதலியோர் சொல்வது போல் நடவுங்கள். பழஞ்சுவடிகளைக் குப்பைத் தொட்டியில் போடுங்கள். நாங்கள் புதிய மதம் கண்டிருக்கிருேம். அதற்குப் 'போகசாரம்' என்று பெயர்.

வேததர்மத்திற்குப் பதில் குரோததர்மம், யோகசாதனத்திற்கு மோகசாதனம், கீதைக் குப்பதிலாக போதை, மனுதர்மத்திற்குப் பதிலாக மனேதர்மம், புத்த தர்மத்திற்குப் பதிலாக யுத்த தருமம்—இப்படி ஒவ்வொன்றிற்கும் பரிகாரமாக நாங்கள் புதிய சாத்திரங்கள் எழுதியிருக்கிருேம். இந்தக்காலம் பிழைக்கவேண்டுமானுல் எங்கள் சாத்திரம், எங்கள் குத்திரம், எங்கள் காத்திரம், எங்கள் ஆத்திரத்துடன் வாழவேண்டும்...... வாருங்கள் உலகம் அஞ்சி நடுங்க அரக்கச்சிங்கங்களாக வாழுவோம்......நீட்சி (Nietzsche) அண்ணு அப்படித்தான் சொல்லியிருக்கிருர்.........பலமே வெற்றி"

இந்தமாதிரி ஊரெல்லாம் இடிமுழக்கம் செய்தனர் மூவரும். "ஐயோ என்ன செய்வேன்" என்று சிந்தாமணி வருந்தித் துடித்தான்; அவனுடன் எத்தனையோ சாதுக்கள் உள்ளமும் "என்ன செய்வேன்" என்று துடித்தது.

நல்லது பிடிபடுவது கடினம்; கெட்டது விரைவில் பிடிபடும். வெள்ளை வேட்டியில் அழுக்குப் பிடிப்பது எளிது; அழுக்கெடுப்பது கடினம். மூன்று முரடரின் உபதேசம் ஊரைப் பிடித்துக்கொண்டது; அவர்கள் பக்கம் ஒரு பெரிய நாத்திகப்பட்டாளம் சேர்ந்தது; ஊரில் பஞ்சமாபாதகம் அழிநடம் புரிந்தது. கற்புள்ள பெண்ணிற்கு இடமில்லை; மானஸ்தனுக்குப் பிழைப்பில்லை; கோயில்களெல்லாம் நடனசாலைகளாயின; பசுமடங்கள் கசாப்புக்கடைகளாயின; திருமடங்கள் வேசை விடுதிகளாயின; சத்திரம் சாவடிகளெல்லாம் மதுவிலாசங்களாயின; வேதபாடசாலைகள் நாஸ்திக பாடசாலைகளாயின; குருகுலங்கள் உல்லாச வனங்களாயின. பள்ளிக்கூடங்களெல்லாம் பாஷாண்டிக்கூடங்களாயின...

"என்ன காலம், என்ன காலம், என்ன செய்வேன்" என்று சிந்தாமணி நொந்தான். சாதுக்கள் ஊரைவிட்டே ஓடினர்.

"நன்றாக ஓடுங்கள்" என்று அவர்களை விரட்டியடித்து மூன்று அசுரப் பதர்களும் ஊரைப் பிடித்து, ஆளத் தொடங்கினர்.

'சிந்தாமணி' மீண்டும் புத்தி சொன்னான்; பிள்ளைகள் கத்தி துப்பாக்கியைக் காட்டினர். சிந்தாமணி சாதுக்களுடன் ஓட்டமெடுத்தான்.

"என்ன செய்வேன் ஈசனே என்ன செய்வேன்" என்று சிந்தித்துக்கொண்டே சிந்தாமணி காடும் மலையும் திரிந்தான். தன் பிள்ளைகளைப்பற்றி நினைக்கும்போதெல்லாம் ஒரு பாபச் சுமை அவனை அமுத்துவது போல் நரகவேதனைப் பட்டான். வேதனை பொறுக்க முடியாமல், சிந்தாமணி தற்கொலை புரிந்துகொள்ளத் துணிந்தான்.

II. தர்ம வனம்

தர்மவனம் என்றால் சாதுக்களுக்குத் தெரியும்; உலகின் பாபங்கள் அணுகமுடியாதபடி ஒரு மலைச்சாரலில் இருக்கிறது. அதில் காய்கனிகள் ஏராளமாக உண்டு; பசு பக்ஷிகள் தீங்கில்லாமல் அங்கே சுயேச்சையாக வாழும். அங்கே சாதுக்கள் தவம்புரிந்தனர் என்பதைப் பலர் அறிவர்.

உங்கள் முக அழகை தெள்ளென வெளிப்படுத்துவது உங்கள் நீண்டு கறுத்த
- கேசத்தின் வனப்பே -

இதற்கு இன்றியமையாதது

ஜாப்கோ
ஹேர் குரோயர்

சிறந்த மூலிகைகளைக்கொண்டு தயாரிக்கப்பட்ட ஓர் உன்னதமான தைலம்

அந்த அடர்ந்த காட்டினூடு சாந்தநதி ஓடுகிறது; அது மிகவும் ஆழமான ஜீவநதி; அதன் ஓங்கார நாதத்தைக் கேட்டாலே உபசாந்தம் உண்டாகும். அதிகாலை; நான்கு மணி. அந்த நதிக்கரையில் சிந்தாமணி நின்றுமுறையிடுகிறான்; "சாந்தநதியே, என் மக்களின் பாபம் என்னை அழுத்துகிறது; உன்னுள் அந்தச் சுமையுடன் விழுந்து மறைகிறேன்; இப்படிப்பட்ட மக்களைப் பெற்றதற்காக நான் என்னையே தண்டித்துக் கொள்ளுகிறேன்; என்ன செய்வேன்? ஜகதீசா, என்னை ஆட்கொள்! சிவாயநம:" அவ்வளவுதான்; சாந்தநதியே 'ஹாஹா' என்று திகைத்தெழுவதுபோல் ஓர் அலை யெழுந்தது; சிந்தாமணி வெள்ளத்துடன் சென்றான்.

அதே சமயம் ஆற்றிற்கு வந்த ஒரு சாது நட்டாற்றில், "சிவா, சிவா" என்ற சத்தம் கேட்டு, வெள்ளத்தில் தாவினார். நான்கு எட்டில் சிந்தாமணியின் சிகையைப் பிடித்தார்.

கரைக்கு இழுத்துவந்தார்...... இதற்குள் கிழக்கு வெளுத்தது; சாதுக்கள் காலை அனுஷ்டானங்களுக்கு வந்தனர். அவருள் அதோ நிற்கும் சாந்த கம்பீரமான மஹா புருஷரே பாரதமணி சுவாமிகள். அவர் மானஸபுரி வாசி; சிந்தாமணியை அறிவார்; அவன் மக்கள் செய்யும் அசுர லீலைகளையும் அறிவார்; அவர்களை வெல்லும் திறனும் அவரிடம் உண்டு. அவர் சிந்தாமணிக்குச் சிகித்ஸை செய்தார். சிந்தாமணி பிழைத்தான். சாதுக்கள் அவனைத் தங்கள் தர்ம நிலயத்திற்கு அழைத்துச்சென்று மூலிகைகளால் குணப்படுத்தினர்.

சிந்தாமணி சித்தம் தெளிந்து விழித்தெழுந்தான்; சுற்றிப் பார்த்தான்; இருள் நரகக் கணவாயிலிருந்து திடீரென்று ஆனந்த ஜோதிச் சிகரத்திற்கு உயர்ந்தவன்போல் மகிழ்ந்தான். எங்கும் பசுங் காட்சி; பூவும் கனியும் குலுங்குகின்றன; கண்ணெட்டிய மட்டும் பசும் பயிர்கள். அங்கே வீசும் பூமணத் தென்றலில் "ஓம் சாந்தம்" என்ற ஒரு கீதம் கேட்கிறது; கிளி, குயில், மைனா, சிட்டு,காக்காய், உள்ளான், கருடன் முதலிய பட்சிகளெல்லாம் பாடுகின்றன; அப் பாட்டுடன் பக்தி கானங்கள் சேர்ந்து, கேட்பவரைப் பரவசப்படுத்துகின்றன. அந்தப் பசுவனத்தில் தீச் சுடர்கள் போலத் தவயோகிகள் உலாவுகிறார்கள். அவர்களைப் பார்த்தாலே பாபம் விலகும்; தாபம் தணியும். இத் தவயோகிகள் சாதாரணமானவர்களல்லர்; மனத்தை விழுங்கிச் சும்மா இருப்பவர்களல்லர். இவர்கள் சிறந்த ஞான தீரர்கள், தர்ம வீரர்கள், கர்ம வீரர்கள். இவர்களை நடத்தும் தலைவரே பாரதமணி சுவாமிகள். அவர் பெயரிலேயே ஒரு சக்தியுள்ளது. பாரதமணி சுவாமிகள் பெரும் செல்வராயிருந்தார்; சிறு வயதிலேயே கற்கவேண்டியதெல்லாம் கற்றார்.

பாரத தர்மமும், தற்காலத்திற்கேற்ற ஐரோப்பியக் கலைகளும் அவருக்கு நன்றாகத்தெரியும். மானஸ புரியில் நடக்கும் அட்டூழியங்களைச் சகிக்கமுடியாமல் அவர் தேசயாத்திரை சென்றார்.

உலகைச் சுற்றிப் பல கற்றார். அங்கங்கே தவம்புரிந்தும், முனிவரைக்கண்டும், யோகசித்தி பெற்றார்; தம்மிடம் வரும் சாதுக்களை வசீகரித்து ஒரு சாதுசங்கம் சேர்த்துக்கொண்டு அவர் சாந்தநதிக் கரைக்குவந்தார். தமது செல்வத்தைக்கொண்டு காட்டைத் திருத்தி அழகான சிறு சிறு மனைகள் எழுப்பி, பாரதமணி சுவாமிகள் தர்ம வனம் ஏற்படுத்தினார்.

தர்மவனம் ஒரு ஆத்ம சுதந்தர நிலயம். அதில் சுமார் 1000 சாதுக்கள் வசிக்கின்றனர். அவருள் 200 பேர் பத்தினிகளுடன் வசிக்கின்றனர். ஆனால் ஆண் பெண் அடங்கலும் பிரமசரிய விரதம்பூண்டு மிகவும் பரிசுத்தமாகத் தவசாதனம் செய்கின்றனர். அந்த வனத்திற் புகுந்தாலே காமநோய் தீரும்; ஆண் பெண் உறவில் மாசற்ற சிவ சக்தி. மணம் வீசும் ஞானம், தியானம், பக்தி கர்மம், எல்லாம். அவர்கள் ஒருங்கே சாதனம் செய்தார்கள். ஒவ்வொருவருக்கும் பயனுள்ள ஒரு கலையுந் தொழிலும் தெரியும். அந்தக் கலைக்கு இலக்கண இலக்கியங்களைச் செய்து பயின்று, அவர்கள் அதன் மூலம் தருமவனத்திற்கு உதவிசெய்கிறார்கள்.

சுத்தம், சுதந்தரம், சமத்துவம் ஆகிய மூன்றும் அவர்கள் சுருதி வாக்கியம். மனோவாக்குக் காய சுத்தம், ஆத்ம சுதந்தரம், ஜீவன் முக்தி, சர்வாத்ம சமரஸம்–இவற்றை அவர்கள் சாதனம் செய்கிறார்கள். எல்லாருக்கும் தமிழ் பொதுமொழி: ஆங்கிலம் ஹிந்தி, சம்ஸ்கிருதம் முதலியன அவர்களுக்குத் தெரியும். எந்த மொழி கற்றாலும் அம்மொழிச் சுவையைத் தாய்மொழியில் கொண்டுவந்து அதை வளம்பெறச்செய்வது அவர்கள் விருப்பம். காலத்திற்கேற்ற விஞ்ஞானக் கலைகளிலும் அவர்கள் நிபுணர்கள்.

புதிய பௌதிக ரசாயன உண்மைகளைச் சிலர் கண்டு பிடித்திருக்கிறார்கள். அவர்கள் பழகும் சாமான்களெல்லாம் தருமவனத்தில் செய்தவை. மழை வெயிலுக்கு அடக்க மாகக் காற்றோட்டமாகப் பல கட்டிட வரிசைகள் அதோ காண்கின்றன. அங்கே சாதகர் தனித்தனி அறைகளில் சௌகரிய மாக வசிக்கிறார்கள். சமையல் சாப்பாட்டிற்குத் தனியாக ஒரு கட்டிடம் இருக்கிறது; மழைக்காலத்தில் சாதனம் செய்ய ஒரு கட்டிடம் ஆற்றோரம் உள்ளது. மற்றக் காலங்களில் சாதகர் காற்றும் வெயிலும் பட வசிப்பர்.

அங்கே உணவுப் பொறுப்பு முழுதும் பெண்கள் வகித்தனர். காலை பத்து மணிக்குச் சமைத்த உணவு; சாயங்காலம் ஆறரைக்கு பால் பழம்-பருப்புணவு; உணவுக்கடன் இரண்டு மணி நேரம். இரவு பத்து மணி முதல், காலை 4 மணி வரையில் உறக்கம். காலை ஒரு மணி நேரம், மதியம் அரை மணி, மாலை ஒரு மணி, இரவு அரை மணி—ஆக மூன்று மணி நேரம் அவர்கள் தியானிப்பார்கள். ஒரு மணி நேரம் சுவாமிகள் உபதேசம் நடக்கும். மற்ற நேரமெல்லாம் வண்டுபோ லுழைப்பார்கள்.

மலர், கனி, கிழங்கு, தானியம் விளைவித்தல், நூற்றல், நெய்தல், சாயம் போடல், சட்டிபானை செய்தல், பஞ்சலோக வேலை, மரவேலை, கட்டிட வேலை, பசுக்காத்தல், கல்வி பயிற்றல், கலையாராய்ச்சி—முதலிய எத்தனையோ வேலைகள் அங்கே அடக்கமாக நடக்கின்றன.

தருமவனம் ஒரு பெரிய சக்தி நிலயம். இதிலுள்ள சாதகர் சக்திபெற்ற கருமவீரர். அவர்கள் வாழ்வு முழுதும் பொதுநல வேள்வி தான். அவர்களிற் சிலர் சுற்றியுள்ள கிராமங்களுக்குச் செல்வர். திவ்ய நாமங்களைப் பாடிப் பஜனை செய்வர். கூட்டம் சேர்ந்ததும் இனிய கதைகள் மூலம் ஜனங்களுக்கு நல்ல விஷயங்களைச் சொல்வர். குடிசைத்தொழில்கள் பயிற்றுவர்; சுகாதார வாழ்வை விளக்குவர். சாதகரைப் பார்த்தே ஜனங்கள் சுகாதாரம் அறிவர். முதன்மையாக 100 வீட்டுக்கு ஒரு பள்ளிக்கூடம் வீதம் சாதகர் கிராமப் பள்ளிக்கூடங்கள் நடத்தினர். அதற்கு ஆசிரியர்களைப் பயிற்றினர், கிராமவாசிகளுக்குப் பயிர்த்தொழிலைப் புதிய முறையிற் செய்யப் பயிற்றுவர்; இராட்டினம் தறி, முதலியவற்றைக் கொடுத்து, ஆடை தயாரிக்கச்செய்வர்: கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி, அதில் கைத்தொழிற் சாமான்களைப் பெற்றுக்கொண்டு தொழிலாளர் பிழைப்பிற்கு வேண்டியதைத் தருவர். கல்வி, தொழில், சுகாதாரம், சன்மார்க்கம்—இந்த நான்கும் சாதகர் கிராமங்களில் பரப்பி அரியதொண்டு செய்தனர். அத்துடன் குஸ்தி, சிலம்பம், எதிரியை வீழ்த்தும் வீரப்பயிற்சிகளும் தந்தனர். தர்மபலம் சரீரபலம், மனோபலம், புத்திபலம், தனதான்ய சௌபாக்கியம், எல்லாம் சேர்ந்து மனிதவாழ்வை இனிதாக்க முயன்றனர்.

III. கதை சொல்லுங்கள்.

சிந்தாமணி பாரதமணி சுவாமிகளின் அன்பில் ஈடுபட்டான்; அவருக்குத் தொண்டு செய்வதே உய்வெனக் கருதினான். சிந்தாமணியின் ஒழுக்கத்தை மெச்சி, சுவாமிகள் அவனைத் தமது காரியத்தில் அமர்த்தினார். சுவாமிகளின் உபதேசக் கதைகளை எழுதுவது, வெளியிடுவது, கடிதங்கள் எழுதுவது, படிப்பது, பார்க்கவந்த பேரைப் பேட்டி செய்து வைப்பது—இவை அவன் வேலை. "என்ன செய்வேன்!" என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த சிந்தாமணி, "இனிச்செய்ய வேண்டியதொன்றுமில்லை; குருபாதமே துணை" என்று நிம்மதியாயிருந்தான்.

குருதேவர் அவனுக்கு அரிய உபதேசங்களைச் செய்தார். எல்லாம் கதைகள் மூலமே. அந்தக் கதைகளை எழுதி, அச்சிட்டுத் தரும சாதகர் நாடெங்கும் பரப்பினர். அதனால் ஆயிரக்கணக்கான மாந்தரின் வாழ்வு திருந்தியது.

மானஸபுரி அசுரருக்குக்கூட அக்கதைகளில் கவனம் சென்றதென்றால் வேறு சொல்வானேன்? ஒருநாள் அந்தித்தியானம் முடிந்த பிறகு நிலா வெளிச்சத்தில் எல்லாரும் அமர்ந்தனர். அன்று சில சாதகர் மானசபுரிக்குச் சென்றுவந்து அங்கே நடக்கும் அட்டூழியங்களையும் ஜனங்கள் படும் துயரையும், காமன், மோகன், மதன் ஆகிய மூவரின் அகம்பாவ நாடகத்தையும்பற்றிச் சொன்னார்கள். சிந்தாமணி, சுவாமிகள் காலைப் பிடித்துக்கொண்டு "தெய்வமே, இந்த மூர்க்கர் என் பிள்ளைகள்; சொல்ல வெட்கமாயிருக்கிறது; ஒன்று அவர்கள் திருந்தவேண்டும்; இன்றேல் நான் உயிர் விடவேண்டும். அங்கே என் பிள்ளைகள் செய்யும் அக்கிரமம் சகிக்கவில்லை. சுவாமிகள் கருணையே அவர்களைத் திருத்தவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான்.

"சிந்தாமணி, அன்பர்காள், அதற்கேற்ற காலம் வந்துவிட்டது. நீங்கள் பதினைந்து

சாதகர் மானசபுரிக்குச் செல்லுங்கள். அங்கே ஒரு கலாபவனம் கட்டுங்கள்: தருமம், ஞானம், பக்தி என்றால் அவ்வூர் நாஸ்திகர் கேலி செய்வர். உலகில் பாட்டும், கூத்தும், பரதமும், பெண்ணழகுமே அவர்கள் இன்ப மெனக் கருதுகிறார்கள். ஆதலால் சன்மார்க் கக் கதைகள், பாடல்கள், நாடகங்கள், நவ ரச பாவனைகளுடன் கூடிய பக்தி பரவச நாட்டியங்கள், இவை கலா பவனத்தில் நடக்கட்டும். பழைய புராணங்கள் வேண் டா. அவை அவர்களுக்கு வேப்பங்காயா யிருக்கும். தற்காலத்திற் கேற்றபடியே கதை, பாட்டு அமைக. ஊரார் மனம்போ லச் சென்று அவர்களை வழிக்குக் கொண்டு வரலாம். மனிதன் எப்படி வாழவேண்டும் என்று அடக்கமாக வாழ்ந்து காட்டுங்கள். அந்த மூன்று பேரிடமும் புன்னகையுடன் பேசுங்கள். நீங்கள் காஷாயம் கட்டிச் சென்றால் "விரட்டுடா ஆண்டியை" என்று அவர்கள் கல்லெறிந்து ஓட்டுவார்கள். காலத்திற் கேற்றபடியே நமது கைந்நூலா டையை உடுப்புக்களாகத் தைத்து அணியுங் கள். அவர்களுக்குப் பிரியமான ஆங்கிலத் தில் பேசி வசீகரித்துத் தமிழ்க்கதை பாடல் நாடகங்களில் ஈடுபடுத்துங்கள். அவர்கள் பெண் மோகம் கொண்டவர்கள். பெண் ணில்லாதவரைப் பேடி யென்பவர். ஆத லால் நீங்கள் தருமபத்தினிகளுடனே சென்று பரிசுத்தமான இல்லறத்தைப் பயின்று காட்டுங்கள்.

திருக்குறள், கீதை இரண்டையும் வாழ்ந்து காட்டுங்கள். மற்றப்படி உங்கள் உத்தே சம் எதையும் சொல்லாதீர்கள். சீர்திருத்த வந்திருப்பதாகவும் வாயசைக்கக்கூடாது. நாம் யாரையும் வலிந்து திருத்தமுடியாது. நம்மைப்பார்த்து அவர்களாகத் திருந்தட் டும். பாமரஜனங்களிடையே செல்லுங் கள்; கல்வி பரப்புங்கள். ஊன், மது, விப சாரம், சூதாட்டம், கோர்ட்டு வழக்கு, இவை நீங்கச் சன்மார்க்கப் பாடல் பாடுங் கள். இனியகதை சொல்லுங்கள். நீண்ட பிரசங்கம் தேவையில்லை. ஒரு இனிய பாடல் ஆயிரம் பிரசங்கத்தின் பயனைத்தரும். சேரிகளிலும் குடியானவர் தெருக்களிலும் சன்மார்க்க கீதங்களைப் பாடி நடனமாடுங் கள். தெருக்கூத்தாடுங்கள். ஏழை எளிய வருக்கு உழைப்பும் பிழைப்பும், உண்டுடை க்கிடைக்க வழிசெய்யுங்கள். சன்மார்க்கி களைச் சேர்த்து, சாதனத்திற்காக இங்கே அனுப்புங்கள். உங்கள் பத்தினிமார் வீடு வீடாகச் சென்று பெண்களுக்கு இராக தாளத்துடன் நல்ல பாட்டும், கதைகளும் சொல்லித் தரட்டும். மனைவியர் மக்களுக்கு அப்பாட்டும் கதையும் சொல்லட்டும். அந்த மூன்று பிள்ளைகளுக்கும் செய்தி எட்டும். அவர்கள் ஒற்றரால் உங்களை அறிவர். பாட்டு கதைகளைப் படித்தே தீருவர். அவர்களுள்ளும் அந்தர்யாமி இருக்கிறான். அவன் மற்றதைச் செய்வான்.

நீங்கள் காலை மாலை, இரவு எப்போதும் அந்த மானஸபுரி, சன்மார்க்கபுரியாக வேண்டும் என்று தியானம் செய்யுங்கள். மூன்றே மாதத்தில் அதிசயமான பயன் கிடைக்கும். அவர் கதைகள் தினம் ஒன்றாக அங்கே வரும்...... பாடல்களும் வரும்...... காரியசித்திபெற்று வாருங்கள். இறைவன் உங்கள் துணையாகுக" இவ்வாறு பேசி ஆசி கூறி, பாரதமணி சுவாமிகள் பதினைந்து சாதகரை அனுப்பினார்.

IV. கலா பவனம்

மானஸபுரியில் சாதகர் கலா பவனம் கண்டு சுவாமிகள் சொன்னபடியே தொண்டு செய்தனர். சுவாமிகள் அருளிய கதைகள் ஊரார் உள்ளத்தை வசீகரித்தன; காலநிலை அது திருந்தும் வகை இரண்டையும் ஊருக் கேற்றபடி விளக்கியதால் அவற்றைக் காலக் கண்ணாடி என்னும் சிறு மலர்களாகச் சாதகர் வெளியிட்டுப் பரப்பினர். சுவாமிகள் பாடல்கள் ஜனங்கள் உயிரிற் கலந்தன. காமனும் மோகனும், மதனுங்கூட சுவாமி கள் கதைகளை ஒற்றர் சொல்லக்கேட்டு, மேன்மேலும் படித்துச் சிந்தித்தனர்.

ஒருநாள் காமன் மனைவி சுவாமிகள் எழு திய ஒரு கதையைக் கணவனிடம் சொல்லி "இனி நாம் திருந்தவேண்டும். அடிகளின் சாதகர் இங்கே கலா பவனம் அமைத்திருக் கிறார்கள். அங்கே சென்று வந்தால் பய னுண்டு" என்றாள். காமன் கதை கேட்டான்; கலா பவனம் சென்றான். ஆடல் பாடல் அழகு, நாகரிகம், புதிய கதைகள், புதிய கலை விளக்கம் எல்லாம் கண்டு காமன் தன் சகோதரருடன் கலா பவனத் தொண்டில் ஈடுபட்டான். அங்கிருந்து வரும் கதைகளைத் தன் செலவிலேயே ஊரெங்கும் பரப்பினான். ஒரு சாதகரைத் தன்னிடம் தினம் வரச் சொல்லி அளவளாவினான். கலையும் கதையும் கல் நெஞ்சையும் உருக்கின. நாளடைவில் மூன்று கொடியரும் பாரத மணியின் அடிய ரானார். மானஸபுரியும் சன்மார்க்க புரியா னது. சிந்தாமணியின் கவலையும் தீர்ந்தது. இவ்வளவு நன்மைகள் செய்த காலக்கண் ணாடிக் கதைகளை வரிசையாகச் சொல்லு கிறேன். படித்துச் சிந்தித்து நடந்து, மனித வாழ்வைப் பெருமைப் படுத்துங்கள். முதன் முதல் காமனுக்கு விழிப்பைத் தந்த கதை யைத் தொடங்குகிறேன். (தொடரும்)

பாகவத நாடகம்

டாக்டர் வே. ராகவன்

வஸந்த காலம்; வைகாசி மாதம். மாங்கொம்புகள் எல்லாம் குலை குலையாய்க்காய்த்துத்தொங்கிக்கொண்டிருந்தன; நாற்புறமும் மரப்பச்சையெல்லாம் பூத்துப் பலவிதமான வர்ணங்கள் பாய்ந்திருந்தன; கொன்னை சாட்டை சாட்டையாய்ப் பூச்சரங்கள் செறிந்த பொன்னாய் நின்றது. மேல்காற்றும் கிளம்பி, குடகில் குமுறும் கார்களையும், காவிரியில் மண்டப்போகும் நுரைசூடிய வண்டல் வெள்ளத்தையும் குறித்தது. சில நாட்களில் நீர் பாய்ந்து வயல்களையெல்லாம் பச்சையும் பவுனுமாய் மாற்றிவிடும்.

வஸந்தகாலம்; வைகாசி மாதம். ஓடும் கல்பனையில் எழுந்த சிறு கவியேபோல், காவிரிக் கிளையொன்றின் மேலெழுந்த மங்கலம் என்ற சிறு கிராமம் ஒரே பரபரப்பாய் இருந்தது. ஸம்ப்ரதாயமாய் அவ்வூரில் நடந்துவரும் பாகவத நாடகத்தைப் பார்ப்பதற்காகத்திரண்டிருக்கும் விருந்தாடிகளாலும் தேசாந்தரிகளாலும் ஒரே நெருக்கமாயிருந்தது. ஏதோ கிராமச் சச்சரவால் அதுவரையில் கேள்விப்படாத முறையில், முதன்முதலாய் அவ்வாண்டு நாடகங்கள் நடத்தப்படாமல் விடப்பட்டன. நாடகமே அவ்வருஷம் இல்லாமல் போய்விடுமோ என்றுகூடத் தோன்றிற்று. ஆனால், கடைசியில் எப்படியோ இடையூறுகளைத் தாண்டி, கடைசிநாள் நாடகத்தை மட்டும் நடத்தக் கிராமத்தார் ஸமாளித்தனர்.

தூரத்தில் ஆற்றின் கரை மேட்டிலிருந்து பார்த்தால், மங்கலம் என்ற கிராமம் ஒரு தென்னந்தோப்பெனத்தான் தோன்றும்; நெருங்கினால், கிராமத்திலுள்ள இரண்டு மூன்று தெருக்களுக்கும் வீடுகளுக்கும் மேல் ஊரின் வாழ்க்கைக்கே தலைமை வகிப்பது போல், உயர்ந்து நிற்கும் கோயில் கோபுரம் தென்படும். கோயிலுக்குள் சோழவரசர்கள் காலத்துத்தாண்டவபாலகிருஷ்ண விக்ரஹம் ஒன்று; அதை ஊரார் அனைவரும் தம்தம் குழந்தையெனவே கருதிவந்தனர். கோயிலும் அவரவர் வீடுபோலவே இருந்தது; ஒருவரும் தாம் தோலும் ரத்தமுமுள்ளவர், பாலகிருஷ்ணன் லோஹவிக்ரஹம் என்று எண்ணவேயில்லை. சுற்றியுள்ள நிலங்களுடன் இந்தக் கிராமத்தைத் தஞ்சை நாயக்கமன்னன் ஒருவன் ஸங்கீத, நாட்டிய நாடகக் கலைகளிலீடுபட்ட பல பிராம்மண குடும்பங்களுக்கு ப்ரம்மதேயமாய்க் கொடுத்தான். இங்குள்ள பிராம்மணர் அழகாயிருப்பர், குழந்தைகள் ராக ஞானத்தோடு பிறக்கும்; ரத்தத்தில் லயம் ஓட, காலும் கையும் ஆச்சர்யமாய்ப் பேசும்.

சாகுபடியானதும், தங்கள் மனப்பாங்கைப்போல் விசாலமான தம் வீட்டுத்திண்ணைகளில் வீற்றிருந்து, மங்கலத்துப்பிராம்மணர் தம் இசைக்கலையையும் நாட்டியக்கலையையும் அப்பியஸிப்பர். பெரியோர் சிறியவருக்குக் கற்பிப்பர்; சிறியவர் குழந்தைகளைப் பழக்குவர். முதிர்ந்தவர் நந்திகேச்வரரின் அபிநயதர்ப்பணத்தை ஆராய்வர், சிறுவர் காளிதாஸ நாடகங்களைப் படிப்பர். பங்குனியில் ஒத்திகைகள் துவங்கும். பின், வைகாசி வந்ததும் வஸந்தோத்ஸவம். வருஷம் முழுதும் கிராமத்தார் வாழ்வது இவ்வஸந்தனுக்காகவே என்று தோன்றும். வைகாசியில், சந்திரன் பூரித்துவரும் நாட்களில், தாண்டவமூர்த்தியான பாலகிருஷ்ணனுக்கு வஸந்தவிழாவைக் கொண்டாடுவார்கள். ஒரு பக்ஷம் கொண்டாட்டம்; பகலில் ஸமாராதனை, இரவில் கேளிக்கை. பண்டைக்காலங்களில் தஞ்சை மன்னன் இங்கு முகாம் போட்டு, இரவு முழுதும் விழித்து, மங்கலம் ப்ராம்மண மேளத்தின் தலைசுற்றும் பாட்டையும், உள்ளம் குதித்தெழும் ஆட்டத்தையும் பார்ப்பது வழக்கமாம். அரசன் வந்து வீற்றிருந்தாலும், அரசன் ஸபா நாயகன் அல்ல; பாலகிருஷ்ணன் நாயகனாக வீற்றிருக்க, அவருக்கு முன், ஸன்னிதியில் பந்தல் போட்டு, நாடகம் நடக்கும்; இவ்வுயர்ந்த நாட்டியத்தைப் பாகவதர்கள் அந்தப் பகவானுக்கு நிவேதனமாய் அர்ப்பணம் செய்து வந்தனர்.

நல்லது நீடித்தும், அழகு அழியாமலும் இருக்க உலகப்போக்கு நாளடைவில் இடம் கொடுக்காமல் கெடுக்கும். மங்கலத்தின் மங்களத்தைக்கெடுத்தவர் அவ்வூர் பாகவதர்களுக்கெல்லாம் பெரியவராயிருந்த கிழநாணு என்ற நாராயண பாகவதர். நாடகத்தின் பின் மேளத்தின் தலைமையை வஹித்து நாடகங்களை நடத்திவைக்கும் சூத்ரதாரஸ்தானம் அவர் குடும்பத்தைச் சார்ந்தது.

நாணுவுக்கு முன்னுக்கு வரும் இளைஞரைக் கண்டால் ஆகாது. திடீரென ஒரு வருஷம் தம் அருகில் மேளத்தில் கலந்து கொண்டு பாடிவரும் சிறுவன் ஒருவனைத் தமக்குப் போட்டியாய் முன்னுக்கு வந்துவிடுவான் என்று நாணு நினைத்தார். ஹரி என்ற இந்தப் பாலன் மங்கலம்மட்டுமல்லாமல் சுற்றுக் கிராமங்கள் எல்லாவற்றின் பேரன்பையும் ஸம்பாதித்திருந்தான். சிறுவனும் அவன் நாடகங்களில் வரும் குழந்தை வேஷங்களைத் தரித்து, பார்க்கவந்த ஒவ்வொருவருடைய ஆசீர்வாதத்தையும் பெற்றிருந்தான். "பாலகிருஷ்ணன் தீர்க்காயுஸைக் கொடுக்கணும்; நீ பெரியவனகி ராஜ வேஷம் போட்டு ஆடிப்பாக்கணும்" என்று கிழவரும் கிழவிகளும் வேண்டிக்கொள்வார்கள். அவ்வூரிலேயே இளம் மேதையைப் பகைத்தவர் கிழநாணு ஒருவரே. மாறுபட்ட எண்ணங்கள் கொண்ட முதல் மங்கலத்தார் அவரே. வெளியே ஸம்பந்தம் செய்து, தம் மைந்தனை மாமனர் ஊருக்கு அனுப்பி, அதிக லாபம் வரும் வேறு தொழில்களில் ஈடுபடச் செய்தவர் நாணு; இப்படி வெளியே குடியேறுவது, வேறு தொழில் புரிவது என்பதை மங்கலத்தார் மிகவும் இழிவாய் எண்ணினர். நாணு அரசன் கொடுத்த ஸாதரா, தோடா, சங்கிலி எல்லாவற்றையும் அணிந்துகொண்டு தஞ்சை மன்னன் தாம் தான் என்று மேடைமேல் நடைபோடுவார். தம்மைத் தாமே புகழ்ந்து கொள்ளுவார்; பையன்களை இடைவிடாது அங்குமிங்கும் ஏவவிட்டுக்கொண்டிருப்பார்; தாம்போகும் போதுதிண்ணையில் உட்கார்ந்திருப்பவரைத் தூற்றுவார். மொத்தத்தில் நாணு மங்கலத்தின் மனதிற்கே ஒரு பாரமாயிருந்துவந்தார். மேளத் தலைவராய் நாணுவே நாடகத்தைத் தொடங்கி, பாட்டுக்களை எடுத்துக் கொடுத்து, முக்ய விடங்களில் தாமே நடிகருடன் கூடப் பாடி, புதிதாய்ப் ப்ரவேசமாகும் பாத்ரம் ஒவ்வொன்ருேடும் சில முன்னுரைகளையும் செய்வது வழக்கம். நடுவே செய்யப்படும் ஹாஸ்ய கட்டங்களில் தமது நகைத் திறனை வெளியிடுவதில் அவருக்கு மிகவும் ஆசை; திடீரென ஏதாவது பேச்சுக்களைக் கிளப்பி நாடகத்தின் போக்கைத் தடைசெய்து இப்படியும் அப்படியுமாய் இழுத்துவைப்பார். கிராமத்தார் எல்லோருமே இவரையும் இவருடைய வழிகளையும் வெறுத்தாலும், "மேள கர்த்தா" என்ற ஸ்தான கௌரவத்தால் தம் மனதை வெளியிடத் தயங்கினுர்கள்.

ஹரி வயதுவந்து மிகவும் கவர்ச்சியான மேனியை அடைந்தான்; அவன்போல் அழகிய ஆணே பிறந்ததில்லை; அவனைப் பார்த்துப் பார்த்து ஆண்களெல்லாம் தாம் பெண்ணுகப் பிறக்கவில்லையே என்று ஏங்கினர். அவன் இசையில் மோஹம்கொண்டு அரசன் அவனையழைத்து அடிக்கடி தஞ்சையில் தங்கவைத்துக்கொள்வான். ஹரிக்குப் புகழுக்குமேல் புகழ் மண்ட, கிழ நாணுவுக்குப் பொச்செரிப்பு மண்டிக்கொண்டுவந்தது. கிராமத்திற்குள்ளேயே ஒருவருக்கொருவர் கொடுத்துக் கொள்ளும் ஸம்பிரதாயத்தை ஒட்டி ஹரியின் தகப்பனுர் நாணு பாகவதரின் கடைசிப்பெண்ணை தம் மைந்தனுக்காகக் கேட்டதும், நாணு மறுத்துவிட்டார். ஸமயம் வாய்த்தபோதெல்லாம் ஹரியைத் தட்டுவதென்று வைத்துக்கொண்டார் நாணு; நன்ருய்ப் பாடும்போது குறைத்துப் பிடிக்கிருன் என்பார்; கல்பனையாய்க் கை பிடிக்கும்போதும் சாஸ்த்ர சுத்தமில்லை என்பார்; ஆடும்போது வேண்டுமென்று காலத்தை விரட்டி ஒத்திகைபோருது என்பார்.

நாம் பேசிவரும் வருஷத்தில் பங்குனியில் ஒத்திகைகள் ஆரம்பிக்கும்போதே ஏதோ கிராமத்தாருடன் சில்லறைத் தாங்கல் ஒன்றைத் தாமாய் விளைவித்துக்கொண்டு, தம் மகன் இருந்துவரும் ஸம்பந்தியூருக்குப் போய்விட்டார். திரும்பிவரவே இல்லை. கொழுந்துகள் முற்றி பூமணம் மாறி, வடுக்கள் கண்டு, காய்கள் தொங்க ஆரம்பித்தன மாமரங்களில். சித்திரை வந்தும் நாணு பாகவதரின் சித்தம் மாறவில்லை. உத்ஸவம் நெருங்கிவிட்டது. கேளிக்கை கிட்டக்கிட்ட, பாகவதரின் நடத்தை கெட்டுக்கொண்டேவந்தது. கல்யாண காலம், பாகவதர் இருக்கும் கிராமத்தில் பெரிய மிராசுதார் ஒருவர் தம் வீட்டுக் கல்யாணத்தில் கச்சேரிக்காக ஹரியை வரவழைத்திருந்தார். கச்சேரியாகிப் பல நாட்களுக்கு அந்தக் கிராம முழுதுமே திண்ணைகளிலும், கோயிலிலும், குளக்கரையிலும் ஹரியின் பாட்டு ஒன்றைப்பற்றியே பேச்சு; அவன் பாடிவிட்டுப்போன ராகங்கள் வீடுகளிலும் தோப்புக்களிலும் தொங்கிக்கொண்டிருந்தன.

வைகாசியும் வந்துவிட்டது. ஒருநாள் காலை, பலமான ஆஹாரத்தைச் செய்துகொண்டு, வாய் நிரம்ப வெற்றிலை புகையிலைகளைக் குதப்பிக்கொண்டு, ஸம்பந்தி வீட்டுத் திண்ணையில் நாணு பாகவதர் உட்கார்ந்திருந்தார். மங்கலம் பட்டாமணியம் வந்தார்.

"பகவத் கைங்கர்யம் இது; இதில் ஒருவருக்கொருவருள் துவேஷத்திற்கு இடமில்லை; நாளாகிவிட்டது; உடனே புறப்படவேண்டும்",

'பட்டாமணியப் பஞ்சு! யார் உன்னை இங்கு என்னிடம் அனுப்பினார்கள்?"

"கிராமப் பஞ்சாயத்துக் கூடி, தங்களை அழைத்துவரும் பெரிய தொண்டை என்னிடம் ஒப்பித்தனர்."

"ஒத்திகைகள் எப்படி நடக்கின்றன?"

"நடந்து வருகின்றன."

"நடத்துவது யார்?" ஒத்திகை நடக்கிறதென்று கேள்விப் பட்டதும் பாகவதருக்குத் தூக்கி வாரிப் போட்டது; கண்ணில் கோபத்தீ பற்ற, "நடத்துவது யார்?" என்று என்று வெறி நாய் போல் குலைத்தார்.

"ஹரியின் அப்பா' தங்களோடே மேளத்தில் நிற்கும் பழக்கத்தால் நடத்தி வருகிறார்."

"ஹரியின் அப்பாவா! ஆ! ஏன், அவனே மேளத்தை நிர்வஹித்து, நாடகங்களையும் நடத்தட்டும். நான் மங்கலத்திற்குள் காலடி வைப்பதில்லை என்று தீர்மானம் செய்து விட்டேன்."

"நம் தாண்டவ பாலகிருஷ்ண மூர்த்தி கோபித்துக் கொள்ளுவார். தங்கள் நன்மைக்குச் செல்லுகிறேன்; சற்று யோசனை செய்யும்; கிருஷ்ணமூர்த்தி ப்ரசாதத்தை உதைத்துத் தள்ளாதேயும்."

"பயலே, உன்னைவிட எவ்வளவு வயது ஆனவன்? எனக்குத்தெரியாத கிருஷ்ணனையும் ப்ரஸாதத்தை பற்றியும் பற்றி நீ சொல்ல வந்துட்டாயோ? போடா, போய் கிராமத்துக்கு சொல்லடா, அந்த கிருஷ்ண மூர்த்தி ஸந்நிதியிலேயே வேணுமானாலும் சொல்லிக்கோ—பாகவதர் இனுமே திரும்பி வரப் போரதில்லே. இந்த வருஷமில்லே, இனிமேலேயே மங்கலத்துலே நாடகமே கிடையாது, போ."

"என்ன, நாடகமே கிடையாதா?"



வின்ஸெண்ட் கம்பெனி லிமிடெட், திருச்சி.

பிராஞ்சுகள்: மதுரை, திருநெல்வேலி, காரைக்குடி, கும்பகோணம், கோயம்புத்தூர், சேலம்.

வின்ஸெண்ட் ஸோடா, கலர், விம்டோ, ரொட்டி, கேக்குகளை எல்லோரும் தாராளமாய் வாங்கி, குடும்பத்தில் யாவருக்கும் பந்துமித்திரர்களுக்கும் கொடுங்கள். ஏனெனில், இவைகள் கடந்த 30 வருஷமாய், பொதுஜனங்களின் நன்மதிப்பை நன்ருய் அடைந்திருக்கும் **வின்ஸெண்ட் கம்பெனியாரால்** தயார் செய்யப்பட்டவை. மேலும் ஷை சரக்குகள் கல்யாணம், டீபார்ட்டி, திருவிழாக் காலங்களிலும் விருந்தினர்களுக்குச் சிற்றுண்டியாக வழங்க நேர்த்தியாய் அமைந்துள்ளன.

"நானும் வர மாட்டேன்; என் குடும்பத்துக்கு சொந்த பாத்யமான மேள நிர்வாஹத்தையும் இன்னம் ஒத்தருக்கு கொடுக்க மாட்டேன்."

"என்ன சொன்னே! பழி!"

"டேய், என்னவேணுமானலும் வெசுக்கோடா. இன்னிக்கு இப்படி நேரும்னு நான் எதிர்பார்த்ததுதான்; காலம்பரே ஆத்தங்கரைக்குப் போகரபோது மொட்டச்சி எதிரே வந்தா, பின்னுடி ஒருநாய் கொலைச்சுண்டே வந்துது!"

"இந்த அபசகுனங்கள்ளாம் ஞாபகமிருக்கட்டும்."

"ஞாபகம் என்னடா? இதோ இரண்டு நாழிலேதான் எல்லாம் உண்மையாப் போயிடுத்தே. மங்கலம் பஞ்சாயத்துதான் அந்த மொட்டச்சி! நீதான் கொலைச்சுண்டே வந்த அந்தநாய்!"

பட்டாமணியம் பஞ்சநதத்திற்குப் பாகவதரிடம் அடங்காச்சினம் எழுந்தது. கொஞ்ச நேரம் கடுமையாய்ப் பாகவதரை வெறித்துப் பார்த்தான். அவன் கண்கள் தீப்பற்றிறற்போல் தோன்றின. ஒரு நொடி பாகவதருக்கும் பயம் வந்தது; உடனே தம்மைத் தைரியப்படுத்திக்கொண்டு "அடே பஞ்சு, என்ன வேஷம் போடாமலேயே ஓனக்கு ஆவேசம் வந்தாடும்னு நெனச்சுண்டு இருக்கயோ?" என்ருர்.

மங்கல நாடகங்களில் கடைசி நாடகம் ப்ரஹ்லாத சரித்ரம்; அதில் நரஸிம்மஸ்வாமி வேஷம் பஞ்சநதத்தின் குடும்பத்தின் உரிமை; அவ்வேஷத்திலிருக்கும்போது ஒவ்வொரு வருஷமும் வேஷம் போடுபவருக்கு ஆவேசம் வருவது வழக்கம்; சற்றுநேரம் நரஸிம்மஸ்வாமியின் உக்ரம் தோன்றும்; அப்போது கர்ப்பூரஹாரதி செய்து சமனம் செய்வார்கள்.

பஞ்சநதம் சற்றுச் சும்மா இருந்துவிட்டு, திரும்பி, படிக்கட்டுகளில் மெள்ளமெள்ள இறங்கி, தெருவில் கால் வைத்ததும் திரும்பி, நாணு பாகவதரை நோக்கி "அந்த அபசகுனங்கள் ஞாபகமிருக்கட்டும்" என்று எச்சரிக்கை செய்தான். மங்கலத்தைக் குறித்து பஞ்சநதம் நடந்து வரும்போது பாகவதரின் மதியீனத்திற்காக மிகவும் வருந்தினன். கிராமம் கிட்டக் கிட்ட பஞ்சுவின் துயரம் மேலிட்டு, நடக்கமுடியாமல் கால் தாங்க ஆரம்பித்தது. தன்னை எப்படியோ இழுத்துக்கொண்டு அக்ரஹாரத்திற்குள் நுழைந்தான்; கோயிலடியில் நின்றதும் அவன் கண்களில் நீர் ததும்பிற்று. கிராமத்தார் கூடியதும், கிருஷ்ண ஸந்நிதியில் கிழ நாணுவின் வீம்பையும் அஹம்பாவத்தையும் தெரிவித்தான்.

எல்லோரும் ஒன்றும் தோன்ருமல் நிச்சப்தமாயிருக்கத்திடீரென ஹரியின் சாரீரம் எழுந்தது: "பெரியவர்களே! நாம் நாடகங்களை நடத்தவேண்டியது நம் தர்மம்; அவை நிற்கலாகாது"

ஹரி முடிக்கும் முன்னமே அவ்வூருக்கே வயதானவளான கிழவியொருத்தி கூட்டத்தின் கவனத்தைத் தன் பக்கம் இழுத்தாள். அவள் மங்கல நாடகத்துக்கே பழம் பாட்டி என்று புகழ்கொண்டவள். எல்லா நாடகங்களின் தரு, பத பத்ய, கத்யங்கள் எல்லாம் அவளுக்குப் பாடம்; அடவும் கையும்கூடச் சொல்லி வைத்துவிடுவாள். தன் முதிர்ச்சியின் கௌரவத்தோடு நாடகப் பாட்டி சொன்னுள். "நாடகங்கள் நிற்கமுடியாது; மழை பெய்யாது; பயிர் முளைக்காது; மரம் பட்டுப்போகும்; நம் பெண்கள் பிள்ளையாளமாட்டார்கள்; நோய் குடிகொள்ளும் நம்வீடுகளில்."

"வாஸ்தவம்" என்ருன் தாழ்ந்த குரலில் ஹரி.

"உண்மை, இது ஒவ்வொன்றும் நடந்தே தீரும்" என்று எல்லோரும் சொன்னுர்கள்.

"ஆனுல் என்ன செய்வது? கிழவர் பிடிவாதம் செய்கிருரே?"

"நம்ப கிராமம் பாழாப் போயிடுத்தே" என்ருர் மற்ருெருவர்.

"இல்லை, இல்லை. நாடகங்களை நடத்திவிடவேண்டும். இந்த ஸம்பவத்திற்குக் காரணம் நாணுபாகவதரல்ல நான்தான் என்று உங்களுக்கெல்லாம் தெரியவேண்டியது அவச்யம். பெரியவரின் கோபாவேசத்திற்கு மூலகாரணம் நான். முன்னுக்கு வரும் இளம் வித்வத்தைக் கண்டு அஸூயைப்படுவது மங்கலத்திலில்லாத பழக்கமானுலும், அவரைப்போல் வயதானவருக்குத் தகாத குற்றமானுலும், அவர் அதுமாதிரி அஸூயைப் பட்டுவிட்டார். உங்கள் எல்லோருக்கும் நினைவிருக்கலாம்; பங்குனியில் நாம் ஒத்திகை ஆரம்பிக்கும்போது, ஜாலராவும் கையுமாய் அவர் உள்ளே வந்து "யார் இந்த வருஷம் ஹிரண்யன்?" என்று கேட்டார்; எங்க அப்பா, என் பக்கம் கையைக்காட்டினுர்; உடனே இருவருக்கும் வாக்குத் தடித்

த்து; பாகவதர் ஜாலராவை விட்டெறிந்து வெளியே போனார், போகிறவர், "இதோடு ஸரி, இனி இந்த ஜாலராவை எடுப்பதில்லை" என்று சபதம் செய்துகொண்டே போனார். இந்தக் கோபத்திற்கும் சபதத்திற்கும் காரணம் நான். நான் வாழ்ந்து, பாடி ஆடும் வரை இந்த நாடகங்களில் வேஷம் போடும் வரை நானு பாகவதர் இதில் கலந்து கொள்ளவோ தம் குடும்பத்திற்கு உரித்தான மேளத்தை நடத்தவோ மாட்டார். நாடகம் அவரின்றி நடக்காது; ஆகையால் பொது நலத்திற்காக, இதோ இங்குக்கூடியிருக்கும் மங்கலத்தார் அனைவருக்கும், இங்கு ப்ரஸன்னமாயிருக்கும் தாண்டவ பாலகிருஷ்ண மூர்த்திக்கும் எதிரில் நான் இந்த நாடகத்திலிருந்து விலகிக் கொள்ளுகிறேன்! தாங்களும் பகவானும் அனுமதிக்க வேண்டும்."

இப்படிப் பேசிவிட்டு, கடவுளை வணங்கிப் பிறகு ஹரி நடந்தான். "அனுமதிக்கவில்லை, நாங்களும் அனுமதிக்க வில்லை, நம் பகவானும் அனுமதிக்கவில்லை, போகாதே" என்ற சப்தங்கள் கிளம்பின. காதில் வாங்கிக் கொள்ளாமல் ஹரி நடந்தான். வயல்களைத் தாண்டி ஆற்றங்கரைக்கு வந்தான், படுகையில் காற்றில் 'உச்' என்று சப்தித்துக் கொண்டிருக்கும் சவுக்கைத் தோப்பில் நுழைந்தான். தன் அங்கவஸ்த்ரத்தை விரித்து, அதன் மேல் மல்லாந்து படுத்துக் கொண்டு, வானத்தை நோக்கிய வண்ணம் இருந்தான். கிழப் பாகவதரையும், தன்னையும் மன்னிக்கவேண்டுமென்று கிருஷ்ணபகவானை வேண்டிக்கொண்டான். அவ்வருஷம் தன் நாட்டியத்தை நிவேதனம் செய்ய முடியாமல் போனதற்காகப் பகவானை மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். ஆடும் கண்ணனைக்கூவிப் பேசிப் புலம்பினான். இந்நிலையிலிருந்து அவன் எழுந்ததும் மேலே விளங்கும் சந்திரன் ஸந்த்யாகாலம் தாண்டி விட்டதைத் தெரிவிக்க, ஸந்த்யாவை உபாஸித்துவிட்டு ஹரி வீட்டிற்குத் திரும்பினான். திடீரெனத் தன் வாழ்க்கை வீணாய் போய் விட்டதாக நினைத்துக்கொண்டான்.

நாடக நாட்கள் நெருங்க நெருங்க, கிராமத்துப் பெரியோர்கள் தவிப்பாய்த் தவித்தனர். கிராமத்துப் பெண்மணிகள் வீட்டுக் காரியங்களை ஊக்கமில்லாமலேயே செய்தனர். களிப்பற்ற தோற்றம் ஒன்று கிராமம் முழுவதையும் மூட்டம்போட்டாற் போல் செய்தது. 'மங்கலத்தில் நாடகமில்லையாம்' என்று கிராமத்திலிருந்து கிராமம் வதந்தி பரவ,மூட்டமும் அதனுடன் பரவியது.

நாடக நாட்களே வந்தன. முன் வருஷங்களில் இந்நாட்களில் கிராமத்தில் எள்ளுப் போட இடமிருக்காது; இவ்வருஷமோ மங்கலத்து மக்கள்கூட வெளியேவரவில்லை; முன் இந்த ஸமயம், ஒரே ஆரவாரமாயிருக்கும்; இப்போது வண்டுகூட முனகவில்லை.

"இன்னிக்கு 'ருக்மாங்கதன்' நடந்திருக்க வேண்டும்"

"போன வருஷம், இத்தன நாழிக்கு, அதோ அந்தத் தாளடியிலே ஒக்காந்து 'உஷா' பாத்துண்டு இருந்தேன்".

"எல்லாம் ஸரியா நடந்திருந்தா இன்னிக்கி, இத்தன நாழிக்கு 'கிருஷ்ணனும் கோபிகளும்' ஆடிண்டு இருக்கணும்."

"மிருகண்டு பாத்ரப்ரவேசம் செய்யர வேளை இது"

இப்படி ஒவ்வொரு இரவும், ஆணும் பெண்ணும், கிழவரும் சிறுவரும் மேளம் கட்டும் ஸமயம் வரும்போது, ஒருவருக்கொருவர் தமக்கிருந்த பெரும் அலுப்பினால் பேசிக்கொண்டனர். அப்பெரும் அலுப்பு வீட்டிலும் கோயிலிலும் கிராமம் முழுவதிலுமே தென்பட்டது. பெரியோர்கள் குழந்தைகளை இழந்ததுபோலவும், இளம் தம்பதிகள் ஒருவரை யொருவர் பறி கொடுத்துவிட்டதுபோலவும் தோன்றிற்று.

கேளிக்கை நடக்கவேண்டிய நாட்கள் முடிந்துபோக இரண்டே நாட்கள் மிகுதியிருந்தன. பெரிய மேல்காற்று ஒன்று கிளம்பிற்று; 'உச், உச்' என்று கோயிலுக்குள் காற்றடித்து, ஏற்ற, ஏற்ற ஸந்நிதி விளக்குக்கள் அணைந்துவந்தன. தேங்காய்கள் ஸரியாய் உடைபட வில்லை. நைவேத்யத்தைக் கொண்டுவரும் பட்டர் அபிஷேக ஜலத்தில் வழுக்கி விழுந்து பெரிய மணியை அர்ச்சகர்களால் விழும்படிசெய்தார். அன்றிரவு நாடகப் பாட்டிக்குப் பித்துப் பிடித்தாற்போலாயிற்று; வீடு வீடாய் எல்லோரையும் எழுப்பிக்கொண்டு தெருத் தெருவாய் ஓடினாள், நடு நிசியில் கோயிலடியில் கிராமத்தார் கூடினர். பாட்டி பேசினாள்.

"கேளுங்கள்; இதோ ஒரு ஸ்வப்பனத்திலிருந்து எழுந்து வருகிறேன் நான். நம் பாலகிருஷ்ணன் என்னிடம் வந்து பேசினார். நம் மங்கலத்திற்குக் கொடுந் தீங்குநேரிடும். கடைசி நாடகமான ப்ரஹ்லாத சரித்ரத்தை மட்டுமாவது நடத்திவிடுங்கள்." இதைச் சொல்லிவிட்டு நாடகப் பாட்டி போய்விட்

டாள். ஒவ்வொருவரும் தம்தம் வீட்டுத் திண்ணைக்கு வந்து தூக்கத்தைவிட்டு, சிந்தனையில் ஆழ்ந்தனர்.

மறுநாட் காலை; கதிரவனின் பொன் கதிர்கள் கோபுரத்தின் ஸ்தூபிகளுக்கு முலாம் பூசிக்கொண்டிருக்கும் வேளை; கிராமப் பெரியோர் அனைவரும் நதியில் நீராடி, பாலகிருஷ்ணமூர்த்திக்கு விசேஷ அபிஷேகத்தை நடத்தி, ஸபை கூடி யோசித்தனர். பஞ்சாயத்தாரும், மற்ற முக்யஸ்தரும் சென்று, நாணு பாகவதரிடம் நல்வார்த்தை சொல்லி, கிராம நலத்தின் பொருட்டுக் கடைசி நாடகத்தை மட்டும் நடத்திவைக்கக் கேட்டுக்கொள்ளவேண்டும் என்று முடிவாயிற்று; ஹிரண்யன் வேஷத்தை ஹரியே போட்டுக்கொள்வதென்றும் தீர்மானித்தனர்.

* * *

பௌர்ணமி! மதக் களைகொண்ட ஹம்ஸம் பெரிய ஏரியில் போவது போல், பூர்ண சந்திரன் வானில் மிதந்து கொண்டிருந்தான். வயல்களின் ஒற்றையடிப்பாதைகளின் வழியாய் மெல்லியமாதர்களும் துள்ளும் பையன்களும் ஒருவரையொருவர் தாண்டித் தாண்டி மங்கலத்தைக் குறித்து ஓடிவந்துகொண்டிருந்தனர். ஜனக்கூட்டம் வயற்பாதை வழியே வளைந்து வளைந்துபோவது, வெண்ணிலா பூத்த வயல்களுக்கிடையே நீல நதியொன்று ஓடுவது போல் தோன்றிற்று. சோட்டிற்கு வெளியே, காய்ந்த சேற்று முனைகளில் காலை வைத்து நொந்து மங்கலத்து நாடக ஸம்பந்தமான கதைகளைப் பேசிக்கொண்டு கிழங்கட்டைகளும் வந்தனர்.

"இதுவரைக்கும் நின்னதுன்னு கிடையாதம்மா."

"ஆமா; நாடகம் ஆடாட்டா கிராமத்துக்குக் கெடுதல்லுனு சொல்லிக்கரா,"

"நாணு ஊரைவிட்டுப் போரதுனு துணிஞ்சானே, அன்னிக்கே கிராமத்துக்கு நல்லகாலம் இல்லேனு எனக்குத் தெரியும்."

"நாணுவுக்குத்தான் நல்லகாலமில்லே."

"நீ சொல்லறதெல்லாம் ஸரி; இந்த மங்கலத்துலே இந்த பாகவதாள்ளே இப்படி நாணுவப்போலே இதுவரைக்கும் ஒத்தரும் இருந்ததே இல்லே; நானும்தான் கொழுந்தையாயிருந்த காலத்துலேந்து பாத்துண்டுருக்கேன்."

"பகீரதப்ரயத்னம் பண்ணின்னு இந்த கடசிநாள் ஆட்டத்துக்குமட்டும் அந்த கிழத்தை இழுத்துண்டு வந்திருக்காளாம்."

"ப்ரஹ்லாதன் இல்லே கடைசிநாடகம்?"

"ஆமாம் ஹிரண்ய நாடகம்னுகூடச் சொல்லுவா. இந்நாடகம்தான் ரொம்ப விசேஷம். எல்லாத்தையும்விட நன்னா இருக்கும். ஹரி ஹிரண்யன் போடரான். ஆச்சரியமாயிருக்கும். இத்தனை வருஷமா இந்த நாடகத்தைப் பார்த்துண்டுவரேனே, ஹரியப்போல ஒத்தனை நான் பாத்ததே இல்லே"

மற்றொரு கோஷ்டியார் நாடகத்தின் முடிவில் தோன்றும் நரஸிம்மஸ்வாமியின் வேஷத்தைப்பற்றிப் பேசிக்கொண்டு வந்தனர்.

"பொழுதுவிடிய ஆரம்பிச்சுடும் ஸ்வாமி வரத்துக்கு."

"நரஸிம்ம வேஷம் போடரது யாரோ?"

மனித சமூகத்திற்கென நூதன ஆராய்ச்சி

மேதாவின்

ஈரல் கட்டி நிவாரணி

நீண்ட ஆராய்ச்சியின் பயனாக இப் புதிய சிகிச்சை முறையைக் கண்டு பிடித்துள்ளோம். ஈரல் கட்டியைப் போக்கடிக்க கைகண்ட மருந்து.

குழந்தைகள் வியாதியைக் குறித்து கவலைப்படாதீர்கள்.

மேதாவின் ஔஷதம் வைத்திய உலகில் ஓர் புரட்சி உண்டுபண்ணிவிட்டது.

கே. எஸ். மேதா & கோ.,
மதராஸ்.

"பட்டாமணியம் பஞ்சநத பாகவதர் தான் வழக்கம்."

"ரொம்ப ஆசாரமாயிருக்கரவன்; பகல் முழுதும் பட்டினிகிடந்து, பாதி ராத்திரிக்கு மேல் ஸ்னனம் செஞ்சுட்டுதான் நரஸிம்ம 'முகடு' போட்டுப்பான்.

"அதான் அவனுக்கு ஆவேசம் வந்தூடரது."

"ஸ்வாமி 'முகடு' அவாத்துலே பூஜையிலே வச்சுருக்கும்; நாடகத்தில் போட்டுக்கரத்துக்கு முன்னே கோவில்லே ஸ்வாமியோடு பூஜைலே வச்சுருப்பா."

இப்படிக் கிழவர்கள் நீட்டிப் பேசிக் கொண்டுவரும்போது, சில சிறுவர் வேகமாய்ப் பேசிக்கொண்டே கிழவர்களைத் தாண்டிக்கொண்டு போனார்கள். அன்றிரவு நிகழப்போகும் சில விந்தைகளை, அவர்கள் முன்கூடிப் பேசிக்கொண்டார்கள்:

"ஏண்டா! கிழ நாணு ரொம்ப ரொம்ப அழிச்சாட்யம் செஞ்சுதாமே."

"முசுடு, அதைக்கண்டாலே எனக்கு எப்பவுமே புடிக்காது."

"சாஸ்த்ரம் தெரிஞ்சவர், ஆனால் மனசு கெட்டது. இந்த கிராமத்துலேயே மொதல் மொதலாய் அவர் புள்ளை ஒத்தந்தான் வெளியூர்போய் வேற தொழில் பாத்துண்டுருக்கான்."

"மொதல் மொதலாய் அவர்தான் இந்த ஊர்லே சிறிசுகளைக் கண்டு கரிச்சுக் கொட்ரது"

"இன்னிராத்திரி கவனிச்சுப் பார்க்கணும்; ஹிரண்யனோடு ஏதாவது தகரார் பண்ணிண்டே இருக்கும் பார்."

"ஹரி ரொம்ப நல்லவன்; பெரியவாகிட்ட மரியாதையா நடந்துப்பன்."

"நீ வேணு பாரேன்; பெரியவர் ஸமயம் ஆம்பட்டபோதெல்லாம் அவனைத் தட்டிண்டே வரார இல்லையா பார்."

* * *

கோயிலடியில் ஈ நுழைய இடமில்லை. ஸ்வாமி புறப்பாடு ஆயிற்று. நாடக மேடைக்கெதிரில் கோபுர வாயிலில் பகவானை எழுந்தருளப் பண்ணினர்கள். துத்தி, புல்லாங்குழல், மிருதங்கம் எல்லாம் ச்ருதி சேர்ந்து ஸஜ்ஜமாயிருந்தன. கூட்டத்தின் சப்தத்தை அடக்கிக்கொண்டு ஜாலராவை மாலையாகப் போட்டுக்கொண்டு நாராயண பாகவதர் ரங்க மத்தியில் தோன்றினர். அவருக்கு நடக்கவேண்டிய மரியாதைகள் நடந்தன. முதலில் ஸ்வாமி ப்ரஸாதத்தை வழங்கி, மாலை போட்டனர்; பிறகு ராஜாங்க ஸம்பாவனை கொடுக்கப்பட்டது; அதன் மேல் கிராம ஸம்பாவனை சந்தனம், புஷ்பம், புதுவேஷ்டி இவைகள் அளிக்கப்பட்டன...

பாகவதர் நாட்டையை எடுத்து ஜாலராவைத்தட்டி, தோடய மங்களத்தைப் பாடினர். பின்பு கோணங்கியை அழைத்தார். குதித்துவிட்டு, பாகவதருடன் சற்றே பேசிவிட்டு, அவருடைய பரிகாசங்கள் சிலவற்றைப் பெற்றுக்கொண்டு மறைந்தான்.

க்ரந்தத்தைப் படிக்கும் பாகவதர் ஸ்ரீ வத்ஸகோத்ரத்திலுதித்த வேங்கட கிருஷ்ணர்யரின் புத்ரரான வேங்கடராம சாஸ்திரி செய்த 'நாட்டிய நாடக'மான ப்ரஹ்லாத சரித்திரம் நடக்கப்போவதையும் அக்கதைச் சுருக்கத்தையும் ராகமாலிகையில் பாடினர்.

பின்பு ப்யாகடை: பிள்ளையார் பாத்ரப்ரவேசமாகி, பூஜையைப் பெற்றுக் கொண்டு அந்தர்தானம் ஆனர்.

ஹிரண்யகசிபுவின் கட்டியக்காரன் வந்தான். திரிலோக கண்டகனை ஹிரண்யனின் வரவை எச்சரிக்கை செய்தான். ஸபை நிசப்தமாயிருந்தது. ஹரி ஹிரண்ய வேஷத்தோடு வரப்போகிறன். பாகவதர் தாளத்தைத் தட்டினர்.

மேளத்தில் தேவகாந்தாரியில் பாத்ரப்ரவேசதரு எடுத்துப் பாடப்பட்டது. இரண்டு பேர்கள் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் திரையின் பின்னிருந்து, இருபுறமும் அசுரர்கள் கைலாகு கொடுத்துக் கொண்டுவர, ஹரி ஹிரண்யனாய்ப் ப்ரவேசம் செய்தான். கார்வைகளில் அசுர சிப்பந்திகளின் மேல் சாய்ந்து நின்று, முடுக்கான இடங்களில் கம்பீரமாய் அடவு போட்டுக்கொண்டு, அவன் செய்த முன் பின் ஓட்டம் அக்கூட்டத்திலிருந்த பெரியவர் சிறியவர் எல்லாரையுமே ஏதோ வேறொரு உலகில் தூக்கிக் கொண்டுபோய் வைத்தாற்போல் செய்தது. பாகவதர் முகத்திலிருந்து தருவின் மற்றப் பாகங்கள் வரவில்லை, தாளமும் ஓய்ந்தது. ஹரியின் ஆட்டத்திலிருந்த மெய்மறப்பினல் பாகவதரின் ஓய்வை ஒருவரும் கவனிக்கவில்லை. மேளத்தில் பக்கத்திலிருந்த மற்ற

வர் பாட்டை நிர்வஹித்து விட்டனர். வெகு விஸ்தாரமாகவும், விந்யாஸமாயும் ஹரி ஆடி அபிநயித்தான். அடாணாவில் கயாது என்ற ராணிலீலாவதி பாத்ரப்ரவேசம் ஆயிற்று. பைரவியில் 'பூமி முழுதும் ஹரிமயமாய் பார்க்கும்' குழந்தைப்ரஹ்லாதனின் ப்ரவேசமாயிற்று. அசுரகுரு சுக்ராசாரியார் வர, ஆனந்த பைரவியில் அவரை ஹிரண்யன் வரவேற்று உபசரித்தான். குருவின் தூண்டுகோலின்மேல் ஹிரண்யன் பகவானைப்பகைக்கஆரம்பித்தான். கண்டாராகத்தில் அழகியபதத்தில் லீலாவதி 'ஹரி மீது வைரம் ஏன்' என்று பாடி வேண்டிக் கொண்டாள். நடுநடுவே சில ஹாஸ்யக் காட்சிகளுடன் கதை போய்க்கொண்டிருந்தது. தன் மைந்தன் ப்ரஹ்லாதன் தன்னைத் தொழாது, ஹரியைத்தொழுது வருகிறானென, அவனைக்கொன்றுவிடக் கட்டளையிடுகிறான் ஹிரண்யன். ஆகிரியில் ப்ரஹ்லாதனும் அவன் தாய் லீலாவதியும் வெகு உருக்கமாய் ஸம்பாஷித்தனர். எவ்விதத்திலும் ப்ரஹ்லாதனைக் கொல்லவும் முடியவில்லை. அவனுடைய ஹரி பக்தியையும் மாற்றமுடியவில்லை............

மாதவிடாய் நின்றிருந்தால்

குமாரி (TABS) உபயோகித்தால் மீண்டும் ஏற்படுவதுடன் பிற்காலத்திலும் தொந்திரவு ஏற்படாது. தீங்கற்றது. விரைவில் பலன் தரும். விலை ரூ. 3. கடுமையானதற்கு ரூ. 5. கர்ப்பத்தடை 6 மாதங்களுக்கு ரூ. 4. (வி. பி. அணா 12 ப்ரத்யேகம்)

Mrs. P. DEVEE, F. D. S., (C. M.)
Tollygunge, Calcutta.

Available also from :—

(1) HARRY & SON, 93, China Bazar Road, Madras.
(2) RAJA MEDICAL HALL, 31, Dharmaraja St., Bangalore Contt.
(3) NATHAM & CO. Mattancheri, Cochin.
(4) K. C. MATHEW & Co., Kozhancheri, Travancore.

இதுவரைக்கும் ஹிரண்ய வேஷம்பூண்ட ஹரியைத்தவிர மற்ற எல்லோருக்கும் நாணா பாகவதர் பின்பாட்டுப் பாடிவந்தார். நடுநடுவே செய்யப்பட்ட ஹாஸ்யக் காட்சிகளில் வேஷம்பூண்ட சில சிறுவர்கள் ஸம்பாஷணையில் பாகவதரைப் பன்முறை கோட்டா செய்து கவிழ்த்தனர். இதெல்லாம் சேர்ந்து பாகவதருக்குப் பற்றிக் கொண்டுவந்தது.........

நாடகத்தின் கடைசி கட்டம்: கோபம் கொண்ட ஹிரண்யன் பக்த சிரோமணி ப்ரஹ்லாதனைக் கையில் பிடித்துக்கொண்டு பெருமூச்சுவிட்டு, வாளை வீசி, மேலும் கீழும் நடைபோட்டு, நீ பிதற்றிக்கொண்டிருக்கும் ஹரி எங்கிருக்கிறான் என்று வினவினான்.

"எங்கும் இருக்கிறார்" என்றான் குழந்தை.

"டிம்பக! ஈ ஸ்தம்பமுல உன்னாரா?"

"உன்னாரு தன்றி"

"ஈ ஸ்தம்பமுல"

"உன்னாரு"

ஸபையில் மூச்சுக்கூட எழவில்லை, திரையிடம் சென்று, அடித் தொண்டையுடன் 'ஈ ஸ்தம்பமுல' என்று ஹிரண்யன் கத்த, 'நிச்சயமாய் இருக்கிறார்' என்று பாலகன் அழுத்திக்கூற, ப்ரஹ்லாதனை உதறி எறிந்து, துடி துடித்துக் கொண்டு, எம்பி, திரைப்பக்கம் தன்காலால் ஓர் உதை கொடுத்தான். இடி முழக்கம்போல் ஓர் ஒலி கேட்டது, பத்துப் பன்னிரண்டு பலசாலிகளால் இடுப்பில் இறுக்கிக் கட்டிய துணிகளால் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளப்பட்டு, நரஸிம்மஸ்வாமி ஆவிர்ப்பாவம் ஆனார். நரஸிம்மம் பாய்ந்து, உயரக் குதித்துக் கர்ஜித்தது. பக்கத்தில் பிடித்துக்கொண்டிருந்தவர்கள் அதைக் கட்டுக்குள் வைத்துக்கொள்ள மிகவும் சிரமப்பட்டார்கள். கூட்டம் மயிர் சிலிர்த்தது; சிறுவர்கள் நடுங்கினர்; தாய்கள் குழந்தைகளை மடியில் அணைத்துக்கொண்டனர். நரஸிம்மஸ்வாமி தோன்றிவிட்டார்.

கொஞ்சம்கூடப் பயமின்றி அவர் பக்கம் நின்று ஹிரண்யன் அவரை எதிர்த்து ஏசினான். ஆனால், அன்றிரவு, ஆரம்பத்திலிருந்தே நரஸிம்ம வேஷம் உக்ரமாய்த் தோன்றினதைக் கண்டு, ஆவேசம் நிச்சயமாய் ஏற்படும் என்று பயந்து, சிலர் ஹிரண்யனைத் தூர அழைத்துப்போனார்கள். ஆவேசம் வந்தால் நாடகம் என்பதை மறந்து, ஹிரண்

யனை நரஸிம்ம வேஷம் கிழித்தே விடும் என்று எப்பவும் பயமுண்டு. ஆகையால் தூரத்திலிருந்தபடியே ஹிரண்யன் தன் ஏசல்களைப் பாடினான். அவனுக்கு யார் பின்பாட்டுப் பாடுகிறார் என்று ஜனங்கள் பார்க்கும்போது நாணு பாகவதர் கூட்டத்தில் யாரையோ பார்த்துத் தம் தலையைச் சொறிந்து, கொட்டாவி விட்டுக்கொண்டிருந்தார். ஹரி மற்றொரு பாட்டை எடுத்தான்; நாணு பாகவதர் பக்கத்தில் யாருடனோ பேசத் தொடங்கினார்............

ஹரி நரஸிம்மனை ஏசிப் பாடியதும் நரஸிம்மனுக்கு அவனிடம் கோபம் வரவில்லை; ஹரியின் கலையில் நரஸிம்மன் மோஹம் கொண்டார். ஹிரண்யன் பண்டை யுகத்திலல்லவோ கடவுளுக்குச் சத்ரு; அந்த ஸமயம் மங்கலத்தில் கடவுளுக்கு ஆகாத சத்ரு வேறொருவர் இருந்தார், அவர்மேல் நரஸிம்மனின் கோபம் பாய்ந்தது. கிழ நாணு நின்று வம்பளந்து கொண்டிருக்கும் பக்கம் திரும்பி "பேய் பாபி நாணு! கிராமத்தைக் கெடுக்க வந்த பழி!" என்று கர்ஜனை செய்து, தன்னை இடுப்பில் துணி கட்டிப் பிடித்திருக்கும் இரும்புப் பிடிகளினின்றும் பிய்த்துக் கொண்டு பாய முயன்றது நரஸிம்மம். அனைவரும் ஒன்றும் தோன்றாமல் ஸ்தம்பித்துப் போனார்கள். நாணு நரஸிம்மத்தைப் பார்த்தார்; நரஸிம்மம் துஷ்ட நிக்ரஹ, சிஷ்ட பரிபாலனம் செய்யும் கதையை நடிக்காமல் நடத்திக் காட்ட ஆரம்பித்துவிட்டது. அவ்வருஷம் நரஸிம்மம் சிக்ஷித்த துஷ்டன் யார்? ஹிரண்யாசுரன் அல்ல. அசூயையும் துரஹங்காரமும் முன் கோபமும் கொண்டு, கிராமக் கலையையும், கிராம வாழ்க்கையையும் குலைத்துவரும் கிழ நாணுவைப் பொறுக்கமாட்டாமல், ஹிரண்ய வேஷத்தை விட்டு, உண்மை அசுரனை நாணுமேல் பாய்ந்தது நரஸிம்மம்.

"பாபி, கிராமத்தைச் சீர்கெடச் செய்யும் த்ரோஹி!" என்று நரஸிம்மம் இடித்தது. பயந்தும், இது எப்படி முடியும் என்றெல்லாம் முழுதும் எதிர்பாராத நாணு நரஸிம்மத்தின் முன்னே நின்றார். நடுநடுங்கிப் பலர் ஓடி நரஸிம்மத்தைப் பிடித்துக்கொண்டனர். "ஹ-ஹ-ஹ-ஹா!" என்று முழங்கிக் கொண்டு, கட்டிலிருந்து மீறிப் பாய்ந்தது நரஸிம்மம். நாற்புறமும் பயத்தில் சிதறிய கூட்டத்தில் தலைமேல் அடிவைத்து நாணு ஓடினார்; கர்ஜித்துக்கொண்டு நரஸிம்மம் நாணுவை விரட்டிற்று. பக்தி சிரத்தையுள்ள பட்டாமணியப் பஞ்சநதத்தின்மேல் வரவேண்டும் என்று தீர்மானித்த பகவத் ஆவேசத்தைத் தடைசெய்ய யார் முன் வருவார்கள்? பயத்தில் அவனவன் பேச்சுமூச்சில்லாமல் திகைத்து நின்றான். கிழ நாணு கோயிலுக்குள் ஓடினார், ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் ஒளிந்து வெளிவந்தார்; சுவர்களைத் தாண்டிக் குதித்தார்; வெடவெட என்று உடம்பெல்லாம் நடுக்கம், வியர்வை மழையாய்க் கொட்டிற்று. வயல்களில் ஓடும் நாணுவை நரஸிம்மன் துரத்திற்று. கிழக்கு வெளுக்கும் தறுவாயில், உயிருக்கு ஓடிஓடிக் களைத்த நாணு கோயிலடியில் வந்து அங்கிருந்த கிணற்றுக்குள் குதித்தார். ஆயிரக்கணக்காய் நடுங்கும் கண்கள் பார்த்துக் கொண்டிருக்க, வாய்கள் அலற, 'ஆ, ஆ' என்று மேலே கைகள் எழ, நரஸிம்மம் காது செவிடாய்ப் போகும்படி கர்ஜனை செய்துகொண்டு, நாணு குதித்த கிணற்றுக்குள் குதித்தது.

* * *

அக்கிணற்றின் அருகில் யார் அணுகுவர்? கடவுளே பழிவாங்க எண்ணியவனை யார் காப்பாற்ற முடியும்? கிழக்கே சூரியன் உதயமாயிற்று! கிணற்றினுள்ளிருந்து நரஸிம்மம் வெளியே வந்தது; பெருமூச்சு விட்டுக் கொண்டு, கையெல்லாம் ரத்தம் தோய்ந்து, மார்பெல்லாம் குடல் மாலையிட்டுக் கொண்டு நரஸிம்மம் வெளியே வந்தது. கைகளை வீசி, ஹிரண்யவேஷம் பூண்ட ஹரியையும், ப்ரஹ்லாத வேஷம் போட்ட சிறுவனையும் இழுத்து அணைத்துக் கொண்டது...

பெண்மணிகள் விழுந்து வணங்கினார்கள்; மற்றவர் தம்முள்ளேயே பகவானைப் போற்றிக் கொண்டனர். அந்தப்பக்தியும் பயமும் நிரம்பிய நிசப்தமான காலையில், ஒரு கையில் ஹிரண்யன் வேஷம் தரித்த ஹரியையும், மற்றொன்றில் ப்ரஹ்லாதனையும் பிடித்துக் கொண்டு, நரஸிம்மன், பகவான் ஆடும் பெரு நாடகத்தின் உட்பொருளை விளக்கினார்:

"நல்லோரைக் காப்பாற்றவும், தீயோரை ஒழிக்கவும், தர்மத்தை நிலை நாட்டவும், ஒவ்வொரு யுகத்திலும் நான் தோன்றுவேன்'.

"எப்பொழுதெல்லாம் தர்மம் மங்குமோ, அதர்மம் ஓங்குமோ, அப்பொழுதெல்லாம் என்னை நான் தோற்றுவைத்துக் கொள்ளுவேன்"

நானிஜீ சொன்ன கதை

சாரி

கிஷோரிலாவின் மனைவி அன்று இரவு குழந்தைகளுக்கு ஒரு கதை சொல்வதாய் வாக்களித்திருந்தாள். வழக்கம்போல் காக்கை, குருவி, மைனு கதையல்ல; அன்று சொல்லப்போவது பிரத்தியேகமான ஒரு நிகழ்ச்சியைக் குறித்த கதை என்று குழந்தைகள் அறிந்திருந்தார்கள். ஆகவே விளையாட்டை நிறுத்திக்கொண்டு, சாப்பாட்டிற்குப்பின் சீக்கிரமாகவே படுக்கையிற் போய்ப் படுத்துக்கொண்டனர். இவர்கள்தான் லச்மன், பிரேம், தாரா.

“பாயி லச்மன், அந்தப் பெட்டிக்குள் என்ன இருந்தது?” என்றுள் பிரேம்.

“ப்பூ! ஒண்ணுமேயில்லை. எதோ பழைய காகிதங்களும் ஒரு படமும், கொஞ்சம் துல்லியும் இருந்தன...........”

“இல்லை, அதில், நல்ல வாசனை இருந்தது! சாவி அகப்பட்டதென்று நானிஜீ ஏன் அவ்வளவு சந்தோஷப்பட்டாள்?”

“பிரேம், தாரா, எனக்குத் தெரியும், பெட்டி மாஜீயின் கலியாணத்தின்பொழுது, யாரோ பரிசு கொடுத்ததாம். அதன் பேரில் அம்மாவுக்கு உயிராம். ஒவ்வொரு கள்ள அறையிலும், ஒவ்வோர் அழகிய பொருளை வைத்திருப்பாளாம். மாஜீ இறந்துபோனபின், நாலைந்து வருஷமாய் பெட்டி அறையின் அந்த மூலையிலேயே கிடந்தது.” என்றுன் லச்மன்

“ஆமாம், பெட்டியைத்திறந்து நமக்குத் தரும்படி கேட்டதும், நானுஜீயின் முகத்தில் ஏன் அவ்வளவு வருத்தம் தோன்றிற்று?” என்று கேட்டாள் பிரேம்.

“மாஜீயின் நினைவு வந்திருக்கக்கூடாதா?” என்று அண்ணன் மறுமொழி கூறியதைக் கேட்டுக் குழந்தைகளின் முகம் வாடிற்று. ஒரு மனதாய்க் கட்டிலிலிருந்து மூவரும் எழுந்தார்கள்.

விலாசமான படுக்கை அறையின் கோடியில் ஒரு சுவர் அலமாரி. அதன் கதவுகள் திறந்திருந்தன. மெல்லிய பட்டுத்திரை ஒன்று தொங்கி, உள்ளேயிருக்கும் பொருளை மறைத்தது. அலமாரிக்கு இரு புறமும் பெரிய வெண்கல விளக்குக்கள் நெய்யும் திரியும் சுமந்து, மங்கிய வெளிச்சத்தை அவ்வறைக்குக் கொடுத்தன.

அருகே சென்ற லச்மன் திரையை மெதுவாய் விலக்கினுன். அச்செய்கையில் பக்தி கொண்ட அமைதி தென்பட்டது. சகோதரிகள் அவன் பக்கத்தில் வந்து நின்று கொண்டனர். தங்கச்சட்டம் பதித்த படத்தினின்று அந்த நிமிஷமே உயிர் பெற்று வந்து தன் அருமைக்குழந்தைகளைத் தழுவிக் கொள்ளுவாளோவென்று திகைக்கும் வண்ணம் ராம்குமாரியின் உருவம் அதில் திகழ்ந்தது.

அன்னையின் முகத்தில் அரும்பிய புன்னகையைக் கண்கொட்டாமல் கவனித்தார்கள். மெல்லிய குழந்தைக் கரங்கள் தம் நினைவின்றி நெஞ்சருகே ஒன்று சேர்ந்தன; மூன்று சிறிய தலைகள் சற்றே கவிழ்ந்தன.

இவர்களை உங்கள் கண் முன்னே கொண்டு வருவ்து எளிதான காரியமல்ல. எங்கே முயற்சி செய்கிறேன், பாருங்கள். லச்மன்:- பதின்மூன்று வயதுள்ள உயரமான பையன். பாஜாமாவும், குர்தாவும் அணிந்து ஒரு பிரபுவைப்போல் கம்பீரமாக நிமிர்ந்து நின்றுன். பிரேம்:- பதினெரு பிராயத்து மங்கை. நிறையக் கொசுவம் உள்ள ஆரஞ்சு நிறப் பட்டுப்பாவாடையும் நீல நிறத்தில் சிறிய சோலியும் அவள் உடலை மறைத்து அழகுபடுத்தின. மூக்கும் விழிகளும், கருங்கூந்தலும் சிவந்த மேனியும் ஒன்று சேர்ந்து ஒரு ராஜகுமாரிபோல் விளங்கினுள். தாரா:- அக்காவின் சிறிய பதிப்பு என்று வைத்துக்கொள்ளலாம். கன்னங்கள் இரண்டும் உருண்டு சிவந்து, அப்பொழுது மலர்ந்த ரோஜா புஷ்பங்களை நம் நினைவிற்குக் கொணர்ந்தன.

கிஷோரிலாலின் மகள் ராம்குமாரியின் அருமைச் செல்வங்கள் இவர்கள்; தாயிழந்த சேய்கள். லக்னேவின் பெரும் பணக்காரர் கிஷோரிலால். தற்சமயம் காரியங்களை ஒடுக்கிக்கொண்டு, ஓய்வு நேரத்தைத் தம் மனைவியின் உதவியுடன் இக்குழந்தைகளை வளர்ப்பதில் செலவிட்டுவந்தார்.

ஒரே பெண்ணின் மரணத்திற்குப் பின் இந்தக் குழந்தைகளைப் பராமரித்து, அதில் அடையும் இன்பமே தம் வாழ்க்கையின் திட்டமாகச் செய்துகொண்டவர்.

மருமகன் நந்தகுமார் அகமதாபாத்தில் பெரிய ஆலைமுதலாளி. ராம்குமாரியின் மரணத்திற்காக இன்றளவிலும் துக்கித்தார். மறு விவாகமும் செய்துகொள்ளவில்லை. குழந்தைகளை இங்கே அனுப்பிவிட்டு, அகமதாபாத்தில் தம் மாளிகையை ஒரு தர்மவைத்தியசாலையாகச் செய்துவைத்தார்.

ஒரு துறவிபோல் கருமங்களைப் பற்றுதலின்றிச் செய்பவர், நல்லபடிப்பாளி, மேதாவி. வருடம் இருமுறை தவறாமல் லக்னோவிற்கு வந்து குழந்தைகளுடன் தங்கிப் போவார். இந்தப் பழக்கத்தினால் இவர்களுக்கிடையில் அதிக வாத்சல்யம் ஏற்பட்டது.

நந்தகுமாரின் செல்வம் கணக்கற்றது. லக்னோவிற்கு வரும் சமயம் குழந்தைகளுக்கு அவர் வாங்கிவரும் வஸ்துக்களின் மதிப்பு ஆயிரக்கணக்கான ரூபாயில் இருக்குமென்று சொல்வார்கள்.

செல்வம் மட்டுமே மனிதனுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கிறதா? ஒருபொழுதுமில்லையென்று நிரூபித்தது நந்தகுமாரின் வாழ்க்கை.

குழந்தைகள் மறுபடியும் அமைதியுடன் படுக்கையில் படுத்துக்கொண்டார்கள். ஓர் ஆடும் குருச்சியில் நானிஜீ அமர்ந்து கதை சொல்லுகிறார். நாமும் சந்தடி செய்யாமலிருந்தால் கதையைக் கேட்கலாம்!

"முன்னியின் விவாஹம் நடந்த சில நாட்களுக்குப்பின் நாங்கள் ராமேசுவர யாத்திரை போனோம். மாப்பிள்ளையும் எங்கள் கூடவந்தார். முன்னிக்கு அப்பொழுது 12 வயதிருக்கும். லல்லுவுக்கு 17 பிராயம் முடியும் சமயம்........"

மூன்று குழந்தைகளும் ஒரே குரலாக, "முன்னியாரு நானிஜீ? அப்புறம் லல்லு?" என்று கேட்டார்கள்.

நானிஜீயின் முகத்தில் அதிருப்தி தோன்றிற்று. கோபம்கூட வந்ததென்று சொல்லலாம். முன்னி என்பது என் பெண் ராம்குமாரி; இறந்துபோன உங்கள் தயார். அன்று லல்லு வென்னும் செல்லப்பெயரால் நாங்கள் அழைத்தவர் இன்று அகமதா

புதிய புத்தகங்கள்

1. **தாவரங்களின் இல்லறம்**
ராஜாஜி எழுதியது 1-8-0

2. **இரு துருவங்கள்**
வி. ஸ. காண்டேகர்—கா. ஸ்ரீ. ஸ்ரீ. மொழிபெயர்ப்பு 5-8-0

3. **மல்லிகை மாலை**
கி. வா. ஜகந்நாதன் எழுதிய கட்டுரைகள் 2-8-0

4. **பிள்ளை வரம்**
பெ. தூரன் எழுதிய கதைகள் 2-0-0

5. **ஸம்பத்து**
எஸ். வி. வியின் நாவல் 4-0-0

6. **கதைக்கோவை**
4-ம் தொகுதி-கரிச்சான்குஞ்சு, வி. சி. கோபாலரத்னம், சாவி, எம். எஸ். சுப்ரமணிய ஐயர், பகீரதன், திரிலோக சீதாராம், வே. நாராயணன், எம். என். எம். பாவலர், ய. மகாலிங்க சாஸ்திரி, கே. எஸ். ராமசாமி சாஸ்திரி, வஸந்தன், ஏ. ஜி. வேங்கடாச்சாரி, கே. எஸ். ஜம்புநாதன் முதலிய 75 எழுத்தாளர்களின் சிறந்த கதைகள் கொண்டது. 10-8-0

7. **கல்லின் வேட்கை**
டாகூர் எழுதியது (இரண்டாம் பதிப்பு) 2-0-0

8. **தேவகி**
குகப்ரியை எழுதிய சிறு கதைகள் 2-0-0

9. **சந்திரிகா**
குகப்ரியை எழுதிய நாவல் 1-4-0

10. **ஜனாதிபதி ரூஸ்வெல்ட்**
கே. எஸ். ஜம்புநாதன் 1-4-0

[விவரமான புத்தக ஜாப்தாவுக்கு எழுதிக்கொள்க]

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் — சென்னை

பாத் ஆலை முதலாளி நந்தகுமார்.'' என்று அழுத்தமாக விடை பகர்ந்தாள்.

குழந்தைகள் சந்தோஷத்தில் கைதட்டினார்கள். "ஓ மாஜீயின் கதையா?'' என்று திருப்தியுடன் கேட்டார்கள். பாட்டி தன் தலை அசைப்பினால் அதை ஆமோதித்தாள்; ஆனால் கதையை மேலே தொடர்வதாகத் தெரியவில்லை.

மின்சாரவேகத்தில் குழந்தைகள் எழுந்தனர்.

பாட்டியின் பாதங்களைத்தொட்டு லச்மன் கண்ணில் ஒற்றிக்கொண்டான். பிரேம் நானியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, முகத்தைப் பிடித்துக் கெஞ்சினாள்; தாரா பிரயாசையுடன் பாட்டியின் மடியில் ஏறி அமர்ந்து, "நானிஜீ கதை சொல்லு, கதை சொல்லு.'' என்று அரிக்கலானாள்.

குழந்தைகள் இவ்விதம் கெஞ்சும் பொழுது யாருக்குத்தான் மனம் இளகாது? கல்லும்கூடகரைந்தல்லவோபோகும்? "என் செல்வங்களா'' என்று அவர்களை அணைத்துக்கொண்டு படுக்கையில் படுக்கவைத்தாள் பாட்டி. தனித்தனியாக அன்புடன் அவர்களை முத்தமிட்டு, மீண்டும் தன் இடத்தில் வந்து அமர்ந்தாள். நீங்கள் என் கதையைத் தடுக்கக்கூடாது. போகப்போக விஷயங்கள் புரியும்.'' என்று சொல்லி, நானிஜீ கதையைத் தொடங்கினாள்.

"ஆறு மாத யாத்திரைக்கு நாங்கள் ஏற்பாடு செய்திருந்தோம். மத்திய இந்தியாவில் அநேக க்ஷேத்திரங்களைத் தரிசித்து மூன்று மாதத்தில் சென்னைபோய்ச் சேர்ந்தோம். அங்கே எங்களுக்குப் பெரிய வரவேற்பு நடந்தது. முன்னிக்கு ஒரே குஷிதான். விதம் விதமாய்த் தன்னை அலங்கரித்துக் கொண்டு விருந்துகளுக்குச் செல்வதில் அலுப்பேயில்லை. லல்லுவும், அவளும் குழந்தைகள்போல் குதூகலமாய்க் காலம் கழித்தார்கள். கடற்கரையிலும், பூந்தோட்டத்திலும் போய் உலாவுவார்கள்.

இப்படிச் சென்னையில் ஒரு மாதம் கழிந்தது. எனக்கு அந்த ஊர் அலுத்துப்போய் விட்டது. ஸ்ரீரங்கம். மதுரா, ராமேசுவரம், திருச்செந்தூர், திருவனந்தபுரம், கன்யாகுமாரி இந்த இடங்களைச்சென்று காண மனம் துடித்தது.

முன்னிக்கும் லல்லுவிற்கும் மதராஸை விட்டுக் கிளம்ப சற்றும் பிரியமில்லை. ஆனால் உங்கள் நானா சம்மதிக்கவே நாங்கள் பிரயாணப்பட்டோம்; நேரே ஸ்ரீரங்கமும் வந்து சேர்ந்தோம்.

அங்கே எங்களை மிக்க மரியாதையுடன் வரவேற்றார்கள். பூர்ணகும்பம், யானை, மேளவாத்தியம் இவைகள் சகிதம் ஊர்வலமாக அழைத்துப்போய் ஒரு பெரிய மாளிகையில் சேர்த்தார்கள்.

ஸ்ரீரங்கத்தைபோல் அழகிய ஊர் நான் கண்டதேயில்லை. அங்கேயுள்ள ரங்கநாத் மந்திர் உலகப் பிரசித்தி பெற்றது. அவ்வளவு பணம் படைத்த ஆலயம் வேறே எங்குமே கிடையாதெனலாம். ரங்கநாதரின் ஆபரணங்கள் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ளதென்றும் சொல்லிக் கொண்டார்கள்.

மறுநாள் பகவானைத் தரிசித்தோம். கோவிலையும், கண்காட்சிச்சாலையையும், சுற்றிப்பார்த்தோம். பிரசித்திபெற்ற காவேரி நதியில் நீராடி, அதன் கரையில் பூந்தோட்டத்தில் சிற்றுண்டி அருந்தினோம். இவ்விதமாக ஒரு வாரம் கழிந்தது.

"முன்னிக்கு அந்த ஊர் பிடிக்கவில்லை, அலுத்துப்போய்விட்டது. அன்றிரவே மதுரைக்குப் பிரயாணப்படுவதாகவும் தீர்மானித்தோம். எல்லாம் சித்தப்படுத்தி விட்டு உணவருந்தும் சமயம். எங்கள் பிரத்தியேக வண்டிகளை, மதுரையில் வண்டித்தொடரில் இணைப்பதற்கான ஏற்பாடுகள்செய்த அவ்வூர் பெரிய ரயில் உத்தியோகஸ்தர் ஒருவர் எங்களைக் காணவந்தார்.

ஏதோ பேசிக்கொண்டிருக்கும் சமயம் முன்னியின் நெற்றியில் தொங்கிய சிறிய சூடாமணியை அவர் கவனித்தார். தென்னிந்தியாவில் சாதாரணமாய் இந்த ஆபரணத்தைப் பெண்கள் அணிவதில்லை. பெரிய மனிதருக்கு இந்நகை மிகவும் பிடித்தது. பலவித நகைப்பேச்சுக்கிடையில், ஸ்ரீரங்கம் ரங்கநாத் மந்திர் நகைகளைப்போல் இந்தியாவில் வேறெங்குமே கிடையாதல்லவா என்று எங்களைக்கேட்டார்.

ஆபரணங்களை நாங்கள் பார்த்திருந்தாலல்லவோ ஆமோதிப்பதற்கு. இதைக்கேட்டு அவர் மிகவும் வருந்தினார். உடனே தமது வண்டியில் போய், மேல் அதிகாரிகளின் உத்தரவு பெற்றுக்கொண்டுவந்து, எங்களை நகை பார்வையிட அழைத்துச் சென்றார். எங்களுக்கும் இந்த ஏற்பாட்டில் அதிக திருப்தி உண்டாயிற்று.

முன்னியின் உற்சாகத்திற்கு கேட்கவேண்டுமா? ஆபரணங்களைக் காணப் போகிறோ



தகர்க்கமுடியாத உண்மைகள்

பொது மக்கள் விரும்பி உபயோகிக்கும் கடிகாரங்களில் அநேகம் போதிய அளவில் பாக்டரிகளிலிருந்து வெளியேறி இத்தேசத்திற்கு வந்துக்கொண்டிருக்கின்றன என்பது உண்மை.

ஆயிரக்கணக்கான மயில்களைக் கடந்து இந்தச் சரக்குகள் வரப்போதிய வசதியின்மையாலும், அதற்கடுத்தடுத்து வரும் கப்பல்களுக்கும் இதே நெருக்கடியிருப்பதாலும், இன்னும் பல மாதங்கள்வரை தொடர்ச்சியாக சாமான்கள் வரும் என எதிர்பார்க்க இடமில்லை. இதுவும் உண்மையே.

நிச்சயமின்மை, சரக்குக் குறைவு இவைகளை நாம் சமாளிக்கவேண்டியதினால் நமது வாடிக்கைக்காரர்களின் தேவைகளை உடனே பூர்த்திசெய்ய மற்றும் சிலகாலம் இயலாதென வருந்துகிறோம்.

வெஸ்ட் எண்டு வாட்ச் கம்பெனி
பம்பாய் • கல்கத்தா

WEST END WATCH Co.
BOMBAY CALCUTTA

Makers of Quality Watches for over 75 Years.

மென்பதை அறிந்ததும், அன்றிரவு பிரயாணத்தையே ஒத்திப்போட அவள் தயாராக இருந்தாளென்றால் பாருங்களேன்! ஆனால் எப்படியும் பிரயாணத்தை நிறுத்தக் கூடாதென்று அவள் தந்தை தெரிவித்துவிட்டார்.

தேவஸ்தான காரியாலயத்த்தின் ஓர் அறையில் மேஜைகளின் பேரில் கறுப்புப் பட்டுத் துணிகளை விரித்து நகைகளைப் பரத்தியிருந்தார்கள். முத்தும். ரத்தினங்களும், வைரங்களும் கண்ணைப்பறித்தன. நிஜமாகவே இவை போன்ற விலையுயர்ந்த ஆபரணங்களை நாங்கள் இதற்கு முன் எங்கும் கண்டதில்லை. எங்களுக்கு மட்டில் அவகாசமிருந்தால், அவ்விடத்தை விட்டுப் பெயர்ந்திருக்கவே மாட்டோம். ஆபரணங்களின் ஒளியும் அழகும் எம்மைப் பரவசப் படுத்தின.

ரயிலுக்கு இன்னும் அரைமணி நேரமேயிருப்பதாக நானாஜீ அவசரப்படுத்தலானார். முன்னியின் காதில் அந்த வார்த்தைகள் விழுந்தால் தானே? மதியிழந்தவளாய் அங்கும் இங்கும் ஓடினாள். நகைகளைத் தொட்டுப் பார்த்தாள், கையில் எடுத்துக் கண்ணில் ஒத்திக்கொண்டாள்; திருப்பித் திருப்பி அழகு பார்த்தாள். லல்லுவும் கிட்டத்தட்ட அவளைப்போலவே உற்சாகத்தில் குதித்தான்.

இதில் நானாஜீக்குக்கோபம்வந்துவிட்டது. எங்களைப் பிடித்து அறைக்கு வெளியே கொணர்ந்து தள்ளினார். நான் வாசற்படி அருகில் வந்ததும் திரும்பினேன். பத்தடி எனக்குப் பின்வந்து கொண்டிருந்த முன்னி கீழே குனிந்தாள். பாஜாமாவை ஏதோ சரிப்படுத்திக் கொண்டிருந்ததாகத் தோன்றிற்று.

இவ்விதம் அவள் தாமதித்தது எனக்கும் கோபத்தை உண்டாக்கிற்று. அவளிடம் ஓடிப்பலவந்தமாய்ப் பிடித்து இழுத்து வந்து வண்டியில் ஏற்றினேன். வரச்சம்மதமில்லாமலும், பிடியைத் தளர்த்தினால் திரும்பி ஆபரணங்களிடம் ஓடிப்போகக் கூடியவள் போலும் முன்னி நடந்து கொண்டது எனக்கு வியப்பாக இருந்தது, நான் சிரித்தேன். முன்னி அதைக் கவனிக்கவேயில்லை. நகைகளைப் பார்வையிட்டு முடியுமுன் அழைத்து வந்ததில் பிணங்குகிறாள் போலும் என்று எண்ணிக்கொண்டேன்.

ரயிலும் கிளம்பிற்று. முன்னியின் நடத்தைக்குக் காரணம் எனக்கு விளங்கவேயில்லை. சதா எதையோ சிந்தித்தவண்ணமிருந்தாள். எங்கள் கேள்விகளுக்குப் பதில் கூறவில்லை. கண்ணில் நீர் நிறைந்திருந்தது. லல்லு அவளை வலுச்சண்டைக்கு இழுத்துக் கேலிசெய்தான். அவள் அதைக் கவனித்தால்தானே? ஜன்னலுக்கு வெளியில் தலையை நீட்டிய வண்ணம் பிரயாணம் செய்தாள்.

முன்னியின் விவாகத்திற்கு உங்கள் தாத்தா ஓர் அழகிய நகைப்பெட்டியைப்பரிசாகத் தந்திருந்தார். அவள் குழந்தை தானே? பெட்டி அவளுக்கு மிகவும் பிடித்திருந்ததால், கணமும் அதைப் பிரிய மாட்டாள். சாவி எந்நேரமும் கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியில் பிணைந்திருக்கும். ரயில் மதுரையை அடையுமுன், இந்தப்பெட்டியைத் திறந்து அவள் குடைந்து கொண்டிருந்ததை நான் கவனித்தேன்.

மதுரையும் போய்ச்சேர்ந்து, பார்க்க வேண்டிய இடங்களைப் பார்த்தாகிவிட்டது. இரண்டு நாள் இளைப்பாறி நேரே கன்யாகுமாரிக்குச் செல்வதாக ஏற்பாடு. அம்மாடி முன்னி ஒருபிடிவாதம் செய்தாளே, பாருங்கள். சுற்றுப்பிரயாணம் போதுமென்றாள்; மறுநாளே லக்னோவிற்குத் திரும்பிச்செல்ல வேண்டுமென்பது தன் விருப்பம் என்று முரண்டுசெய்தாள்.

எனக்கு மிக்ககோபம் வந்தது. உங்கள் நானாஜிமட்டில் தம் பெண்ணின் விருப்பத்திற்குத் தடை சொல்லவில்லை. ஊருக்குத் திரும்பும் ஏற்பாடுகளைக் கவனிக்கத் தம் காரியதரிசிக்கு உத்தரவு தந்தார்.

நானும், லல்லுவும் மன்றாடினோம். முன்னி சற்றும் தளரவில்லை. ஸ்ரீரங்கத்தை விட்டுக் கிளம்பியதுமுதல் வாட்டமாக இருந்தவள் இந்த ஏற்பாட்டில் சற்றுக் கல கலப்புக் கொண்டாள். உங்கள் தாத்தாவிடம்போய் "பிதாஜி, திருச்சி ரயிலடியில் நமது நண்பர்கள் வருவார்களோ?" என்றாள். அவர் சிரித்தார். காரியதரிசி ராம் சரண்தாஸ் இடம் சென்று, எங்கள் யாத்திரையில் மாறுதல் ஏற்பட்டு, மறுதினம் திருச்சி மார்க்கமாய்ச் சென்னை சென்று லக்னோவிற்குப் பிரயாணபடுகிறோமென்கிற அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு அனுப்பச்சொல்லி அவரைக் கெஞ்சினாள். அவர் ஒத்துக் கொண்டபோதிலும், பிறகு அம்மாதிரி அறிக்கை ஒன்றும் அனுப்பவில்லை.

நாங்கள் திரும்பினோம். திருச்சி ரயிலடியில் முன்னி யாரையோ எதிர் பார்த்துக் கண் பூத்துப்போனாள். நடு நடுவில் மரப் பெட்டியைத் திறப்பதும், பூட்டுவதுமாய்

அவள் படுத்தி வைத்தபாடு சொல்லி முடியாது. இன்று நினைத்தால் அவள் பட்ட கஷ்டத்தை ஒருவாறு அறிய முடிகிறது; அன்றென்னவோ மிக்க கோபம்கொண்டேன்.

திருச்சியில் தெரிந்த மனிதர் ஒருவரும் வரவில்லையா? முன்னி தேடியதெல்லாம் வீணாயிற்று. அம்மாடி! அன்று அவளுக்குப் பிடித்த ஏக்கம் பிறகு ஒருவருஷத்திற்கு விடவில்லை.

கலகலத்த சுபாவம் முற்றிலும் மாறிப் போய், ஸதா ஏக்கத்தில் ஆழ்ந்தாள். தோழிகளும், நண்பர்களும் எவ்வளவு கேட்டும், மனதிலிருந்ததை அவள் வெளியிடவில்லை.

அகமதாபாத் போய் லல்லுவுடன் சேர்ந்திருந்தால் இதெல்லாம் மாறிப்போகுமென்று நினைத்து அவளை அங்கே அனுப்பி வைத்தோம். நாங்கள் எதிர்பார்த்த பிரகாரம் சற்றுச் சந்தோஷமாகவே காணப்பட்டபோதிலும் பழைய குதூகலத்தைப் பிறகு ஒரு நாளிலும் நாங்கள் அவளிடம் காணவில்லை. லல்லுவும் இதைத் தினமும் ஒரு முறை நினைத்து வருந்துவான். இதற்கெல்லாம் எங்கள் யாத்திரையே காரணமென்று பழி சுமத்தினான்.

காலம் சென்றது. தங்கக்கட்டிகள்போல் நீங்கள் பிறந்தீர்கள்—அந்த நாட்களெல்லாம் நொடிப்பொழுதுபோல் ஓடி மறைந்தன. வருடம் ஒரு முறை முன்னி உங்களை இங்கே அழைத்து வந்து இரண்டு மாதம் எங்களுடன் தங்கிப் போவாள். அப்பொழுதெல்லாம் மரப்பெட்டியும் கூடவே வரும்; கூடவே போகும்.

நான்கு வருஷ முன்பு இங்குவந்த சமயம் என் கண்மணிக்கு விஷஜ்வரம் கண்டது...... லக்ஷ்மன், மேலே கதைதான் உங்களுக்குத் தெரியுமே. போதுமா?" என்று தன் கதையை நிறுத்தினாள்; அவள் குரல் சற்றுக் கம்மியது.

குழந்தைகளா விடுவார்கள்? "நானிஜீ, அம்மா இறந்துபோனது தெரியும். ஆனால் பெட்டியின் ரகசியத்தை நீ சொல்லவில்லையே?" என்று கெஞ்சினார்கள். ராம்குமாரியின் ஞாபகத்தில் நானிஜீயின் கண்களில் துக்கம் தோய்ந்திருந்தது. "பேடி!" என்று கூறிப் பெருமூச்செறிந்தாள். குழந்தைகள் பொறுமையுடன் காத்திருந்தார்கள். பாட்டியும் சமாளித்துக்கொண்டு மேலே சொல்ல ஆரம்பித்தாள்.

"விஷ ஜ்வரமென்று அறிந்ததும் லல்லு பறந்து ஓடிவந்தான். இதற்குள் இரண்டு வாரமாய் நோய் வாய்ப்பட்டிருந்த முன்னி ஒரு நாள் என்னை அழைத்துப் பேனாவும் காகிதமும் கேட்டாள். சக்தியற்று இருந்த நிலைமையிலும், மார்பில் கடிதத்தைச் சாய்த்துக்கொண்டு, மணிபோன்ற தன் எழுத்தில் ஏதோ எழுதினாள். அதை மரப்பெட்டிக்குள் வைத்துப்பூட்டி, சாவியும் வழக்கம் போல் சங்கிலியுடன் பிணைக்கப்பட்டது.

இது முடிந்தது, ஆயாசத்தில் சாய்ந்து கொண்டாள். மனமும் ஒழுங்காயில்லாமல் பிதற்றலில் ஆரம்பித்தாள். ஸ்ரீரங்கம்—பெட்டி—சூடாமணி—லல்லு-கடிதம்—இதே வார்த்தைகள் திரும்பத்திரும்ப அவள் வாயினின்று வெளிவந்தன. அன்று மாலை சற்று அமைதியுடன் படுத்திருந்த முன்னி, 'மாஜீ, லல்லுவைக் கூப்பிடுங்கள்' என்றாள். எனக்கு மிக்க கவலையாக இருந்தது. லல்லு உள்ளே நுழைந்ததும் என்னைப் போகச் சொல்லிச் சமிக்ஞை செய்தாள். நானும் அறைக்கு வெளியில்போய் நின்று கொண்டேன்.

சுமார் அரை மணிநேரம் முன்னி மெலிந்த குரலில் ஏதோ சொல்லியதும், லல்லு அதை ஆமோதித்ததும் எனக்குக் கேட்டது. பிறகு கண்ணீர் பெருக்கியபடி அவன் வெளியில் வந்தான். அறைக்குள் நுழைந்த நான் முன்னியின் முகக்குறியில் பயந்து போனேன். நிரம்ப அசதியென்பது தெளிவாகத் தென்பட்டது.

அருகில் என்னை அழைத்துப் பெட்டி சாவி இவைகளைச் சுட்டிக்காட்டி ஏதோ சொல்ல முயன்றாள். எனக்குப் புரியவில்லை, கேட்டுத் தெரிந்துகொள்வதற்கு முன், முன்னி ஆயாசத்தினால் கண்ணை மூடிக்கொண்டாள்.........அதன் பின் இவ்வுலகில் அவ்வழகிய கண்கள் திறக்கவேயில்லை. பேடி! ஹரே, ராம், ராம், ராம், ராம்."

பாட்டி கதையை முடித்த பாவனையில் தன் கண்ணை மூடிக்கொண்டாள். குழந்தைகளோ பெட்டியின் ரகசியத்தை அறிந்துகொள்ளத் துடித்தன. மெல்ல "நானிஜீ மேலே சொல்லமாட்டியோ?" என்றார்கள்.

கதை மீண்டும் தொடங்கிற்று. "முன்னியின் ஸம்ஸ்காரங்கள் முடிந்தன. உங்கள் தந்தையும் பெட்டியை அகமதாபாத்திற்கு எடுத்துச் சென்றார். இரண்டு வருஷத்திற்குப்பின் இங்கு வந்த சமயம் அதைக்கொணர்ந்து உங்கள் தாயாரின் படத்தருகில்

வைத்துச் சாவியை என்னிடம் தந்தார். பிரேம் வளர்ந்து பெரியவளான பிறகு அவளிடம் பெட்டியைக் கொடுக்கவேண்டு மென்பது அவருடைய விருப்பம். இதை என்னிடம் தெரிவித்தார். ஆகவே, இப் பொழுதே உங்களிடம் தரச்சொல்லி நாஜு ஜியை நீங்கள் அவசரப்படுத்தக்கூடாது. பெட்டிக்குள் உங்கள் தாயார் பூஜித்த பட மொன்றும், ரங்கநாத் மந்திர் துல்ஸியும் இருக்கின்றன" என்றாள்.

குழந்தைகள் ஏமாற்றத்தினால் விழித்தார்கள். நானிஜீ சிரித்துக்கொண்டே மறுபடியும் கதையைத் தொடங்கிப் பூர்த்தி செய்தாள்.

"உங்கள் தாயார் இறந்த பத்து நாளைக்குப் பிறகு பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது.

"ஓர் அதிசய சம்பவம்! பதினைந்து வருட முன்பு ஸ்ரீரங்கம் ரங்கநாத ஸ்வாமி கோவிலின் ஆபரணங்களிலிருந்து திடீரென்று களவுபோன ஒரு வைரச்சுட்டி அதிசயமான முறையில் திரும்பவும் கிடைத்துவிட்டது. ஊர் பெயர் தெரியாத யாரோ ஒருவர் அகமதாபாத் தபாலாபீசிலிருந்து நகையைத் தபால் மூலியமாய்க் கோவில் நிர்வாக அதிகாரிக்கு அனுப்பியிருக்கிறார். அதே தபாலில், ஒருபார்சலும்,ரங்கநாதருக்குக்காணிக்கையாக வந்துசேர்ந்தது. இந்த விஷயம் இங்கே ஜனங்களுக்கிடையில் மிக்க பரபரப்பையுண்டாக்கியுள்ளது."

பணத்தை அனுப்பியது உங்கள் தகப்பனாரென்பது எங்களுக்கு உடனே தெரிந்துவிட்டது. ஆனாலும் வைரச்சுட்டி ஏது? எதற்காக அந்த நகையை ஸ்ரீரங்கம் கோவிலுக்கு அனுப்பினார்? இதையறிய எங்களுக்கு ஆவல் மிகுந்தது. மறுநாளே நானாவும் நானும் அகமதாபாத்போய் லல்லுவைக்கண்டோம்.

மருமகன் மிக்க சங்கடப்பட்டமாதிரி தென்பட்டார். "பைத்தியக்காரி முன்னி— என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால், எவ்வளவோ நாளுக்குமுன் அவள் கவலையை நீக்கியிருப்பேனே!" என்று வருந்தி ஒரு கடிதத்தை எங்கள் கையில் வைத்தார். அது பின் வருமாறு;—

ஆச்சரியமான பாதுகாப்பு — — மற்றும் பந்தோபஸ்து

நேற்றைய கனவு........

இன்றைய வாழ்க்கை........

நாளைய நம்பிக்கை........

இவ்விதமாக வாழ்நாள் சென்றுகொண்டிருக்கின்றது.

வாழ்க்கையின் பிரயாணத்தில் உங்களுக்கு நாங்கள் உதவி புரிகிறோம்.

மொத்த ஆஸ்தி சுமார் 3 கோடிகள்

லக்ஷ்மி இன்ஷூரன்ஸ் கோ, லிட்., (லாகூர்)

மதராஸ் பிராஞ்ச்:
4/105, அரண்மனைக்காரத்தெரு, ஜி. டி.

ஸி. ஆர். சேஷன், M. A.,
பிராஞ்ச் மானேஜர்.

ஹைதராபாத் பிராஞ்:
அபித் ரோட், (டெக்கான்)

'பிராணநாத், என்னை மன்னியுங்கள், நான் அடக்கி வைத்திருந்த ரகசியத்தை வெளியிடும் காலம் கிட்டிவிட்டது. உயிர் இவ்வுடலைவிட்டு நீங்கும் நேரத்திலாவது, என் மடமையால் நேர்ந்த குற்றத்திற்குப் பரிகாரம் தேடிக்கொள்ளுகிறேன்.

லல்லு, பரிகாரம் செய்து முடிக்கவேண்டிய பொறுப்பை உனக்கு அளிக்கப்போகிறேன். என்பேரில் உன் அன்பு உண்மையானல், என்னை வெறுக்கமாட்டாய். என்றோ தேடிக் கிடைத்திருக்கவேண்டிய நிம்மதியை ஏன் இந்நாள்வரை ஒத்திப் போட்டேன்? என் செயலை உன்னிடம் ஒப்புக்கொள்ளத் தைரியமில்லாததினால் தான். நீ கடிந்துகொண்டால் என் உள்ளம் அதை எப்படிச் சகிக்கும்? உன் நிகரற்ற அன்பைப் பூர்ணமாய் உணர்ந்தேன். ஒரு கடும் சொல்லையும் கேளாமலே ஒரு கடுமையான எண்ணத்திற்கும் பாத்திரமாகாமலே இன்று உயிர்துறக்கிறேன். மேலே படித்தால் எல்லாம் உனக்கு விளங்கும்.

நமது யாத்திரையில், ரங்கநாத் மந்திர் ஆபரணங்களை நாம் பார்த்தது நினைவிருக்கிறதா? அன்று மாலையில் அவ்வூர்ப் பெரிய மனிதர் ஒருவர் என் சுட்டியை ரங்கநாதர் கோவில் நகைக்கு ஒப்பிட்டார். நேரில் அதைக் காணும் பாக்கியம் நமக்குக் கிட்டியதை நான் சந்தோஷத்துடன் வரவேற்றேன்.

ரயிலுக்கு நாழிகை ஆனதாகத் தந்தை நம்மை அவசரப்படுத்தினரல்லவா? அந்த நிமிஷத்தில் என் கையில் வைத்து அழகு பார்த்துக்கொண்டிருந்த ரங்கநாதரின் வைரச் சுட்டியை மேஜைமீது வைத்துவிட்டு விரைவாக நடந்தேன். அவசரத்தில் என் குர்தா அந்நகையிற்பட்டு அதைக் கீழே தள்ளியிருக்கவேண்டும். ஏனென்றால், நான் மேலே ஓர் அடி எடுத்து வைத்ததும், காலின்கீழ் மிதியுண்டது ரங்கநாதரின் வைரச்சுட்டி!

குனிந்து அதைக் கையில் எடுத்துப் பார்த்துக்கொண்டே ஒரு விநாடி தயங்கினேன். அச்சமயம், நான் பின் தங்கியதைக் கவனித்த அம்மா, ஓடிவந்து என்னைப்பற்றித் தரதரவென்று இழுத்துப்போய் வண்டியில் திணித்தாள். கையில் கெட்டியாகப் பிடித்திருந்த நகையைக் கீழே போடவோ, மீண்டும் மேஜைமீது வைக்கவோ எனக்குச் சற்றும் அவகாசம் தரவில்லை. நான் பேச வந்ததை அப்பாவும் கோபத்தில் தடுத்து விட்டார்.

பத்து நிமிஷத்தில் ரயிலடிக்கும் வந்து, புறப்பட ஆயத்தமாயிருந்த வண்டியைத் தாமதிக்க வைத்து ஏறிக்கொண்டோமல்லவா? வண்டியும் கிளம்பி விட்டது. என் சங்கடத்தை ஒருவரும் கவனிக்கவில்லை. கையில் இறுகப் பிடித்திருந்தேன் ரங்கநாதரின் ஆபரணத்தை! அதைத் தெரிவிப்போமென்று நான் நினைக்குமுன்பே, கோவில் நகைகளில் எனக்கிருந்த ஆசையை நீயும் அம்மாவுமாகக் கேலிசெய்ய ஆரம்பித்தீர்கள். என் கோபமும் துக்கமும் சொல்லிச் சாத்தியமில்லை. அன்றிரவை எவ்விதம் கழித்தேனென்று ஈசனே அறிவார்.

ஒரு வழியாக மதுரையை அடைந்தோமா? அங்கே, நகையைத் திருப்புவதற்கான பல வித யோசனை செய்தேன். யாத்திரையைத் தடைப்படுத்தவேண்டுமென்று முதலில் தீர்மானித்தேன். உன்னைத் தனிமையில் சந்தித்து, என் சங்கடத்தைச்சொல்லி, மீண்டும் திருச்சிக்குப் போக ஏற்பாடுகள் செய்ய நினைத்தேன். ஆனால்.........லல்லு, உன்னிடம் சொல்ல என் மனம் துணியவில்லை. இரவெல்லாம் உன்னிடம் சொல்வதில் எனக்குக் கிட்டும் ஆறுதலை நினைத்துச் சந்தோஷித்த மனம், ஏனோ கிட்டி முட்டி வந்ததும் தைர்யத்தை இழந்தது? அதற்குக் காரணமும் இல்லாமலில்லை. ஒருவேளை நீ என் வார்த்தையை நம்பாமல், வேண்டுமென்றே நகையை அபகரித்த ஒரு மோசக்காரியென்று என்னை எண்ணிவிட்டால் என்ன செய்வதென்கிற பயமே என்னை மௌனம் சாதிக்கும்படி செய்தது.

என் பிடிவாதத்தினால் யாத்திரை நிறுத்தப்பட்டு நாமும் திரும்பினோம். இது விஷயத்தையும், நாம் திருச்சி வழியாகத் திரும்புவதையும் பத்திரிகையில் விளம்பரப்படுத்தினால் அங்கே ரயிலடிக்குக் கோவில் அதிகாரிகள் அப்பாவைப் பார்ப்பதற்காக வரக்கூடும்; அவர்கள் மூலியமாய் நகையைத் திருப்பிவிடலாமென்கிற அசட்டு யோசனை எனக்கு எங்கிருந்தோ உண்டாயிற்று. அதெல்லாம் பலிக்கவில்லை. விளம்பரமே பத்திரிகைக்கு அனுப்பப்படவில்லை என்கிற விபரமும் பின்னால் தெரியவந்தது.

லக்னோவும் வந்து சேர்ந்தோம். அதன் பின் ஒரு வருடம் நான் அகமதாபாத்திற்கு வரும் வரையில் இந்த ரகசியத்தினால் என் மனம் பட்டபாடு கடவுளுக்கே தெரியும். நகை நிரந்தரமாய் என் மரப்பெட்டிக்குள் வைத்துப் பூட்டப்பட்டது. கூடவே ரங்கநாத்ஜீயின் படமொன்றும், கோவிலில் தந்த துலஸியும் இந்தப் பதினைந்து வருடங்களாய் நகைக்குத் துணையாக இருந்தன.

பிரபல டாக்டர்கள் இதை வைத்ய சாஸ்திரத்திற்கே ஒரு கன் கோடையெனப் போற்றுகிறார்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது
ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்.
1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.
மற்றும்:-பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சிராப்பள்ளி.

பிராஞ்சு:

பெரிய தெரு,

கும்பகோணம்.

கணக்கற்ற தடவைகளில் உன்னிடம் இதைச்சொல்லி, மன்னிப்பு வேண்டுவதென்றும், நகையை உன் உதவியினால் திருப்புவதென்றும் நினைத்திருக்கிறேன். இன்பமாக நம் வாழ்க்கை நடத்தும்போது, இந்த விஷயம் தெரிந்தால் அதற்குக் கேடு நேரிடுமே என்கிற பயத்தினால் உன்னிடம் இது காறும் அதை ஒளித்தேன்; அதற்கு ஈடாக நான் எவ்வளவோ மனோவேதனை அனுபவித்து விட்டேன்.

மேலும் அந்தரங்கத்தில் ஓர் எண்ணமும் உண்டு. வைரக் சுட்டியையும் எனக்கு ரங்கநாதர் அளித்த பிரசாதமாக நினைத்துக் கொண்டேன். அவர் திருமுடியில் பதிந்திருந்த அவ்வாபரணம் என் கையில் இருந்தது எனக்கு அனுக்கிரஹமில்லையா? அந்த அனுக்ரஹத்தின் பயனாகவே இந்த ஒப்பற்ற மூன்று குழந்தைகளும், உன்னுடன் ஒட்டிய என் வாழ்க்கையின்பமும் எனக்கு ஏற்பட்டனவென்று மனத்துள் ஏதோசொல்லிற்று. நாளடைவில் இந்த நினைவு எனக்கு ஆனந்தத்தை விளைவித்தது. நகையைத் திருப்பும் எண்ணமும் அடியுடன் மறந்தே போயிற்று. பிறகு உன்னிடம் எவ்வாறு தெரிவிப்பேன்?

பெட்டிக்குள் வைத்துப் பூட்டி, அதைத் திறக்கும்பொழுதெல்லாம் ஆபரணத்தைக் கண்ணில் ஒற்றி ஆனந்திப்பேன். இனி ஒரு நாளும் இதை வெளியிடும் வேளை வராதென்றுநினைத்திருந்தேன். ஆனால் விதியைத் தடுக்க யாருக்குச் சக்தியுண்டு. இவ்வளவு சீக்கிரம் என் மரணம் சம்பவிக்குமென்று நான் எண்ணவில்லை. லல்லு, என் கண்ணே, இவ்வுலகில் உன்னைப் பிரியும் இந்நேரத்தில் உனக்கு ஒளித்த இந்த ஒரே ரகசியத்தை என் மனத்தினின்று வெளிப்படுத்துகிறேன்.

இக்கடிதத்தை நகையுடன் வைத்துப் பூட்டுகிறேன். என்னை மன்னிப்பாய்.

உன் பைத்தியக்கார மனைவி,
முன்னி.

* * *

நானுஜீ குழந்தைகளைக் கவனித்தாள். லச்மன் கண்ணைத் திறந்தபடியே அண்ணாந்து பார்த்தவண்ணம் படுத்திருந்தான். பிரேம் பாட்டியின் முகத்தை உற்று நோக்கினாள். கதை முடிந்ததையறிந்து இருவரும் நீண்டதொரு பெருமூச்சு விட்டனர்.

தாரா தன் கன்னங்களின் சிவப்பு, ரோஜா புஷ்பங்களைத் தோற்கடிக்க, மலர்ந்த முகத்துடன் தூங்கிக் கொண்டிருந்தாள்.

நானுஜீ குனிந்து குழந்தைகளை முத்தமிட்டாள்.

குழந்தை

ரா. வீழிநாதன்

புதிதாகப் பிறந்த உன் குழந்தையை அப்படி விழுங்கிவிடுவதுபோல ஏன் பார்க்கிறாய்! அது யார், எப்படி உன்னை வந்தடைந்தது என்று உன்னால் கூற இயலுமா?

*   *   *

அதன் உடல் வெகு சிறியதுதான், ஆனால் அதன் ஆத்மா மிகவும் பெரியது.

*   *   *

அதற்கு உடலை அளித்தது நீ. அதனால் இவ்வளவு சிறியதாகவும் புஷ்பம்போல மிருதுவாகவும் இருக்கிறது.

அதற்கு ஆத்மாவை அளித்தது கடவுள். அதனால் அது இவ்வளவு சிரேஷ்டமானதாகவும், பலம் பொருந்தியதாகவும் இருக்கிறது.

*   *   *

நீ உன் பூதவுடலின் ஒரு திவலையினால் அதன் அழகிய வடிவத்தை அமைத்தாய்!

கடவுள் தம் அழியா உண்மை உடலின் திவலையைக்கொண்டு அதன் பரிசுத்தமான ஆத்மாவைப் படைத்தார்.

*   *   *

நீ உனது அறியாமையினால், உன் சுய நலத்திற்காகவும், சுகத்திற்காகவும் ஒரு பாபத்தைச் செய்தாய்!

கடவுள் தமது காருண்யத்தினால், உனக்கு நல்வழியருளும் நோக்கத்துடன், உனது பாபத்தைப் புண்யமாக்கிவிட்டார்!

*   *   *

குழந்தையின் உடல் உன் பலமின்மைக்கு ஒரு சின்னம்!

குழந்தையின் ஆத்மா கடவுளின் காருண்யத்திற்கோர் அத்தாட்சி!

*   *   *

அதன் உடல் உனது மாற்று உருவம். அதன் ஆத்மா கடவுளின் பிரதி பிம்பம்.

*   *   *

குழந்தையின் உடல், உன் வேடிக்கை கேளிக்கைகளிற்கான பலன்.

குழந்தையின் ஆத்மா கடவுளின் கலை வன்மை ஆகியவைகளின் மலர்ச்சி!

*   *   *

அதன் இந்த அழகிய சரீரம் ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் அழிந்துவிடும், மண்ணாகிவிடும். ஏனெனில் அதைப் படைத்தவன் நீ, நீயோ அழியக்கூடியவன்.

அதன் அற்புதமான இவ்வாத்மா எப்பொழுதும் இருக்கும். வளர்ச்சிபெறும். ஏனெனில் அதை அனுப்பியவர் கடவுள். அவர் நித்தியர், சாச்வதமானவர்.

*   *   *

உனது குழந்தையின் உடல் உன்னை மோகத்தில் உழலச்செய்து துன்புறுத்தும். அழ வைக்கும்.

ஆனால் அதன் ஆத்மா உன்னை உண்மையை நாடிச்செல்லுமாறு தூண்டும். சிரிக்கவும் வைக்கும்.

*   *   *

குழந்தையின் உருவம் உன்னை உலக பந்தனத்தில் சிக்கவைக்கும் சிலந்தி வலையாக இருக்கும்.

அதன் ஆத்மா உன்னை எப்பொழுதும் கடவுளின் பக்கமே அழைத்துப்போகும் வழிகாட்டியாக இருக்கும்.

*   *   *

குழந்தையின் சரீர வளர்ச்சியைச் செய்பவன் நீ.

அதன் ஆத்மாவை வளர்ச்சியுறச்செய்யும் பொறுப்பு அக்கடவுளினுடையது.

*   *   *

'நான் இவ்வுடலைப் படைத்தவன்' என்று நீ மார்புதட்டிக் கூறலாம். ஏனெனில் நீ செய்த குற்றங்களின் சின்னம் அல்லவா!

அதன் ஆத்மாவின் பொறுப்பை ஏற்றுக் கொள்ள நீ அருகதை அற்றவன். ஏனெனில் அது கடவுளால் அளிக்கப்பட்ட கருணை மான்மியம்.

நீ உன் குழந்தைக்கு ஊட்டு, பால் கொடு, ஆரோக்யசாலியாக வைத்துக் கொள். ஆனால் அதன் ஆத்மாவைக் கெடுக்கவோ மாற்றியமைக்கவோ நீ முயலாதே. ஏனெனில் அது உனக்கு, 'குரு'வாக இந்தப் பூமியை அடைந்திருக்கிறது.

(இந்த வசனக்கவிதை கொச்சின் இராஜ குடும்பத்தைச்சேர்ந்த ஸ்ரீமதி சுபத்ரா தம்புரான் என்பவரால் ஹிந்தியில் எழுதப்பட்டது)

வானுலகில் ஹிட்லர்

"ஜய்லன்"

அழிவில்லாக் கிளப்பில் "புதிய அறை"; அதில் பல சாய்வு நாற்காலிகள், சுவர்களில் சித்திரங்கள் முதலியன. நெபோலியன், ஜார்ஜ் வாஷிங்டன், க்ளெமென்ஸ்யு, வில்ஸன், லாயிட் ஜார்ஜ், எல்லோரும் சாய்வு நாற்காலிகளில் உட்கார்ந்திருக்கின்றனர். பக்கத்திலிருக்கும் "பழைய அறையில் விவாதம் செய்துகொண்டு சத்தம் போட்டுக்கொண்டிருக்கின்றனர்.

நெபோலியன்: இக்கிழவர்களால் பேசாமல் இருக்கவேமுடியாது. பாருங்கள் அந்த ஸீஸரை. தான் தான் உலகத்தின் முடிவு போலவும், அறிவின் அளவுகோல் போலவும் பேசிக்கொண்டே போகிறான். நான் உயிரோடிருக்கும்பொழுது அவன் செய்தவைகளைப்பற்றி ஆச்சரியப்படுவேன். ஆனால் இப்பொழுது! இங்கு ஹெலினாத்தீவை விட, இங்கிலீஷ்காரர்களையும்விட மோசமாயிருக்கிறது.

வாஷிங்டன்: இறப்பது மகா பயங்கரம். நாம் அங்கிருந்து வந்து விட்டால் அங்கு நடப்பது ஒன்றும் தெரிவதில்லை. அங்கிருந்து யாராவது வந்து சொன்னால்தான் நமக்குத்தெரிகிறது. ஆனால் கஷ்டம் என்னவென்றால் புதிதாக வருகிறவர்களெல்லோரும் பெருமை அடித்துக் கொள்ளுகிறார்கள், நாங்கள் இதைச்செய்தோம், அதைச் செய்தோம்...........

வில்ஸன்: ஜனாதிபதியே, நீங்கள் சொல்வது சரியில்லை. நீங்கள் வெளியேறின தினத்திலிருந்து அமெரிக்கா முன்னேற்றமடைந்திருக்கிறது என்று நான் சொல்வதை நீங்கள் நம்பவில்லையா? ஒருவேளை உங்களுக்கும், லிங்கனுக்கும் பிறகு நான் மிகப் பிரசித்தபெற்ற ப்ரெஸிடெண்டாக (President) இருந்தேன் என்பதையும் நம்பவில்லைபோலும் தாங்கள்.

வாஷிங்டன்: நான் உன்னை நம்பவில்லை என்று சொன்னேனா? உனக்குத் தெரிந்திருக்கும், என்னுடைய அப்பா எப்பொழுதும் உண்மையே பேசவேண்டுமென்று பாடம் கற்பித்தார். இறந்தபின்பாவது மற்றவர்கள் உண்மை பேசுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

லாயிட் ஜார்ஜ்: மிஸ்டர் வில்ஸன், நீங்கள் ஜனாதிபதியாக இருந்தீர்கள் என்பதற்கு நான்தான் இங்கே சாட்சியாக இருக்கிறேன்.

வாஷிங்டன்: ஆனால் எனக்குப்பிறகு மிகப் பிரசித்திபெற்ற பிரஸிடெண்ட் இல்லை அல்லவா?

நெபோலியன்: அது இருக்கட்டும், ஒரு அமெரிக்க ஜனாதிபதி பெரிய மனிதராக ஏன் இருக்கவேண்டும். மிஸ்டர் வாஷிங்டன், என்னிடம் கோபம்கொள்ளாதீர்கள்.

வாஷிங்டன்: [நெபோலியனை விழித்துப் பார்க்கிறார்]

க்ளெமன்ஸ்யு: (நெபோலியனைப் பார்த்து) அரசர்க்கரசே, புதிய ஜனங்கள் இங்கு வர வர உமக்கு அடுத்த அறைதான் சரி என்று தோன்றுகிறது. இங்கிலீஷ்காரர்களும், அமெரிக்கர்களும் ரொம்ப தற்பெருமை அடித்துக்கொள்ளுவது வழக்கம். பிரஞ்சுக்காரர்களாகிய நாம் அவர்களிடம் எப்பொழுதும் தோற்று விடுகிறோம். நாம் எப்பொழுதுமே சர்வ தேசியவாதிகள்.

நெபோலியன்: மாட்டேன், ஒருபொழுதும் இங்கிருந்து போகமாட்டேன். நான் புது உலகத்து மனிதன்தான். உங்களைப்போலவும், அதோ அந்த இங்கிலீஷ்காரனைப் போலவும்—அவன் பெயர் மறந்து போய் விடுகிறதே,

லாயிட்ஜார்ஜ்: என் பெயர் டேவிட் லாயிட் ஜார்ஜ். என்தேசமக்களும், உங்கள் தேச மக்களும் எப்பொழுதும் அப்பெயரை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுவார்கள். ஏனெனில் நான்தான் அவர்களை ஜெர்மனியிடமிருந்து காப்பாற்றினேன்.

நெபோலியன்: சரி, நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனால் ஜெர்மனியிடமிருந்து காப்பாற்றவேண்டுமென்பது எனக்குப் புரியமாட்டேனென்கிறது. மற்றவர்கள்தான் ஜெர்மானியரைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. நான் அவர்களைக் காப்பாற்றினேன். அவர்கள் முட்டாள்களாக இருந்ததால் அப்படி நினைக்கவில்லை. சொல்லப்போனால் நான் ஐரோப்பாவையே

ரஷியர் இடமிருந்து காப்பாற்றினேன். அந்த மங்கோலியர்கள் மாத்திரம் மாஸ்கோவை எரித்திருக்காவிட்டால் ஐரோப்பாவைச் சாச்வதமாகக் காப்பாற்றி இருப்பேன்.

லாயிட் ஜார்ஜ்:- இதையே தான் இன்று ஐரோப்பாவில் ஹிட்லர் சொல்லிக்கொண்டிருக்கிறார்.

(கோபக்குரல்கள் விவாதத்தில் அடுத்த அறையிலிருந்து கேட்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு குரல் "அலெக்ஸாண்டராகிய நான் கிழக்குநோக்கிச் சென்றபொழுது உலகத்தையே காப்பாற்றினேன். நம் நாகரிகம் இருக்கவேண்டுமென்றால், ஆசியா ஜனங்களை என்றென்றும் அடிமைகளாக வைக்கவேண்டும்.")

நெபோலியன்: அக்குடிகாரன் மறுபடியும் ஆரம்பித்துவிட்டான். அவனும் மேற்கைக் காப்பாற்றினதாகச் சொல்லுகிறான்!

லாயிட்ஜார்ஜ்: அதைத்தான் ஹிட்லரும் சொல்லுகிறார்...........

நெபோலியன்: இந்த ஹிட்லர் மனிதன் யார்? எனக்கு உலகத்தைப்பற்றி நினைக்கும் ஜெர்மானியன் இருப்பதாக நம்பிக்கையில்லையே.

வில்ஸன்: அவர்களுக்கு உலகத்தைப் பற்றிய யோசனைகள் உண்டு, ஆனால் எல்லாம் தப்பான வழியில் செல்லும், உன் யோசனைகள் மாதிரி. அவர்களுக்கு எப்பொழுதும் பெருந்தோல்வியே கிடைக்கிறது. உலகத்திற்கு நன்மை தரக்கூடிய லட்சிய யோசனைகளை எங்களில் சிலர் ஆரம்பித்தோம். நான் இறந்து விட்டாலும் அவைகள் அழியாமல் இருக்கும்.

க்ளெமன்ஸ்யூ: ஜனாதிபதியே, மறுபடியும் ஆரம்பிக்க வேண்டாம் சண்டைக்கு.

(கதவு திறக்கிறது. லெனினும் ட்ராட்ஸ்கியும் விவாதித்துக்கொண்டே வருகிறார்கள். லெனின் சொல்லுகிறார் "நான் சொன்ன மாதிரி......")

ட்ராட்ஸ்கி: நீங்கள் என்ன சொன்னீர்கள் என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. எனக்குத் தெரியும். நீங்கள் பொறாமையால் என்னைத் துரத்திவிட்டு அம் மீசைக்கார முட்டாளை.........

இந்தியன் பாங்கு லிமிடெட்

தலைமை ஆபீஸ்: "இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்"
வடக்கு பீச் ரோடு :: மதராஸ்

லோகல் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட் திருவல்லிக்கேணி மயிலாப்பூர்
தியாகராயநகர் புரசவாக்கம் மவுண்டு ரோடு

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 60,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 33,61,250
ரிஸர்வ் நிதி	ரூ. 33,62,500
டிபாஸிட்டுகள்	ரூ. 11,5000000-க்குமேல்

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விபரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N.P.B. N. கோபால அய்யர், செக்ரடரி

லெனின்: அவனுடைய இடத்தில் நீ இருந்திருந்தால், அவன் செய்ததெல்லாம் நீ செய்திருப்பாய், ஆனால் நீ என்னை அதிகமாக அலட்சியம் செய்திருப்பாய்.

ட்ராட்ஸ்கி: அவன் என்னைக் கொலைசெய்ய வைத்தான். உண்மையாகவே செய்தான். நீங்கள் இறந்த பிறகு உங்களுடைய ஹிருதயத்தையும், மூளையையும் ம்யூஸியத்தில் வைத்தார்கள். ஆனால் என் கதி என்னவாயிற்று. நான் கொலை செய்யப்பட்டேன்.

லெனின்: அது எனக்குப்பிறகு நடந்தது. நான் என்ன செய்வது. எனக்குப் பிறகு பிரளயம் வந்தது.

ட்ராட்ஸ்கி: உங்களுக்குப் பிறகு ஜோஸப் ஸ்டாலின் இங்கிலாந்துக்கும், அமெரிக்காவிற்கும் நண்பன், புரட்சிக்கு எதிராளி.

நெபோலியன்: ஆகா எப்பொழுதும் இதே தான். ரஷியப் புரட்சியும் எல்லாப் புரட்சிகளைப்போலவேதான். புரட்சி கடைசியில் சர்வாதிகாரத்தில் முடிகிறது. நானும் என் நாட்களில் அப்படித்தான் இருந்தேன். நான் சொன்னேன் "நான்தான் புரட்சி" என்று, பல பிரஞ்சுக்காரர்கள் என்னை நம்பினார்கள். ஏன் மாட்டார்கள்? ஒவ்வொரு மனிதனும் புரட்சிதான்.

லெனின்: இல்லை, ஒவ்வொருவனும் புரட்சி இல்லை: உங்களில் யாரும் இல்லை. நீங்கள் 'மார்க்ஸை'ப் படித்தீர்களானால், முக்கால் வாசிப்பேர் புரட்சிக்கு எதிராளிகள் என்று தெரியவரும். நீயும்தான். ரஷியாவில் எதிர்ப் புரட்சியில்லாமல், புரட்சி ஆரம்பித்தது. நான்தான் அப்புரட்சி.

ட்ராட்ஸ்கி: இவன்தான் புரட்சியாம். நான் எங்கும் இல்லை. அவனுடைய சண்டைகளை நான் போட்டேன். நான் அவன்கூடவே இருந்தேன். ஆனால் அவன்தான் புரட்சி. அவன் இறந்தபிறகு அவனுடைய வேலைக்காரன் புரட்சி வீரனாக ஆய்விட்டான்.

லெனின்: நீ கனவு கண்டுக்கொண்டிருக்கிறாய். ஸ்டாலின் காரியவாதி. உன்னுடைய கையில் புரட்சி உருவில்லாமல் இருந்திருக்கும். ஸ்டாலின் கையில் ரஷியாவாக உருவெடுத்திருக்கிறது. அப்படித்தான் லாயிட் ஜார்ஜ் சொல்லுகிறார்.

ட்ராட்ஸ்கி: இபொழுது ட்ராட்ஸ்கியைவிட லாயிட்ஜார்ஜை நம்புகிறீர்களோ?

லெனின்: இங்கிலீஷ்காரர்கள் பிறரைப் புகழ்ந்தால் நான் அதை எப்பொழுதும் நம்புவேன். பிறரைப் புகழ்வது அவர்களுக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுக்கிறது.

கதவுமறுபடியும் திறக்கிறது. இளப்பின் கௌரவ காரியதரிசியான செங்கிஸ் கான் ரூஸ்வெல்டோடு உள்ளே நுழைகிறார். எல்லோரும் பேச்சை நிறுத்துகிறார்கள். லாயிட் ஜார்ஜ் "அடகடவுளே, இது." வில்ஸன் தன்னிடத்திலிருந்து எழுந்து நீங்கள் ப்ராங்கிளின் ரூஸ்வெல்ட் அல்லவா?

நெபோலியன்: (கடு கடுப்புடன்) செங்கிஸ்கான், நம்முடைய புதிய நண்பர் மெம்பராவதற்குத் தகுந்தவரா? நாம் இப்பொழுது அதிகமாகிக்கொண்டே வருகிறோம்.

செங்கிஸ்கான்: உங்களுடைய வேலையைப் பார்த்துக்கொள்ளுங்கள். பிறரைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். கனவான்களே, இவர்தான் ரூஸ்வெல்ட். அமெரிக்காவின் ஜனாதிபதியாக மூன்று தடவையும் நான்காவது தடவையாகச் சில வாரங்களும் இருந்தார்.

வில்ஸன்: அப்பா!

வாஷிங்டன்: நான்கு தடவைகளா? என்ன கொழுப்பு!

லாயிட் ஜார்ஜ்: நல்வரவு. மிஸ்டர் ரூஸ்வெல்ட், இது எப்படி நடந்தது? நீங்கள் இங்கு வந்ததைச் சொல்லுகிறேன். மூன்று பெரிய வல்லரசுகளின் மகாநாட்டுக்குப் போகும்பொழுது வழியில் மூழ்கடிக்கப் பட்டீரோ?? ஹா, ஹா............

ரூஸ்வெல்ட்: (கோபமாக) லாயிட்ஜார்ஜ், உங்களுக்கு வல்லரசுகளின் சந்திப்புப் பிடிக்கவில்லைபோல் தோன்றுகிறது.

லாயிட் ஜார்ஜ: எனக்குப் பிடிக்கிறது. நான் ஜனங்கள் தங்களை முட்டாள்களாக்கிக் கொள்வதைக் கண்டு சந்தோஷப்படுகிறேன். அப்பொழுது நான் அவர்களைவிட எவ்வளவு புத்திசாலி என்று சொல்லிக் கொள்ளலாமல்லவா?

ரூஸ்வெல்ட்: நீங்கள் எவ்வளவு புத்திசாலியாக இருந்திருந்தாலும், டௌனிங் தெருவிலிருந்து கல்தா கொடுத்துவிட்டார்களே.

வில்ஸன்: போதும், ரூஸ்வெல்ட். ஒரு புது மெம்பர் இப்படி நடந்து கொள்ளக் கூடாது.

வாஷிங்டன்: நான்கு தடவைகள்! என்னைப் பார்த்துச்சொல். நீ நிஜமாகவே மூன்று தடவைகளுக்குமேல் ஜனாதிபதியாக இருந்தாயா?

ரூஸ்வெல்ட்: ஆம், மிஸ்டர் வாஷிங்டன். அமெரிக்கா மாறி இருக்கிறது. நாம் முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிறோம். நான் விரும்பி இருந்தால் ஐந்தாவது தடவைகூட தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம். நமக்கு இப்பொழுது வெளிநாட்டுக் கொள்கை இருக்கிறது. நம்மிடம் உலகத்திலேயே மிகப்பெரிய கப்பற்படை, மிகப்பெரிய ஆகாயப்படை, மிகப்பெரிய தரைப்படை இருக்கின்றன. உலகத்தைப்பற்றிய பொறுப்புக்களை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. ரஷியாவுடன் நம் உறவு எவ்வளவு தூரத்திலிருக்கிறது என்று நமக்குத்தெரியும். நாம் இங்கிலாந்தைக் காப்பாற்றுகிறோம்.

வில்ஸன்: நான் கீழே இருக்கும்பொழுது இவன் ஒரு சோடா அரசியல்வாதியாக இருந்தான்.

நெபோலியன்: அம் மனிதன் பேசட்டும், அவன் பேசும் விதம் எனக்குப் பிடித்திருக்கிறது.

ரூஸ்வெல்ட்: நண்பர்களே, உங்களை ஆச்சரியப்படுத்துவதற்கு வருந்துகிறேன். சர்வதேசிய நிலைமை மாறிக்கொண்டு வருகிறது. சமயம் வரும்போது கிடைப்பதைச்சுருட்டிக் கொள்ளும் லாயிட் ஜார்ஜ் கொள்கையும், வில்ஸனின் லட்சியங்களும் உலகத்திற்கு இப்பொழுது உற்சாகம் கொடுப்பதில்லை. நெபோலியனின் சர்வாதிகாரம் இன்றைய சர்வாதிகாரிகளுடன் ஒரே யடியாக அழிந்துவிடும். ஆனால் மூன்று வல்லரசுகளின் கூட்டுறவு நிலையாக நிற்கும். இது நல்ல ஏற்பாடு—இரண்டு பெரிய தேசங்களுக்கு நடுவிலே— சோடா இங்கிலாந்து. இவைகள் உலகத்தில் சமாதானத்தை நிறுவப்போகின்றன. நண்பர்களே, என்னுடைய கால்கள் பலஹீனமாக இருக்கின்றன. நான் உட்காருகிறேன்.

(செங்கிஸ்கான் மறுபடியும் கதவைத் திறந்து முஸோலினியை உள்ளேதள்ளிச் சொல்லுகிறார் "இவர்தான் ஸீனர் பெனிடோ முஸோலினி என்று சொல்லிக்கொள்ளுகிறார்" கதவைச் சாத்திக்கொண்டு போகிறார்.)

ரூஸ்வெல்ட்: நிஜமாக நீர் இறந்துவிட்டீரா?

நெபோலியன்: இவர் யார் என்று யாராவது சொல்லுங்கள்.

லாயிட் ஜார்ஜ்: இவர்தான் ஸீனர் முஸோலினி. இதாலியின் சர்வாதிகாரி. இவர் உங்களைப்போல் எகிப்தை விரும்பினார்.

நெபோலியன்: உண்மையாகவா? அவருக்கு எகிப்துதேசம் கிடைத்ததா?

முஸோலினி. இல்லை. கிடைக்கவில்லை. பிரிட்டனும், ஜெர்மனியும் என்னைக் கைவிட்டுவிட்டன. எகிப்தையும் மத்திய கிழக்கையும் இன்றும் ஜயிக்கவில்லை. ரூஸ்வெல்டின் நண்பர்கள் இவர்களுக்கு லஞ்சம் கொடுக்கிறார்கள். அவர்கள் கலகம்செய்து ஐரோப்பாவை அழிக்கும்வரை லஞ்சம் கொடுப்பார்கள். ஐரோப்பாவிற்கு நன்றாக வேண்டும். இதாலிக்கும் நன்றாக வேண்டும். இதாலியர்கள்தான் என்னைக் கொன்றார்கள். என்மேல் காறி உமிழ்ந்தார்கள். என்னைப் பைத்தியம்பிடித்த நாய் மாதிரி சுட்டுக் கொன்றார்கள்.

நெபோலியன்: நீங்கள் இதற்கு நன்றி செலுத்தவேண்டும். ஹெலினாத்தீவு பொறுக்க முடியாததாக இருந்தது.

முஸோலினி: ஹெலினாத் தீவு உங்களைப் பெரிய கதையாகச் செய்து விட்டது. நான் ஒரு சுட்டுக் கொல்லப்பட்ட வெறிபிடித்த நாய்தான். வேறு ஒன்றுமில்லை.

க்ளெமன்ஸ்யு: நீ பயப்படவேண்டாம். இங்கிலீஷ்காரர்கள் உன்னைப்பற்றிப் புஸ்தகம் எழுதி, உன்னைப் பெரியவனாக்கி, இவ்வளவு பெரியவனைத் தோற்கடித்ததால் நாங்கள் மிக மிகப் பெரியவர்கள் என்று பெருமையடித்துக் கொள்வார்கள். இது தான் நெபோலியனுக்கும் நடந்தது.

முஸோலினி: ஆனால் நெபோலியனுக்குத் போட்டியாக இவ்வளவுபேர் இல்லையே. அவரைக் கேளுங்கள்.

நெபோலியன்: அவர் சொல்லுவது சரி, என்னுடன் இருந்தவர்கள் உதவாக்கரைகள்.

முஸோலினி: என்னுடைய எதிரிகள் தங்களைப் பிரஸித்தப்படுத்துவதற்கு நல்ல ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். ரூஸ்வெல்ட், சர்ச்சில், ஸ்டாலின் இவர்களெல்லோரையும்விட அடால்ப் ஹிட்லர்தான் பிரசித்தம்.

இம்முட்டாள் ஹிட்லருக்குத்தான் அதிக பிரசாரம் தோல்வியில் அவன் அதிகமாகப் பிரகாசித்து என்னைத் தோற்கடித்துவிடுவான். அவன்தான் அடுத்த நெபோலியன்...

(கதவு திறக்கிறது. செங்கிஸ்கான் ஹிட்லருடன் உள்ளே வந்து சொல்லுகிறார். இக்கனவான் ஹெர் அடால்ப் ஹிட்லர், ஜெர்மனியின் சர்வாதிகாரி. ஐரோப்பாவைவென்றவர். எல்லோரும் அவரை முறைத்துப் பார்க்கிறார்கள்).

நெபோலியன்: *நீதான் புகழ்பெற்ற ஹிட்லரோ!*

முஸோலினி: *நீ வந்துவிட்டாயா, நீயா? ஐயோ, இங்கேயாவது எனக்குச் சாந்தி இருக்கக்கூடாதா! நீயும் உன் ஆயிர வருஷ ஜெர்மன் ராஜ்ஜியமும்.*

க்ளெமன்ஸ்யு: ஜெர்மன் மக்களை ஏமாற்றப்பிறந்தவன்போலவே இருக்கிறது.

ரூஸ்வெல்ட்: என்ன நடந்தது ஹெர் ஹிட்லர்? எப்படி நடந்தது? நான் இங்கு வந்து இவ்வளவு சீக்கிரத்திற்குள்ளாகவா, நீயும் வந்துவிட்டாய்? உனக்கு நினைவிருக்கிறதா, நாம் இருவரும் ஒரே வருஷத்தில் பதவி ஏற்றோம், நாம் மறுபடியும் இங்கு ஒன்று சேர்ந்திருக்கிறோம். நாமிருவரும் சரித்திரத்திலும் ஒரே சமயத்தில் இடம் பெறுவோம்!

லெனின்: மூளையில்லா மனிதன் போல் தோன்றுகிறானே? அசடு வழிகிறது முகத்தில். நீதான் புரட்சிக்கு எதிரி. ஸ்டாலின் கூட உன்னைத் தோற்கடித்ததில் ஆச்சரியமில்லை.

ட்ராட்ஸ்கி: இப்பொழுது நீங்களே உங்களுடைய சிஷ்யன் புத்திசாலி இல்லை என்பதை ஒத்துக்கொள்ளுகிறீர்களா?

லெனின்: அவன் புத்திசாலி இல்லைதான். ஒரு ராஜ்யத்தைத் ஸ்திரப்படுத்துவதற்குப் புத்தி எதற்கு? நீ நடுவில் பேசாதே நான் ஹிட்லருடன் பேசவேண்டும். ஹெர் ஹிட்லர், நீ வந்ததினால் ஜெர்மனியின் காலம் முடிந்துவிட்டது என்று தெரிகிறது. இது எப்படி நடந்தது?

ஹிட்லர்: *[சுற்றிலும் பார்க்கிறார் ஆனால் வாயைத் திறக்கவில்லை]*

நெபோலியன்: பாவம் இவ்வளவு வருத்தப்படாதே. நாங்களெல்லோரும் நல்லவர்கள். அன்னியர்களின் மத்தியில் இருப்பதாக நினைக்காதே. வெட்கப்படாதே. இறப்பதினால் மிகப்பெரிய நன்மை என்னவென்றால் நம்முடைய பெருமையை எப்படி வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளலாம். எப்படி நடந்தது? சொல்லப்பா.

முஸோலினி: ஒருவேளை யாராவது ஹெய்ல் ஹிட்லர் என்று சொல்லவேண்டுமென்று விரும்புகிறானோ என்னவோ. நான் சொல்லுகிறேன்—அடால்ப், "ஹெய்ல் ஹிட்லர், ஹெய்ல் ஹிட்லர்"

ஹிட்லர்: (தொண்டையைச் சரிப்படுத்திக்கொண்டு) கனவான்களே, பெரிய தப்பு நடந்துவிட்டது. நான் ஹிட்லரின் இரட்டை. நான் ஹிட்லரைப் போலவே இருக்கும் வேறொரு மனிதன். ஜெர்மனியின் சத்ருக்கள் ஹிட்லர் இறந்துவிட்டார் என்று நம்பவேண்டுமென்று நான் இங்கு அனுப்பப்பட்டிருக்கிறேன். நீங்களெல்லோரும் யார் என்று எனக்குத் தெரியவில்லை.

நெபோலியன்: *(சத்தம்போட்டு)* அத்தற்பெருமைக்கார ஆசியாக்காரனைக் கூப்பிடுங்கள். அவன் மிகவும் கிழவனாகிவிட்டான். பல முட்டாள்களை அனுப்பித்துக்கொண்டிருக்கிறாய் என்று அவனிடம் சொன்னேன். யாராவது செங்கிஸ்கானைக் கூப்பிடுங்கள்.

[எல்லோரும் எழுந்து தங்கள் முகத்தைத் திருப்பிக்கொள்ளுகிறார்கள். ஹிட்லருக்கு முதுகைக் காட்டுகிறார்கள். மிகவும் கோபத்துடன் வெளியே போகிறார்கள். முஸோலினி மாத்திரம் ஹிட்லரிடம் சென்று காதோடு கேட்கிறார். "இது என்ன 'ஸ்டண்ட்' அடால்ப். இங்கேயும் உன் 'ஸ்டண்டு'களை விடப்போவதில்லையா? இச்சூழ்ச்சி எதற்கு?"

ஹிட்லர்: எனக்கு இப்பொழுது கூட்டத்தைக் கண்டால் பிடிக்கிறதில்லை. மேலும் இங்கே யூதர்களின் நாற்றமும் அடித்தது. தயவு செய்து என்னைக் காட்டிக் கொடுத்துவிடாதே.

அமிர்தமும் கள்ளும்

ஜி. எஸ். மணி

"அன்னம்! மணி ஐந்தாகப் போகிறதே? இன்னமும் ஏனிப்படி அழுது வழிகிருய்?", என்று கேட்டான் விச்வநாதன்.

"அழுது வழியத்தான் பிறந்தேன்; அழுது வழிகிறேன்?" என்று சூடாகப் பதிலளித்தாள் அன்னபூரணி.

"அப்படியென்ருல்?"

"கைக்காரியத்தை அப்படியே போட்டு விட்டுக் குலுக்கி, மினுக்கிக் கொண்டு நின்று விட்டால் எல்லாம் சரியாகி விடுமாக்கும்?"

"செய்யேன்? காரியம் செய்வதை யார் வேண்டாமென்று தடுக்கிருர்கள்? அது பாட்டுக்கு அது; இதுபாட்டுக்கு இது; ஜோராக அழகு படுத்திக் கொண்டு உன் காரியத்தையெல்லாம் செய்தால் வேண்டாமென்கிறதோ? ஆகாதோ?"

"ஆமாம்! அப்படித்தான்! ஜோரா[illegible]ங்காரித்துக்கொண்டு நிற்க நான் என்ன தாஸியா?"

"ஓஹோ, அப்படியென்ருல் தன்னை அழுது வழியாமல், அழகு படுத்திக் கொள்ளுகிறவர்கள் எல்லோருமே தாஸிகள் தானுக்கும்?"

"அப்படியென்ருல்?"

"சாதாரணமாகச் சாயங்கால வேளைகளில் முகம் கழுவி, தலைவாரி, பொட்டு வைத்துக் கொண்டு, சுத்தமாக இருப்பவர்கள் எல்லாருமே—உன் பாஷையில்—தாஸிகள் தானே வென்று கேட்கிறேன்?"

"இந்தக் கொனஷ்டைப் பேச்சுக்களுக்கெல்லாம் சரியானபடி பதில் சொல்ல எனக்குத் தெரியாது!"

"யார் பேசுகிறது கொனஷ்டை?"

"நான்தான் என்றுதானே சொல்ல வருகிறீர்கள்? அப்படித்தான் இருக்கட்டுமே?"

"நேற்றெல்லாம்கூட நீ அழகாக 'டிரஸ்' செய்து கொண்டு, 'டாயலட்' போட்டுக் கொண்டு இருந்ததாகத் தானே எனக்கு ஞாபகம்?"

"நான் தான் 'தேவடியாள்' என்றுதானே இப்போது இப்படிச் சொல்லுகிறீர்கள்?" என்று அன்னபூரணி ஆத்திரம் பொங்கக் கேட்டபொழுது அழுகையினுல் குரலும் கம்மியது.

"நான் அப்படியா சொன்னேன்?"

"இன்னும் வேறு எப்படித்தான் சொல்ல வேணும்?"

"அசடே........."

"போறும்; போறும்! நான்தான் கொனஷ்டை பேசுகிறவள்! நான்தான் தாஸி. இன்னும் என்னென்னதான் என்னை ஏசப் போகிறீர்கள்?" என்று ஆங்காரமாக அவள் கேட்டபொழுது கண்களில் நீர் மல்கியது.

"போதும்டீ அம்மா? நான் சொன்னதெல்லாம் தப்பு; நீ அழவும் ஆரம்பித்து விடாதே?"

"ஆமாம்! சொல்வதையெல்லாம் சொல்லி விட்டுப் பாசாங்கு மன்னிப்புக் கேட்கிறதைப் பார்!"

"பாசாங்கா! நான்தான் அப்படியென்ன சொல்லி விட்டேன்? சொல்லேன் நீதான்?"

"எனக்குத் தெரியாது!"

"அன்று இருவருமாகச் சினிமாவிற்குப் போனேமே; அப்போது மட்டும் உன்னை எத்தனை விதத்தில் அழகு படுத்திக் கொண்டாய்?"

"அதுதான் சொல்கிறேனே? நான் 'தாஸி' தான் என்றுதான் ஒப்புக் கொண்டாகி விட்டதே? இன்னும் எத்தனை தடவை......?..."

"இதோபார், அன்னம்? வீணுக அசட்டுப் பிசட்டென்று பிதற்ருதே? ஆடை அலங்காரங்களெல்லாம் எனக்காக இல்லையா ஒன்றும்?—எல்லாம் வெளியில் கிளம்பும் போது, மற்றப்பேர் உன்னைப் பார்த்து வியக்க வேண்டும் என்பதற்காகத்தானு—என்றுதான் கேட்கிறேன்?"

"நான் பேசாமல் இருக்க இருக்க நீங்கள் என்னவோ ரொம்ப ரொம்ப விரட்டிப் பார்க்கிறீர்களே. நேற்று எங்கேயாவது வெளியில் போனோமா? நேற்றைய தினம் நான் வழக்கப்படி 'டிரஸ்' செயது கொள்ள வில்லை? தினமும் உங்களைக் கேட்டுக் கேட்டா நான் செய்து கொள்கிறேன்? என்னவோ இன்று ஒருநாள் மட்டும் கொஞ்சம்............"

"அதையே தான் நானும் அப்போதே பிடித்து உன்னைக் கேட்டுக் கொண்டிருப்பதுவும்! என்னவோ நேரடியாகப் பதில் சொல்லாமல் எப்படியோ சுற்றி வளைத்துக் கொண்டு பேசுகிறாயே?"

"என்னத்தைச் சுற்றி வளைக்கிறேன்?"

"இன்றைக்கு இன்னமும் முகம் கழுவிப் பொட்டு வைத்துக் கொள்ளவில்லையா? என்னவோபோல் அழுது வழிகிறாயே, என்று கேட்டதற்கு 'உண்டு—இல்லை' யென்று 'சட்'டென்று பதில் சொல்ல?"

"இன்று உங்களுக்காகவே நான் அழுது வழியத்தான் போகிறேன்!"

என்னதான் இருந்தாலும் உன் 'குரங்கு சுபாவம்' உன்னைவிட்டுப் போகவே போகாதுபோலிருக்கிறது?"

"ஆமாம்! நான் குரங்குதான்!"

"அடி பைத்தியமே!"

"நான் பைத்தியந்தான்!"

"ஐயோ? கஷ்டம், கஷ்டம்! உன்னைப் போய்க் கட்டிக்கொண்டேனே?"

அப்படிச் செய்யும்படி நான் உங்களிடம் கெஞ்சவில்லையே?"

"வேறு போக்கிடம் இல்லாமல் நானாகச் செய்ததைத்தான் இப்போது சொல்லிக் கொள்கிறேன்! நீ கெஞ்சினதாக நான் சொன்னேனா? நீதான் 'தனக்காகக்கூட இல்லாமல் மற்றப் பேர்களுக்காகவே வாழும் தன்னலமற்ற தியாகி' ஆயிற்றே! கேவலம்—என்னையேன் லக்ஷ்யம்செய்யப் போகிறாய்?"

"அட மிருகமே!"

மேதா...

மஸ்தானா மாத்திரைகள்

சிறந்த டானிக்

மேல்நாட்டு வைத்திய முறை, நமது ஆயுர்வேத முறை இவைகளை ஒருங்கே சேர்த்து தயாரிக்கப்பட்டுள்ளது

பலஹீனம், வாத வலிகள், மன ஒய்வு,
தலைவலி, அஜீர்ணம், மலச்சிக்கல்,
காசநோய், சிற்றின்பத்தில் பலஹீனம்

இவைகளுக்கெல்லாம் கைகண்ட ஔஷதம்

இன்றே ஆரம்பியுங்கள்

கிடைக்குமிடம்:—

K. S. மேதா & கோ.,

மருந்து வியாபாரிகள்,

250, சைனா பஜார் (மாடி), சென்னை

"உம்? என்ன சொன்னாய்?"

"கட்டின மனைவியையே மகா கேவலமாக அவள் எதிரிலேயே பேசும் உங்களை 'மிருகம்' என்றால் என்ன மோசம்?"

"எனக்கு இதுவும் வேண்டும்; இன்னமும் வேண்டும்!"

"நான் மட்டும் உணர்ச்சியற்ற ஜடமோ?"

விச்வநாதனுக்கு மஹா கோபம் வந்துவிட்டது—"அடசீ! மூடு வாயை!" என்று ரௌத்ராகாரமாகக் கர்ஜித்தான். "இனிமேல் உன்னுடன் பேசினால் — உன் பக்கம் திரும்பிப் பார்த்தால்—உன்னை ஏனென்று கேட்டால்—என்னை, "என்னடா நாயே?" என்று கூப்பிடு. உன் மூஞ்சியிலே இனி விழிப்பதில்லை!"

"தொல்லைவிட்டது! இஷ்டம்போல் இருப்பேன்! நான் மட்டும் 'ஏங்கிப் போவேன்' என்ற எண்ணமோ?" என்று அன்னபூரணியும் ஆத்திரம் கொண்டு சீறினாள்.

விச்வநாதன் துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு 'விருட்' டென்று வெளியே போனான், வீட்டைவிட்டு.

2

அது மாதிரி சம்பவம் அவர்கள் வாழ்க்கையிலே அது முதல் தடவையல்ல. அதற்கு முன்னரும் எவ்வளவோ தடவைகள் பல நிகழ்ந்துள்ளன. ஆயினும் இந்தத் தடவை போல் இத்தனை தூரம் முற்றிப்போனது கிடையாது. முற்றுமுன்னரே ஏதாவது ஒரு கை 'சட்டென்று' படிந்துவிடும்; அல்லது யாராவது ஒருவர் அதிகம் பேசாது 'ட்க்' கென்று வாயை மூடிக்கொண்டு விடுவதுண்டு, மேன்மேலும் போகவிடாமல். அது அநேகமாக விச்வநாதனாகத்தான் இருக்கும். ஆனால் இந்தத் தடவை அவர்களை அறியாமலேயே விஷயம் வெகுதூரத்திற்குப் போய் விட்டது.

அவ்விளந் தம்பதிகளிடையே அற்ப விஷயங்களுக் கெல்லாம் கோரமான வாக்கு வாதங்கள் காரசாரமாக நடப்பதுண்டு தான்; ஒன்றுமில்லாததற்கெல்லாம் வாதப் பிரதி வாதங்களும், பயங்கரமான பூசல்களும், பூகம்பமாக அதிர்ந்து சதிர் செய்வதெல்லாம் என்னவோ உண்மைதான்; தம்பிடி பெறாத விஷயத்திற்கெல்லாம் தாறுமாறான சண்ட பிரசண்ட சொற்பொழிவுகள் நடக்கும்—அப்படி நடக்கிறதையும் இருவருமே அறிவார்கள்; அதெல்லாம் அனாவசியமானது என்பதையும்கூட அவ்விருவரும் நன்றாய் உணர்வார்கள். ஆனாலும் சண்டை நடக்கிறது நடந்தே தீரும்; பின்னாடி எப்படியாவது ஒருவிதத்தில் அவர்களிடையே சமாதானமும் நிலவி விடும்! இளந் தம்பதிகளின் பருவகாலப் பிணக்கு என்றே கொள்ளலாம் — 'வேற்றுமை மனோபாவம்' என்று ஊன்றிக் கவனிக்கும் சிலர் சொல்லலாம். எப்படியும் இருவருடைய அபிப்பிராயங்களும், கடைசியில் பார்த்தால், ஒன்றாகத்தான் இருக்கும்; இருவரும் ஒரே உண்மையைத்தான் நாடுவார்கள்; ஆனாலும் போகும் பாதைதான் வெவ்வேறு விதமாய் இருக்கும். ஒரே முடிவைநாட ஒருவர் போகும் வழி ஒருவர் போகமாட்டார்கள்! இதுதான் வித்யாஸம்! இது பிணக்கா? வேற்றுமை மனோபாவமா? இரண்டுமே இல்லாத ஒரு விசித்ரமான போக்கு; விபரீத மனப்பான்மை என்றும் சொல்லத் தோன்றுகிறதல்லவா? எப்படியிருந்தால் என்ன? மிகவும் அசங்கியமானது; அருவருக்கத் தக்கது.

இப்போது நடந்ததைப் பார்த்தால் என்ன தோன்றுகிறது? விச்வநாதனின் விருப்பம் என்ன? அன்னபூரணி காலா காலத்திலே முகம் கழுவி, தலைவாரி, சுத்தமாக ஆடையணிந்துகொண்டு இருக்கவேணும் என்பதேயல்லவா? அதாவது எந்தெந்தச்சமயத்தில் எதெதைச் செய்யவேண்டுமோ அததையே செய்யவேணும்; எவ்வெப்பொழுது எப்படி எப்படி இருக்கவேணுமோ அப்படி அப்படி இருக்கவெணும்—என்பதுதான் அவன் இஷ்டம். அதனால்தான் 'அறுபது நாழிகையும் சமையல் அறையிலேயே அவிகிறாயே; மணி ஐந்தாகிறதே' யென்று தன் ஆசையை 'அழுது வழிகிறாயே' என்றதன் மூலம் தெரிவித்தான்.

அன்னபூரணியின் ஆசைமட்டும் வேறென்னவாயிருக்க முடியும்? தன்னை அழகுபடுத்திக்கொண்டு தன் கணவனின் எதிர்சென்று, அவனிடம் ஆசையையும், கிளர்ச்சியையும் உண்டாக்க விரும்பாத அணங்கும் உலகில் உண்டோ? அன்றுமட்டும் என்னவோ கொஞ்சம் தாமதமாகிவிட்டது. "இதோ ஆயிற்று" என்று அன்னபூரணி பதில் சொல்லியிருந்தாலும் தீர்ந்தது; அல்லது "இன்று நேரமாகிவிட்டது; நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாமே" என்று சொல்லியிருந்தாலும் போயிற்று; அப்படியுமில்லாவிட்டால் அன்றைய அபரிமிதமான காரியத்தாலோ அல்லது வேறெந்த ஒரு அல்லது பல கார

ணங்களினாலோ அவளுக்கு அஸாத்யமான மனச்சோர்வாயிருந்திருக்கும் பக்ஷத்தில்—"ஆமாம்; நான்தான் அழுதுவழிகிறேன்? நீங்கள் மட்டும் அழகு சொட்டுகிறீர்களோ?" என்றாஷ்து ஆத்திரம்தீர—சோர்வு ஆற—சொன்னதுபோலும் இருக்கட்டும்; சுட்டதுபோலும் இருக்கட்டும் என்றபடி பதிலுக்குப்பதில் 'பளிச்'சென்று சொல்லி விட்டிருந்தால்கூட விச்வநாதன் எத்தனையோ மகிழ்ந்துபோயிருப்பான்...... அன்று அவன் அவளிடமிருந்து எதிர்பார்த்ததும் அந்தமாதிரி ஏதாவதொன்றுதான்............ ஆனால் எப்படி ஆரம்பித்த பேச்சு, எங்கெங்கேயோ சுற்றிவந்து, அவர்களே அறியாமல் உணர்ச்சி வேகத்திலே — வார்த்தைகளின் தடிப்பிலே—எதில் வந்து முடிந்திருக்கிறது!

இத்தனைக்கும் விச்வநாதனின் ஸ்வபாவம் அன்னபூரணிக்குத் தெரியாததா? தமாஷ் பேச்சும், விளையாடும் தன்மையும் அவனது 'பிறப்புரிமை' என்பதை அவள் அறியாதவளா? அதை அறிந்துகொள்ளாமல் அவள் ஆரம்பத்திலே அவனுடன் 'தகராறு' செய்தபொழுது அவனேகூட வாய்விட்டுத் தன் மனதைத் தெரிவித்துக்கொள்ளவில்லையா? அதன் பிறகும்கூட அவன் எத்தனையோ தடவைகளில், "நான் உன்னைச் சொல்வது அத்தனையும் 'அப்படியே நிஜமாகத்தானோ' வென்று ஒரு பொழுதும் சந்தேகப்பட்டுவிடாதே. அவ்வளவும் 'விளையாட்டுக்கோசரம் 'தான்' அப்படியே நீ ஒருவேளை கோபித்துக்கொண்டுவிட்டாலும், அதற்காகப் பயந்துகொண்டு நான் என் சுபாவத்தை மாற்றிக்கொண்டுவிட முடியும் என்று நீ எதிர்பார்க்காதே!" என்றுஅவளிடம்சொன்னதில்லையா? அதையெல்லாம் அதற்குள்ளாகவா மறந்துபோய்விட்டாள் அன்னபூரணி?............

ஆயினும் அவள் ஸ்வபாவத்தையும் விச்வநாதன் அறிந்தவன்தான். ஒரே வார்த்தையில் அவள் 'தொட்டால் சுருங்கி!'—'முணுக்சிணுக்'கென்பதற்குமுன் அவளுக்குப் 'பூத்'தென்று கோபம் வந்துவிடும்! மூஞ்சியை 'புஸ்' ஸென்று உப்பவைத்துக்கொண்டு விடுவாள். மஹா படபடப்புக்காரி; மஹா ஆத்திரக்காரி; முன் யோசனையில்லாமல் பேசிவிடுவதில் மகா சமர்த்தை; பின்னாடி அதற்காக மிகவும் வருந்துவாள்; பேதைப் புத்தி படைத்தவள்—ஆனாலும் ரொம்ப தங்கமான மனசு. முதலில் எத்தனைக்கெத்தனை படபடப்பாகப் பொரிந்து கொட்டுவாளோ அவ்வளவுக்கவ்வளவு பின்னால் உள்ளம் உருகித் தவிப்பாள்........

இருந்தும் என்ன பிரயோஜனம்? அன்றையசம்பவத்தில் விச்வநாதனுக்கே அளவு மீறிகோபம்வரும்படி பேசிவிட்டாளே? எவ்வளவுதான் தமாஷ் பேர்வழியாக இருந்தபோதிலும் மனிதனுக்குள்ள மற்ற உணர்ச்சிகளும் அவனுக்கு இருந்தே தீரவேண்டுமல்லவா? சமயத்திற்குத் தகுந்தபடி அவைகளும்வெளிப்பட்டேயாகவேண்டுமல்லவா?

அகாரணமாக — அனாவசியமாக — இப்படியா......?.........

இன்னொருநாள் இப்படித்தான் ஏதோ பேச்சுவாக்கிலே, "ஏன்? இன்று வெற்றிலை போட்டுக்கொள்ளவில்லையா?" என்று அவளைக் கேட்டான்.

அன்னபூரணி பதிலே சொல்லாமல் வாயைமூடிக்கொண்டிருந்தாள். 'அலக்ஷியம்' என்று அவனுக்கு லேசாகக் கோபம்வந்தது.

"உம்? அப்படி யெல்லாம் நீ சொன்னவுடனே கேட்டுவிடுவாயா? சொன்னதைக் கேட்டு வெற்றிலை போட்டுக்கொண்டுவிட்டால்......?" என்று சொல்லி நிறுத்தினான்.

அதுவரையில் பேசாமலிருந்த அன்னபூரணி அப்போது அவன் வாயை மேலும் இளறிவிட்டாள்,

"உம்? மேலே, சொல்லுங்கள்! ஏன் நிறுத்திவிட்டீர்கள்?" என்றாள்.

"கௌரவக் குறைவு என்கிற எண்ணம் தான்! இவன் சொல்லி நாம் கேட்பதாவது? என்கிற நினைவுதான்! என் வார்த்தைக்கு அத்தனை மதிப்பு! இல்லாவிட்டால் இதற்கு முன்பு எவ்வளவோ தடவைகளில், "என்னவோ தெரியவில்லை; வாய் நாறுகிறது" என்று நீ சொன்னபொழுதெல்லாம், வெற்றிலை போட்டுக்கொள்; சரியாகப் போய் விடும்" என்று நான் சொல்லியிருக்கிறேனே? ஒருதரமாவது நீ என் சொல்லைக் கேட்டிருப்பாயா? என்று முடித்தான்.

மறு க்ஷணம் பார்த்தால் அன்னபூரணியின் கண்களிலிருந்து நீர் 'தாரை தாரை' யாகப் பிரவேசித்துக்கொண்டிருந்தது!

அவள் திடீரென்று அப்படி அழும் காரணம் அவனுக்குப் புரியவேயில்லை. திகைத்துப்போய், "ஏன் அன்னம்?"ஏன் அன்னம்? ஏன் அழுகிறாய்? அழும்படி நான் என்ன சொல்லிவிட்டேன்? அல்லது என்ன செய்துவிட்டேன்? "என்று விச்வநாதன் வினவியபொழுது அவள் கட்டுக்கடங்காமல் தேம்பிக்கொண்டே, "வெற்றிலை போட்டுக்

கொள்ளவில்லை யென்றால் என்னவோ பிடிக்கவில்லை! அதற்காக இத்தனை சொல்லா? இவ்வளவு பிடுங்கலா?'' என்று விக்கினாள்.

'வெற்றிலை போட்டுக் கொள்ளப் பிடிக்கவில்லை' என்பதை அப்போதே 'வாயாய் வார்த்தையாய்ச் சொன்னால் ஆகாதா? அதற்கு இவ்வளவு தூரம் அழுகையென்ன? ஸாகஸமென்ன?— என்பது விச்வநாதன் கக்ஷி.

ஒன்றா, இரண்டா? ஒவ்வொன்றும் இப்படியே! ஆரம்பம் முதல் கடைசி வரை 'கோணல்' தான்! இதில் கோணல் புத்தி என்றால் அது உண்மையில் யாருக்கு?—என்பதில் வேறு அவர்களிடையே பெரும் பூசல் உண்டாகி விடும்! ''உங்களுக்குத் தான் கோணல் புத்தியும் கொனஷ்டைப் பேச்சும்!'' என்று அவன்மீது பழியைச் சுமத்துவாள். அவன் அவளைக் குற்றம் சாட்ட முயலுவான்—கடைசியில் விஷயம் ஒருவாறு முடிவாக வேண்டுமென்றால் அது விச்வநாதன் படிந்தால் தான்!

ஒருவன் பொறுமைசாலி என்றால் அவன் பொறுமையை எவ்வளவு தூரம்தான் அதற்காகச் சோதிக்க முடியும்? பொறுமைசாலி-புத்திசாலி-எல்லாமிருந்த போதிலும் கடைசியில் 'மானிட ஜாதி' தானே?

ஆகவே கடைசியில் ஒருநாள் விச்வநாதனும் பொறுமை இழந்து விட்டதில் ஆச்சர்யம் என்ன?

3

இப்படியெல்லாம்—இன்னும் என்னவெல்லாமோ, பற்பலவாறு யோசித்

Madras Stockists:- M/s. RAJAN DRUG STORES
155, Nyniappa Naick Street, MADRAS.

துக்கொண்டு, அன்னபூரணியின் நடத்தையைப்பற்றித் தனக்குள்ளாகப் பொருமியபடியே விச்வநாதன் போய்க்கொண்டே இருந்தான். ஓர் இடத்திலும் நிலையில்லாமலே போய்க்கொண்டிருந்தவன் போலே காணப்பட்டான்............

அந்தி மயங்கி இருட்டின் முதல் ரேகையிலே கலந்தது. ஸந்திக்காக்கைள் கூட்டிற்குப் பறந்து போய்க்கொண்டிருந்தன. அவசரப்பட்ட இரண்டொரு நக்ஷத்திரங்கள் மட்டும் முன்னதாகவே வானவெளியில் தலை நீட்டிக் கண் சிமிட்டின. இங்கொன்றும், அங்கொன்றுமாக விளக்குக்கள் பிரகாசிக்கத்தொடங்கின............

மனசு ஒடிந்துபோய், வாழ்விலே வெறுப்புற்றவனாக விச்வநாதன் போய்க்கொண்டேயிருந்தான்............

அவன் அகஸ்மாத்தாகத் தலை நிமிர்ந்த பொழுது 'அவள்' வாசற்படியிலே, தன் இருகரங்களையும் தலைக்குமேலே உயர்த்தி, நிலையைப் பிடித்தபடி, நின்று கொண்டிருந்ததைக் கண்டான்.

அவளும் இவனைப்பார்த்தாள்;

இருவர் கண்களும் ஒருநிமிஷம் சந்தித்துப் பேசிக்கொண்டன. அவள், இவனை வரும்படியாகத் தனது அகன்ற—அழகிய விழிகளால் ஸமிக்ஞை காட்டினாள்; அந்த மலர்ந்த வதனத்திலே தோன்றிய புன் முறுவல் மயக்கும் சக்தி வாய்ந்ததாக இருந்தது...

விச்வநாதன் திடுக்கிட்டான்; ஒரு பருவ மங்கை முன்பின் அறிமுகமில்லாத ஒரு பரபுருஷனை, நடு வீதியில் நின்று, வலுவில் அப்படி அழைப்பதா! அவன் உடம்பு புல்லரித்தது............

நன்றாகக் கண்களைத் திறந்து கொண்டு கவனித்தாள்; அவன் அப்போது 'தாஸித்தெரு'வில் அல்லவா போய்க்கொண்டிருக்கிறான்! அந்தப் பக்கம் எப்படி வந்தான்!......

விச்வநாதன் ஒரு நிமிஷம் தயங்கினான்; அந்தப் பெண்ணின் அழைப்பிற்கு இணங்கிப் போவதா—வேண்டாமா—என்று உள்ளத்திலே ஒரு நிமிஷம் தீவிரமான போராட்டம்! அதற்கு முடிவு காணவில்லை.........

அதற்குள்ளாக அவளிடமிருந்து, அவனை நோக்கி, அடுத்தடுத்து, அலைமோதிய அந்த விழிவெட்டுக்களாலே தாக்குண்டவனாய்த் தன்னை மறந்தான் விச்வநாதன்.........

அவளிடம் ஒருகால் அன்பைக் காணலாமோ வென்று ஒருக்ஷணம் அவன் உள்ளம் மனப்பால் குடித்தது.....காணாத கனவு கண்டது............

அந்த வீட்டு வாசற்படி ஏறி விட்டான்!

அங்கு நின்று அவனை அழைத்த அப்பெண் அம்பென உள்ளேயோடி மறைந்தாள்......

விச்வநாதனும் அவளை அவசரமாகப் பின் தொடர்ந்தான். கிழவி யொருவள் எதிர்ப்பட்டாள்—'வாங்க, மாப்பிள்ளை! வாங்க, வாங்க! அதோ அந்த அறையிலே போய் உட்காருங்க!'' என்று அவள் அவனை வரவேற்று உபசரித்து, பக்கத்திலிருந்த சிறிய அறை ஒன்றைச் சுட்டிக் காண்பித்தாள்.

ஏனோ விச்வநாதனுக்குச் சொல்ல முடியாத அருவருப்பாக இருந்தது!

கிழவி காட்டிய அறையினுள், அவளால் இயக்கப்பட்ட இயந்திரமென நுழைந்தான்.........

அது ஒரு சின்னஞ்சிறு படுக்கையறையாகக் காணப்பட்டது: ஒரு புறம் சுவரை ஒட்டி சிறிய கட்டில்; அதன்மீது விரிக்கப்பட்டிருந்தது ஒரு மெத்தை; மெத்தையின் லக்ஷணங்கள் வெளியில் தெரியாதபடி அதை மூடிக்கொண்டிருந்தது ஒரு சலவைத் துணி; இரண்டு உரையிட்ட தலையணைகள்—தலைப்புறம் ஒன்றும், கால்புறம் ஒன்றுமாகக் கிடத்தப் பட்டிருந்தன. கட்டிலருகே—அதன் தலைப்புறத்தில் ஒரு சிறிய முக்காலி; அதன்மீது ஒரு—அழுக்கடைந்து, பாசம் பிடித்துப் போன—பித்தளைத் தட்டு; அதில் வெற்றிலை, பாக்கு இத்யாதி வஸ்துக்கள்; ஒரு சிறிய ஸீசாவில், சிகப்புச் சுண்ணாம்பு'; இன்னொரு தகரடப்பியில்—அது 'வாஸனைப் புகையிலை'யாகத்தான் இருக்கும்! அல்லது கிராம்பு, ஏலக்காய், ஜாதிப்பத்திரி இத்யாதிகளாயுமிருக்கலாம்?

கட்டிலுக்கு எதிர்ப்புறமாக ஒரு சிறு ஜன்னல் இருந்தது; அதன் கதவுகள் மூடப்பட்டிருந்தன. கட்டிலை யொட்டியிருந்த சுவரிலே ஓர் அலமாரி; அதற்கும் கதவு இருந்தது! அதுவும் மூடியே இருந்தது. அலமாரிக்குள் என்ன இருந்ததோ, கடவுளுக்குத்தான் வெளிச்சம்!

அறைக்குள் புழுக்கமும், இறுக்கமும் அளவிடமுடியாமல் அடைத்துக் கிடந்தது ....மூச்சுக்கூடச் சரியாக விடமுடியாமல் விச்வநாதன் திணறினான்.........'என்ன

செய்கிறோம்-எங்கே இருக்கிறோம்' என்றே புரியாமல் திக்பிரமை அடைந்தவனைப் போலே, 'திரு திரு'வென்று விழித்துக் கொண்டே நின்றான்; தேகமாத்யந்தம் 'குப்'பென்று வியர்த்திருந்தது.........

மலர்ந்த மல்லிகையின் ஸுகந்தம் 'கம்' என்று வீசியது; கை வளைகள் ஒன்றோடொன்று மோதிக் குலுங்கும் இனிய நாதம்; யாரோ வரும் காலடி யோசை.........

அவள் வந்தாள்; அவன் பார்த்தான்; அவனை அழைத்த அதே பெண்தான்.........

“ஏன்? நின்றுகொண்டே இருக்கிறீர்களே! உட்காருங்கள்!” என்று அன்பொழுகக் கட்டிலைக் காட்டினாள்.

“அட! தாம்பூலம் கூட அப்படியே இருக்கிறதே, வைத்தது வைத்தபடி! போட்டுக்கொள்வதில்லை?”

அவள் கொஞ்சிக் கொஞ்சிப் பேசினாள்; குரல் ஒலியும் இனிமையாகத்தான் இருந்தது.

விச்வநாதன் அவளையே பார்த்தபடி நின்றுகொண்டேயிருந்தான், பிரமை பிடித்தவன் மாதிரி. வாயிலிருந்து யாதொருவிதமான வார்த்தைகளும் வெளிப்படவில்லை.

அவள் சிரித்தபடி அவன் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டுபோய் கட்டிலில் உட்கார வைத்தாள். பின்னர் தானும் அவன் பக்கத்திலே—அவன் மீது உராய்ந்தபடி—உட்கார்ந்து, வெற்றிலை மடிக்க ஆரம்பித்தாள்.........

விச்வநாதன் அவளையே கண் கொட்டாமல் விழித்துப் பார்த்தபடி இருந்தான்.........

உருண்டையான முகம்; அகன்ற—ஆழ்ந்த விழிகள்—அந்தக் கருமணிகளின் அழகே அழகு; அந்த முகத்திற்குக்கண்களே அதிக அழகு வாய்ந்தனவாக இருந்தன; 'பேசும் விழிகள்!' மூக்கும் எடுப்பாகத்தான் இருந்தது; உதடுகள் சற்றுத் தடிப்பாய் காணப்பட்ட போதிலும் நன்றாக இராமல் இல்லை; பல் வரிசையும் பரவாயில்லை; அங்கங்கள் யாவும் உருண்டு திரண்டு யௌவனத்தின் காந்தியுடன் விளங்கின. முகத்தை இன்னும் அழகு செய்துகொள்வதாக நினைத்துக் கொண்டு, பௌடரை அப்பி, ஸாதாரணப் பொலிவையும் மறைத்துவிட்டாள்; வெற்றிலைக் காவிபடிந்த பற்களும், உதடுகளும் 'லிப்ஸ்டிக்'கைத் தலைகுனியச் செய்தன; ஸாதாரணப் புடவைதான் அணிந்திருந்தாளெனினும், அங்கங்களின் பொலிவை அது கொஞ்சமும் மாசு படுத்தவில்லை; உடல் மாசு மறுவற்றே விளங்கியபோதிலும் உள்ளம் எப்படியிருந்ததோ, யாருக்குத் தெரியும்? அழகுக்கு அழகு செய்யும் அணிகலன்கள் அவளிடம் அதிகமாகக் காணப்படாத போதிலும், மனமாகிய ஆபரணம் எப்படிப் பட்டதோ யார் கண்டது? காதுகளில் டோலக்குகள் — இமிடேஷன்தான்! கழுத்தைச் சுற்றிக்கொண்டு மார்பில் தொங்கியதும், ஒரு போலித் தங்கச் சங்கிலிதான்; இரண்டு கரங்களிலும் கண்ணாடி வளையல்கள்; மாநிறமாகப் பார்ப்பதற்குப் பங்கமில்லாமல்தான் விளங்கினாள். ஆனால் அந்தக் கண்ணழகு மட்டும் வியந்து ஸாத்தியமாகாது. அவளது ஒவ்வொரு பார்வையும், ஒவ்வொரு விதத்திலே, புருஷனின் உயிரையே சுண்டியிழுக்க வல்லது என்றால் மிகை ஆகாது. விச்வநாதன் மயங்கியதில் ஆச்சர்யமென்ன?

அவன் அவளைப் பார்த்துக்கொண்டேயிருந்தான்.

அவள் அவனைக் கடைவிழிகளால் கடாக்ஷித்தாள்.

“அப்படியே என்னை விழுங்கிவிடுவதைப் போலே பார்த்துக்கொண்டேயிருக்கிறீர்களே!” என்று அவனைப் பார்த்து அவள் சொன்னபோது குரலில், இனிமையும், சிரிப்பும், நாணமும் கலந்திருந்தன.

வெட்கம் கொண்டு எழுந்தாள். அலமாரியைத் திறந்தாள்; அதிலிருந்து ஓர் ஐந்தாறு ஊதுபத்திகளையும், அவற்றைச் சொருகி வைக்க ஒரு பித்தளை 'நிர்வாண லேடி' பொம்மை ஸ்டாண்டையும் வெளியில் எடுத்தாள். ஊதுபத்திகளைக் கொளுத்தி, பொம்மையின் தலையில் சொருகினாள்.

வத்தியிலிருந்து எழுந்த சுருள் சுருளான வாஸனைப் புகை கொஞ்ச நேரத்தில், கொஞ்சதூரம் மேலே பரவி நின்று, பிறகு கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தது. பின் தங்கிய வாஸனையுடன் புழுக்கமும், இறுக்கமும் சேர்ந்துகொண்டன.

அவள் மீண்டும் விச்வநாதனின் பக்கலிலே வந்து அமர்ந்துகொண்டாள்.

— 4 —

அந்த முதல் பழக்கம் விச்வநாதனை மேலும் விடாமல் எப்படியோ விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டுவிட்டது. அவள் வீட்டிற்கு அதிலிருந்து அவன் அடிக்கடி போகலானான். அந்த அழகியிடம், அவன்,

தன் மனைவியிடம் பெருத அன்பை, அடைந்துவிட்டானே நினைத்தபடி? எவ்விதமாகவோ அவள் அவனைத் தன் மாயவலையிலே சரியானபடி சிக்க வைத்துவிட்டாள்.........

சுற்றியுள்ளவர்களுக்கு விச்வநாதனின் விஷயம் எத்தனை நாட்களுக்குத்தான் தெரியாமலிருக்கும்?

அடுத்த வீட்டு அம்புஜம் ஒருநாள் அதைப் பற்றி அன்னபூரணியிடம் பிரஸ்தாபித்தபொழுது அன்னபூரணி அப்படியே ஸ்தம்பித்துவிட்டாள்.

"என்னடி உளறுகிருய்?" என்று அவள் அதை நம்பாமல் கோபித்தபொழுது அம்புஜம் அலக்ஷியமாக நகைத்தாள்.

"உனக்கு எல்லாம் உளறலாய்த்தானிருக்கும்? புருஷர்கள் ஸ்வபாவம் உனக்குக் கொஞ்சமாவது தெரிந்திருந்தால் தானே? ஏண்டீ? உங்களுக்குள்ளே ஏதாவது மனஸ்தாபமா?" என்று கடைசியில் ஒரு வெடிகுண்டையும் தூக்கிப் போட்டாள்.

அன்னபூரணி திகைத்துப்போனுள். அம்புஜத்தின் கடைசிக் கேள்வியைக் காதிலேயே போட்டுக் கொள்ளாதவள்போலே, "ஏண்டீ நிஜமாகவா? உனக்கெப்படித் தெரிந்தது?" என்று வினவினுள்.

"நான்தான் நேரிலே போய்ப் பார்த்தேனுக்கும்? உன் வீட்டுக்காரர் அந்த வீட்டுக்கு நாள் தவருமல் போகிறதை, எங்காத்துக்காரரும் நாள் தப்பாமல் பார்த்துவிட்டுத் தான் என்னிடம் சொன்னுர்!" என்ருள் அம்புஜம்.

"போடி! அது வேறு யாராவதிருக்கும்! 'இவர்' அப்படியெல்லாம் ஒருநாளும் செய்யவேமாட்டார்!"

"நீ நினைத்துக்கொண்டிருக்கிருய்! யார் கண்டது? ஆனுலும் இனிமேல் என் வீட்டுக்காரருக்குப் புதிதாகக் கண்ணுடி போட வேண்டாமென்றுதான் நினைக்கிறேன். அனுவசியமாக அவர் பொய்யும் சொல்லமாட்டார்; கல்பித்தும் பேசமாட்டார். நிஜம் நிஜம்தான், நீ நம்பாவிட்டால் போயேன்? யாருக்கு நஷ்டம்?" என்று அம்புஜம் அன்னபூரணியைச் சரியானபடி முடுக்கிவிட்டுப் போய்விட்டாள்.

அன்னபூரணியின் உள்ளம் கொதித்துக் கொண்டிருந்தது. "இத்தனை தூரத்திற்கும் வந்துவிட்டதா? அதனுல்தானே, இத்தனை நாளாகியும், என்னிடம் இவ்வளவு அலக்ஷியும்?" என்று உள்ளூறப் புழுவாய்த் துடித்தாள். மேற்கொண்டு என்ன செய்வதென்று புரியாமல் தவித்தாள்.

விச்வநாதன் சில நாட்களாக, இரவு வேளைகளில், நெடுநேரம் கழித்து வீட்டுக்கு வருவதின் மர்மமும் அப்போதுதான் அன்னபூரணிக்கு விளங்க ஆரம்பித்தது............ "விஷயம் இப்படியா!" என்று தனக்குள்ளாகவே பொங்கினுள்.

அவர்கள் இருவரும் ஒருவருடன் ஒருவர் பேசிக்கொண்டே வெகுநாட்களாகிவிட்டன. ஜாடைமாடையாகப் பேசிக்கொள்வதுகூடக் கிடையாது. ஏன்? அன்றைச் சண்டையிலிருந்து—அவர்களிடையே முகாலோபனம்கூடக் கிடயாது என்றே சொல்லிவிடலாம். முகாலோபனமே இல்லையென்ருல் பேச்சுவார்த்தை எங்கிருந்து வரும்?

அன்றுமுதல் அவன் வீட்டில் தங்குவதே வெகு அபூர்வம். அப்படியே சில மணிநேரம் இருந்துவிட்டாலும் இருக்குமிடமே தெரியாது. 'எங்கே இருப்பானே? என்ன செய்வானே?'—அவளுக்கு ஒன்றுமே தெரியாது. வெளியில் சென்ருலும் 'எங்கே போகிருன்? என்ன செய்யப்போகிருன்? என்பதை அன்னபூரணி அறியாள். சாப்பாட்டைக்கூட அவன் வீட்டில் வைத்துக்கொள்ளவில்லை, 'எங்கே சாப்பிடுவானே?'—அநேகமாக ஹோட்டலில்தான் இருக்கும்?

பகலில் பெரும் பகுதியை விச்வநாதன் வீட்டில் கழிப்பதே கிடையாது முன்பு மாதிரி. எங்கேயாவது சுற்றிக்கொண்டே தான் இருப்பான். 'கால்தான் வலிக்காதா? மனம்தான் ஓயாதா?' என்றுகூட அன்னபூரணி நினைத்ததுண்டு.

இரவிலும் நெடுநேரம் கழித்தே அவன் வீடு திரும்புவான். ஏன்? ஒரு நாளைப் போலவே—தினந்தோறும்—பாதி ராத்திரி வரையில் எங்கே அப்படியென்ன வேலை? அம்புஜம் சொன்ன வரையில் அவளுக்கு ஒன்றும் தெரியாது. அதைப்பற்றிக் கவலைப் பட்டதுமில்லை.

வழக்கமாகச் செய்வதுபோல் அவள் வாசற் கதவைத் திறந்து வைத்துவிட்டுப் படுத்துக்கொண்டு விடுவாள்—அதாவது கதவைத் தாழிடாமல் வெறுமனே மூடி வைத்திருப்பாள். வரும்போது அவன் திறந்து கொண்டு வருவான். சிலநாட்கள் அவன் வருவது தெரியாமல் தூங்கிப் போய்விடுவாள்; சில நாட்கள் விழித்துக்கொண்டிருக்கும்போது, நடையிலே அவனுடைய செருப்புச் சப்தம் கேட்டு, மணி என்னவென்று

பார்ப்பாள். பன்னிரண்டோ, ஒன்றோ, இரண்டோ ஆகிவிட்டிருக்கும். 'இத்தனை நாழிவரைக்கும் எங்கேதான் போய் என்னதான் செய்துகொண்டிருப்பாரோ' என்று தனக்குள்ளாகவே ஒவ்வொருபொழுது ஆச்சரியப்படுவாள். ஆனால் எப்போதும் அதைப்பற்றிச் சிரத்தை எடுத்துக்கொண்டு கவலைப்பட்டது கிடையாது!

அவளது சொந்த மனோபாவத்தைப்பற்றி அவளுக்கே ஆச்சர்யமாகத்தானிருந்தது. "நாமே இப்படியிருக்கிறோமே! நடக்கக் கூடியது தானா?" என்று எத்தனையோ தடவைகளில் தன்னைப் பற்றியே அதிசயப்பட்டுக் கொண்டிருக்கிறாள். "கணவனுடன் சண்டை போட்டுக்கொண்டு பேசாமல் இருக்கிறோமே! அவன் சாப்பிட்டானா? தூங்கினானா? எங்கே போகிறான்? என்ன செய்கிறான்? என்று இந்த மாதிரியெல்லாம் என்னதான் மனஸ்தாபமாயிருந்தாலும் ஒருத்தியால் கவலைப்படாமலே இருக்க முடியுமா? ஆனால் அவள் கவலைப்படவில்லை. ஆனால் அதற்கு முன்பும் அவள் அப்படிக் கவலைப்படாமலே இருந்ததில்லை! அதுதான் அதிசயம்!' உண்மையான அதிசயம்!—இப்போது மட்டும் ஏனிப்படி? "அன்று அவன் அவளைப்பற்றி ரொம்பவும் அளவுமீறி ஏசி விட்டான்.— இதுதான் அன்னபூரணியின் கட்சி—அதற்கு முன்பு ஒரு நாளும் அவன் அவளுடன்' அத்தனை துடுக்கான' வார்த்தையாடினதே கிடையாது! அன்று மட்டும் ஏன் அப்படி? அத்தனை கேவலமாகப் பேசும்படி அவள் என்ன சொல்லிவிட்டாள்? என்ன செய்துவிட்டாள்? பேசினான் அல்லவா? எப்படி வேண்டுமானாலும் போகட்டுமே? அவளுக்கென்ன?

அதற்கு முந்திய சண்டை சச்சரவுகளில் அவளே அவனுடன் 'சமாதான-உடன்படிக்கைக்காக எவ்வளவோ விழைந்திருக்கிறாள்! அவனும் முந்திக்கொண்டிருக்கிறான்! ஆனால் இப்போதோ சமாதான ஆசையே அவளுக்கு இல்லை! ஏன்? அவன் செய்தது மன்னிக்க முடியாத ஒரு குற்றமல்லவா? அதனால் தான்! வேண்டுமானால் முதலில் அவனாகவே தான் வந்து அவளிடம் மன்னிப்புக் கோரட்டுமே? ஆனால் அவனுக்கும் 'அந்த எண்ணமே இல்லை' என்றுதான் தோன்றியது.........ஏன்?............

அவனது புதிய 'உறவு, தான் காரணமாயிருக்குமோ'–என்று அன்னபூரணி நினைத்த பொழுது அவளால் தாங்கவே முடியவில்லை. அப்படியே 'தற்கொலை' செய்துகொண்டு விடலாமா என்றுகூட ஒவ்வொரு சமயம் நினைத்தாள். அம்புஜம் சொன்னதைப் பற்றி அணுவளவாவது சந்தேகம் கொள்ளவே அன்னபூரணியினால் முடியவில்லை. விச்வநாதன்மீது அவ்வளவு தூரம் பரிபூரணமான நம்பிக்கை வைத்திருந்தாள் அவள். 'என்னதான் இருந்தாலும் அவன் அவளுக்குக் கனவிலும் துரோகம் செய்ய மாட்டான்' என்றே முழுவதும் நம்பியிருந்தாள்.

ஆனால் அம்புஜம் என்னவோ சொல்லுகிறாளே? அத்தனை நாளும், விளையாட்டிற்குக்கூட, அப்படியேதாவது சொல்லியிருக்கிறாளா? அப்படியெல்லாம் சொல்லப்பட்டவள் இல்லையே அவள்? அதில் கொஞ்சமாவது உண்மையில்லாமல் திடீரென்று அப்படி வீணான ஒரு பழியைச் சொல்லுவார்களா?...............

அன்னபூரணியின் மனது, என்னவோ, அமைதியில்லாமல் தவித்தது. இனியும் அவளால் கவலைப்படாமல் இருக்கமுடியுமா? 'சண்டையோ— பூசலோ— பிடிக்கிறதோ—பிடிக்கவில்லையோ?'—அவன் அவள் சொத்தல்லவா? அதைக் கைமாற விட்டுவிடலாமா?

"சேச்சே? இத்தனை நாளும்கூட அசட்டுத்தனமாய் அவருடன் பேசாமலே இருந்து விட்டோமே? அதனால் தானோ? எதற்கெடுத்தாலும் மூர்க்கத்தனமாய் முரண்டு பிடிக்கிறோமே, அதனால் தானோ? பிடிவாதம் பாராட்டாமல் அன்றே அவருடன் பிணக்கைத் தீர்த்துக்கொண்டிருந்தால்?..." என்று என்னவெல்லாமோ எண்ணி எண்ணி ஏங்க ஆரம்பித்து விட்டாள் அன்னபூரணி.

"வரட்டும்! இன்றே இதைப்பற்றி இரண்டிலொன்று தீர்த்து விடுகிறேன்!" என்று தீர்மானித்துக்கொண்டவளாய், விச்வநாதனை எதிர்பார்த்து, அதியாவலுடனே காத்திருந்தாள். கட்டுக்கடங்காத சந்தேகங்களும், என்னவோ—சொல்ல முடியாத ஒரு பயமும் கூடவே போட்டியிட்டு அவள் மனதைச் சித்திரவதை செய்தன.

நேரம் கழிவதாயில்லை; துடித்துத் தவித்த வண்ணம் அவள் ஒவ்வொரு நிமிஷத்தையும் ஒவ்வொரு யுகமாகத் தொலைத்துக் கொண்டிருந்தாள்.

தினப்படி 'என்னவோ ஏதோ' என்று 'பொங்கித் தின்று' வந்த ஒரு கவளச் சோற்றிலும் அன்று மண்தான் விழுந்தது.

5

நடு ராத்திரியில் விச்வநாதன் தட்டுத் தடுமாறிக்கொண்டு வாசற்படியேறும் சப்தம் கேட்டது.

கொட்டக் கொட்ட விழித்துக்கொண்டிருந்த அன்னபூரணி ஓடிப்போய்க் கதவைத் திறந்தாள்.

விச்வநாதன் ஆடிவிழுந்துகொண்டே உள்ளே நுழைந்தான். கண்கள் ரத்தம் போல் சிவந்து கிடந்தன. அவனிடமிருந்து சாராய நாற்றமும் குபீரென்று வீசியது.

அன்னபூரணிக்கு அடிவயிற்றிலே பகீரென்று பட்டது. "ஐயோ, தெய்வமே! குடிக்கவும் ஆரம்பித்தாகி விட்டதா? இது என்ன விபரீதம்!" என்று அலறினாள்.

விச்வநாதன் அவளை விழித்துப் பார்த்தான். "கழுதை! ஏதாவது பேசினாயோ உன்னை இந்த இடத்திலேயே கொன்று போட்டு விடுவேன்!" என்று சீறினான்.

அவனுடைய கரகரத்த குரலைக்கேட்ட அன்னபூரணி நடுங்கினாள். "அதுஒன்றுதான் பாக்கி நிற்கிறது! அப்படியேயாவது கொன்று விடுங்கள் என்னை! எனக்கும கவலையில்லாமல் போகும்; உங்களுக்கும் தொல்லை விட்டது என்றிருக்கும்" என்று துக்கம் தாங்கமுடியாமல் விம்மினாள்.

விச்வநாதன் அவளை மென்னையைப் பிடித்துத் திருகுவருவதுபோல் கைகளைப்பயங்கரமாக விரித்துக்கொண்டு வந்தான். அவள் கண்களை இறுக மூடிக்கொண்டாள்.

ஆனால் மறுக்ஷணமே விச்வநாதன் தன் மனதை மாற்றிக்கொண்டு விட்டதாகத் தோன்றியது. அவளைக் கொல்லாமல் தோள்பட்டைகளை இரு கைகளாலும் அழுத்தமாகப்பற்றி, பயங்கரமாக அவளை உலுக்கியவனாய் ஹூம்! ஜாக்கிரதை!" என்று மிரட்டினான்.

அன்னபூரணி கண்களைத் திறந்து அவனை நிமிர்ந்து நோக்கினாள். "ஹூம்! ஒரு சமயம் "அன்னம், அன்னம்!" என்று என்னை அன்புடன் அணைத்த இதே கைகள் இன்று என்னைக் கொல்லவும் துணிந்துவிட்டன! இதென்ன விபரீதகாலமோ! யார் செய்த வினையோ? என்ன சதியோ?" என்று விவரிக்கமுடியாத வயிற்றெரிச்சலுடனே விம்மினாள்:

"பேசாதே! மூடு வாயை!" என்று குமுறி, தனது ஆள்காட்டி விரலைப் பயங்கரமாக ஆட்டினான் விச்வநாதன்.

அன்னபூரணிக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. "ஏன் இப்படி என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ளுகிறீர்கள்? இந்தப் பாவம் ஒருநாளும் வீண்போகாது!" என்று சொல்லமுடியாமல் விக்கி விக்கி அழ ஆரம்பித்துவிட்டாள்.........

விச்வநாதன் 'திருதிரு' வென்று விழித்தான். எப்போதுமே அவனுக்கு அவள் அழுவது பிடிக்காது. அப்போது என்ன தான் குடித்திருந்தாலும் 'உள் நினைவு' அவனுக்கு நன்றாக இருந்தது.

"ஆச்சு! அழுது தொலைக்க ஆரம்பித்து விட்டாயா! சனியன்! பீடை!" என்று உளறி உளறிச் சொன்னான்.

"நான் சனியன்தான்! பீடைதான்! ஒரே அடியாக எனக்கு முழுகித் தொலைத்துவிட்டு அப்புறம் எங்கே வேண்டுமானாலும் போகிறதுதானே?" என்று அழுகையினிடையே பொங்கினாள் அன்னபூரணி.

"அதற்கு உன்னைக் கேட்கவில்லை! நான் போகிறதும், போகாததும் என் இஷ்டம்!

சேலத்தில்

கல்யாணப் பட்டு ஜவுளி ரகங்கள் வாங்க சிறந்த இடம்

கோபால பத்ம விலாஸ்

385, கடைவீதி, சேலம்.

Proprietors :

S. N. PATHMANABA CHETTIAR

P. R. JAYAGOPALA CHETTIAR

தெரிந்ததா!'' என்று அவளைச் சுட்டுவிடுவது போல் பார்த்து அவனும் சீறினன்.

''எரித்து விடுகிறதுபோல் பார்த்துவிட்டால்மட்டும் போதுமா? 'எரித்துவிட்டு அப்புறம் எவளிடம் வேண்டுமானாலும்—எந்தக் கழுதையிடம் வேண்டுமானாலும் தொலையுங்கள்'-என்றுதான் சொல்கிறேன்! நான் உயிரோடு இருக்கும் வரையிலும் கேட்கத்தான் கேட்பேன்! ஏன் கேட்காமல் இருப்பேன்?''

''கழுதை—குதிரை என்று பேசினையானல் தெரியுமா? பல்லை உடைத்துவிடுவேன்! நீதான் கழுதை! நீதான் கழுதையிலும் கேடுகெட்ட நாய்!'' என்று கோபாக்கிராந்தனாய் ஆடினன்.

''அப்படியானல் என் புருஷன் மட்டும்?'' என்று சவால் விடுத்தாள் அன்னபூரணி.

''ஏ? என்ன சொன்னய்?''

''என்னைக் கொன்றுவிடுங்கள்! கொன்றுவிடத்தான் சொல்லுகிறேன்'' என்று சொல்லி மீண்டும் பரிதாபகரமாக அழத் தொடங்கினள்.

''சீச்சீ! வாயைமூடு! அழுகையை நிறுத்து!''

''இனிமேல் எனக்குத் துரோகம் நினைப்பதுகூட இல்லை; கனவிலும் நினைப்பதில்லை. யென்று சொல்லுங்கள்! என்னை விட்டுவிட்டு அந்தத் 'தேவடியாச் சிறுக்கி'யிடம் போவதில்லை யென்று தெய்வ சாக்ஷியாகச் சொல்லுங்கள்! குடியை இன்றோடு விட்டுத் தொலைத்துவிடுவதாக ஸத்யம் செய்து கொடுங்கள்! அப்போதுதான் அழுகையை நிறுத்துவேன்! இல்லையானல் அழுது அழுதே பிராணனை விட்டுவிடுவேன்!''

''தொலை எப்படியாவது! தரித்திரப் பிணமே!'' என்று உருமினன் விச்வநாதன்.

''ஏன்? அவ்வளவுக்குக் கசந்துபோய் விட்டதோ?''

''ஆமாம்! உன்னைவிட அவள் எவ்வளவோ தேவலை; எவ்வளவோமேல்! அத்தனையும் தங்கம்!''

''அவள் அத்தனை ஒசத்தி யென்றல் ஒருமிக்க அவள் வீட்டோடேயே அடைந்து கிடந்து அழிந்து மடிவதுதானே? நடுநடுவே இங்கேயும் வந்து வந்து ஏனிப்படி என்னுடன் போர் தொடுக்கிறீர்கள் அனுவசியமாக''

''இது என் வீடு!'' என்று பளிச்சென்று பதிலளித்தான்.

நான் மட்டும் உங்கள் சொத்து இல்லையா?'' என்று அவளும் பளீரெனக் கேட்டாள்.

விச்வநாதன் பேசாமல் இருந்தான்.

''ஏன் வாயை மூடிக்கொண்டுவிட்டீர்கள்? சொல்லுங்கள்! சொல்லுங்கள்!'' என்று அவன் தோளைப் பிடித்து உலுக்கினள்.

''நீ சதா சர்வதா என்னிடம் சிடுசிடுக்கிருய்! அவள் முகம் கடுப்பதேயில்லை!'' என்றன்.

அந்த வார்த்தைகள் அவள் உள்ளத்தைப் போய்த்தொட்டன.

''ஆனல் அவள் பணம் பறிக்கிருளே? அது தெரியவில்லையா?'' என்று வினவினள் அமைதியை வருவித்துக்கொண்டு.

''அது அவள் தொழில்!''

''அது தெரிந்துமா போகிறீர்கள்?''

''உன்னைக் கண்டால் பிடிக்கவில்லை! என் இஷ்டம்!.........''

அந்த வார்த்தைகள் அன்னபூரணியின் உள்ளத்தின் ஆழத்திலே சம்மட்டி அடியைப்போலே விழுந்தன.

''அப்படியா? ஏனே?'' என்றள் சொல்ல முடியாத ஆத்திரம் குமுறி எழ.

''தெரியாது!''

''அப்படியானல் இப்பொழுதே அவளிடமே தொலையுங்கள்! தொலைந்துபோங்கள், என் மூஞ்சியிலேயே முழிக்காமல்!'' என்று பழையபடி பாம்பெனச் சீறினள்.

மறுக்ஷணமே அவன் போவதற்காக, மறுவார்த்தையின்றி, திரும்பி நடந்தான். மேலே செல்ல முடியாமல் தடுமாறிக் கீழேவிழுந்துவிடுபவனைப் போலே தள்ளாடினன். இரண்டு எட்டுக்கள் எடுத்துவைத்ததுமே, அவன் குடித்திருந்ததைச் சட்டென உணர்ந்துகொண்டாள் அன்னபூரணி.

''எங்கேயாவது விழுந்து தொலைந்துவிட்டால்?'' என்ற எண்ணம் பளிச்சிட்டது.

சட்டென்று அவனுக்கு முன்னேயோடி வழியை மறித்துக்கொண்டு நின்றள்—''வேண்டாம்! போகாதீர்கள்! தெரியாமல் சொல்லிவிட்டேன்; என்னைத் தனியே தவிக்கவிட்டுவிட்டுப் போகாதீர்கள். நான் சொன்னதையெல்லாம் — நான் செய்ததை

யெல்லாம்—மறந்து என்னை மன்னித்து விடுங்கள். ஸத்தியமாகச் சொல்லுகிறேன்—இனிமேல் நான் உங்கள் மனம் கோணுத படி நடந்துகொள்கிறேன். தெய்வ ஸாக்ஷியாகச் சொல்லுகிறேன்—இனிமேல் சிடுசிடுக்கும் ஸ்வபாவத்தையே விட்டுத் தொலைத்து விடுகிறேன். எப்போதும் இன்முகத்துடன் இருப்பேன்—வாருங்கள்! குடியையும், கூத்தியையும் நீங்களும் மறந்துவிடுங்கள். வாருங்கள்! உங்கள் துர்நடத்தையைக் கண்டு மனசு புண்ணுகியே வாயில் வந்ததை உளறி விட்டேன்—என் மனப்பூர்வமாக அப்படியெல்லாம் உங்களைச் சொல்லுவேனு? உங்களுக்கே தெரியாதா? என் துர்ஸ்வபாவத்தையும் இன்ருேடு—இந்த க்ஷணத்தோடு—விட்டொழித்துவிட்டேன், வாருங்கள்! என் ராஜா இல்லையா? என் துரையில்லையா? தயவுசெய்து என் மானத்தைக் காப்பாற்றுங்கள்! வாருங்கள், படுத்துக்கொள்வோம்!" என்று தன் மனக்கொதிப்பை மறைத்துக் கொண்டவளாய்—அவன் அப்போதைய நிலையைக் கண்டு, அவனது 'குடிவெறி'யை உணர்ந்தவளாய்—தனது குரலைத் தாழ்த்திக்கொண்டு, அவன் இரு கைகளையும், தன் இரு கரங்களாலும் இறுகப் பற்றிக்கொண்டு, பரிதாபகரமான முகத்துடனே, கண்களில் நீர் மல்க—உணர்ச்சிப் பெருக்கால் குரல் அடிக்கடி கம்ம, அவனை அன்புடன் கெஞ்சி அழைத்தாள்.

அவளுடைய அப்போதைய முகத் தோற்றத்தைக் கண்டால் கல் மனதும் கரையும்; அவளது பரிதாபகரமான குரலைக் கேட்டால் ராக்ஷஸ உள்ளமும் உருகும்; அன்பு நிறைந்த அந்த அழைப்பை-கனிவுகொண்ட அந்தக் கெஞ்சலைச் செவியுற்ருல் கொலை பாதகனும் குழந்தையாகிவிடுவான்.

அவனுடைய அந்தப் பேச்சு விச்வநாதனின் உள்ளத்தைத் தொட்டதா? அந்த முகம் போதை நிறைந்த அவன் மனத்திலே என்ன மாறுதலைச் செய்தது? அன்னபூரணியின் அந்தராத்மாவின் துடிப்பு அவன் அந்தராத்மாவின் துடிப்புடன் கலந்ததா?.........

விச்வநாதன் மிரளமிரள விழித்தான். போதை அவன் தலைக்கேறி விட்டதோ? முகமெல்லாம் தணலைப்போல் சிவந்து பளபளத்தது.........

கள் வாடையைச் சகித்துக்கொண்டு, அன்னபூரணி அவனைக் கையைப் பிடித்து உள்ளே இழுத்துச் சென்ருள். தடுமாறிக் கொண்டே அவன் அவளைப் பின் தொடர்ந்தான்.

விரித்து வைக்கப்பட்டிருந்த அவளது படுக்கையிலே அவனை மெதுவாக—லாகவமாகக் கிடத்தினுள்.

அவன் படுத்தபடி கண்ணை மூடிமூடித் திறந்தான்.

அன்னபூரணியும் அவனுக்குப் பக்கத்திலே படுத்துக்கொண்டாள். அவன் திடீரென்று எழுந்துபோய்விடாதபடியோ—என்னவோ—அவனைச் சுற்றித் தன் வலக்கரத்தை வளைத்துக்கொண்டு, தன்னுடன் இறுக அணைத்துக்கொண்டாள்.

கோரமான புயலுக்குப் பின்னர் நிலவும் பயங்கர அமைதி, அப்போது அங்கே நிலவியது.........

குடிவெறியின் மயக்கம் விச்வநாதனை வெகு சீக்கிரத்திலேயே தூக்கத்தில் ஆழ்த்தி விட்டது.

அன்னபூரணியோ வெகுநேரம் தூங்காமலே—அடிக்கடி ஆழ்ந்த பெருமூச்செறிந்துகொண்டு கிடந்தாள்.

— 6 —

மறுநாள் காலையில் அன்னபூரணி கண் விழித்துப் பார்த்தபொழுது சூரியோதயமாகி வெகுநேரமாயிருந்தது.

முதல்நாள் நிகழ்ச்சிகளெல்லாம் அவளுக்கு முதலில் ஒரு கனவுபோல் தோன்றி, சிறிது சிறிதாக நனவாகத் தொடங்கியது... ராத்திரி நிகழ்ந்தவை யெல்லாம் அவளுக்கு ஒன்றன்பின்ஞென்ருக நினைவு வந்தது......

அவசரமாகத் திரும்பி,தனக்கருகில் பார்த்தாள்.

விச்வநாதனை அங்கே காணேும்!.........

அன்னபூரணிக்குப் பகீரென்றது.

விடியற்காலையிலேயே எழுந்துவிட்டானே?.........

வீடெல்லாம் தேடினுள். அவன் இல்லை.

அங்கே இருந்தால்தானே? எங்கேதான் போயிருப்பான்?............

'மறுபடியும் அவளிடமே போய்விட்டானே?' என்றெண்ணியபொழுது அவளுக்கு மீண்டும் திகீர் என்றது.........

'அங்கேதான் போயிருப்பான்!.........'

‘அப்படியானால் நேற்றிரவு அவனுக்குச் சொன்னதெல்லாம் ஒரு பொம்மையிடம் சொன்னதுபோலத்தானே?— அவனுடைய அப்போதைய ‘போதை நிலை’யில் அவள் சொன்னதெல்லாம் — அவனிடம் கேட்டுக் கொண்டதெல்லாம் — மனசில்தான் பட்டிருக்குமோ?......... என்னவோ? என்று அவள் நினைத்தபொழுது உள்ளம் மீளாத் துயரத்தில் ஆழ்ந்தது; சோர்ந்தும் போயிற்று.........

‘தவறு நிஜமாகவே அவளுடையதுதானே?’ என்ற சிந்தனை மனத்திரையிலே ஓடியது.

“நீ சிடுசிடுக்கிறாய்—அவள் முகம் கடுப்பதில்லை!”—என்று தலை தெரியாத ‘போதை’யிலும் அவன் சொன்னது அவளுக்கு ஞாபகம் வந்தது.

‘அன்றே எப்படியாவது அவனுடன் சமாதானமாகப் போயிருக்கலாகாதா?’ என்றெண்ணி ஏங்கினாள். இது எதில் போய் முடியுமோ? என்று நடுங்கினாள். ‘குடியும் அல்லவா சேர்ந்துகொண்டது? — இன்றும் குடித்துவிட்டு வந்து கூத்தடித்தால் என்ன செய்வது ஈசுவரா’ என்று பயந்துசெத்தாள்.

என்னவோ தோன்றி மத்தியானம் அவனுக்காகச்சமைத்துவைத்துக்கொண்டு காத்திருந்தாள்.........

அவனை எதிர்பார்த்து, எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தாள்.

அவன் வரவில்லை.........வரவேயில்லை......

ஒவ்வொரு க்ஷண நேரமும் அவளைச்சகிக்க முடியாத சித்ரவதை செய்துகொண்டே கழிந்தது. பெருமூச்செறிந்து, பெருமூச்செறிந்து பொழுதைத் தொலைத்தாள்; அவன் வராததைக் கண்டு மனம் வெதும்பி வெறுப்படைந்தாள்.

விலைமதிக்க முடியாத வஸ்து ஒன்றைவீணாகப் பறிகொடுத்துவிட்ட உணர்ச்சியொன்று அவள் உள்ளத்திலும், உடலிலும் ஊறிக் கிடந்தது. ‘கொண்ட கணவனை உயிருடன் இழந்துவிட்டதாகக் கருதிக்கருத்திழந்தாள். பித்துப் பிடித்தவள்போலே பதுமையாய் உட்கார்ந்துகொண்டேயிருந்தாள். அவள் தோற்றம் கண்ணராவியாக இருந்தது; உருக்குலைந்து காணப்பட்டாள்.........

விளக்கு வைக்கும் நேரத்திற்கு விச்வநாதன்வந்தான்! ஆடி அசைந்து, தள்ளாடிக்கொண்டே அவன் வீட்டு வாசற்படியேறினான்......

திடுக்கிட்டு எழுந்து நின்றாள் அன்னபூரணி; அவனை உற்று நோக்கினாள்.

தலையின் பரட்டை சஹிக்க முடியவில்லை; பிடித்துப் பிய்த்து எடுத்ததுமாதிரி யிருந்தது. முகத்தின் பரிதாபம் கண்கொண்டு காண முடியாததாக இருந்தது—எதையோ அனியாயமாகப் பறிகொடுத்துவிட்டவனின் பரிதவிப்பு முகத்தோற்றத்திலே துடித்தது. கண்கள் ஒளி யிழந்து, எல்லை காணமுடியாத துக்கத்தின் சாயையை வழியவிட்டுக் கொண்டிருந்தன.

ஒரு பைத்தியக்காரனைப் போலே விழித்துக்கொண்டும், மென்று மென்று விழுங்கிக் கொண்டும் வந்து அவன் அவள் எதிரிலே ஸ்தம்பமாய் நின்றான். என்னவோ சொல்லவும் விரும்பியவனாய்—ஆனால் சொல்லமுடியாமல், சக்தியற்றவன்போலே—தயங்கித் தயங்கி நின்றான்.........

‘அவன் குடித்துவிட்டுத்தான் வந்திருக்கிறானோ’ வென்று அன்னபூரணி முக்காலும் சந்தேகித்தாள். ஆனால் அவளும் ஒன்றுமே வாய்திறந்து சொல்லாமல் அவன் எதிரில் பொம்மையாக நின்றாள்.

“அன்னம்!” என்று கடைசியில் விச்வநாதனே வாய்திறந்து அவளை அழைத்தபோது அவள் தாங்கமுடியாத ஆச்சர்யத்தினால் ஸ்தம்பித்தே போனாள். அவன் குரலில் ஒலித்த குழைவும், கனிவும் அவளைத் திடுக்கிடவைத்து, அதே சமயம் உள்ளம் சிலிர்க்கவும் செய்தது.

“அன்னம்! என்னை மன்னிக்க மாட்டாயா?” என்று சொல்லமுடியாமல் தடுமாறினான் விச்வநாதன்.

அவள் பிரமித்தாள்—“இன்றும் குடித்துவிட்டு.........?” என்று அவள் ஸந்தேகத்துடன் ஆரம்பித்தபொழுது குரல் கிணற்றிலிருந்து பேசுவதுபோல் ஒலித்தது. மேலே சொல்லாமல் நிறுத்திவிட்டாள்.

“நீ சந்தேகப்படுவது நியாயம்தான், அன்னம்? ஆனாலும் தோற்றமும், பேச்சும் எப்படியிருந்தபோதிலும்—ஸத்யமாகச் சொல்லுகிறேன்—இன்று நான் குடிக்கவேயில்லை. அன்னம்! ஈச்வர சாக்ஷியாகச் சொல்லுகிறேன்—நேற்று சொல்லச் சொன்னாயே?—இன்று சொல்லுகிறேன்—‘குடியையும்—கூத்தி’யையும் விட்டொழித்துவிட்டேன்! ‘தலை முழுக்கு’ப்போட்டுவிட்டேன்!” என்றான் விச்வநாதன்.

அன்னபூரணி திகைத்தாள். 'பூலோகமோ, ஸ்வர்க்கலோகமோ' என்றிருந்தது அவளுக்கு; பேச்சற்று நின்றாள்......

விச்வநாதன்தான் மேலும் பேசினான்—

"அன்னம்! நிஜமாகச் சொல்லுகிறேன்— உனக்கு என்னிடம் பிரியம் இல்லையென்று நினைத்தேன்; நீ என்னை வெறுக்கிறாய் என்றே எண்ணினேன்.........ஆகவே......... அன்பை நாடி அவளிடம் போனேன்! அமிர்தம் என்று நினைத்துக்கொண்டேன் — ஆனால் அரவத்தைத் தான் கண்டேன்?......விஷத்தைத் தான் உண்டேன்......யாரோ செட்டியார் ஒருத்தர் குறுக்கிடுகிறார்!......"

அவன் பெருமூச்சுடன் நிறுத்தினான்.

"ஆஹா? விரட்டப்பட்டுத்தான் வந்தீர்களா?!"—இது அன்னபூரணியின் மனம்.

விச்வநாதன் மேலும் தொடர்ந்தான்—

"அன்னம்! இன்றுகூட 'நைப்பாசைப்' பட்டுக் கொண்டுதான் போனேன்! நேற்று ராத்திரி நீசொன்னதெல்லாம் கனவு போலே நெஞ்சில் அலை மோதிக்கொண்டு தான் இருந்தது; ஆனாலும் போனேன்! அவமானப்பட்டு வந்தேன்; விரட்டப்பட்டு ஓடினேன்!...... 'தற்கொலை செய்துகொண்டு விடலாமா'வென்று எண்ணினேன்! உன் முகம் உள்ளத்திலே தெரிந்தது; உன் பேச்சு, காதிலே ஒலித்தது. உன் பால் வடியும் முகம் என்னை உலுக்கியெடுத்து விட்டது... ஓடிவந்தேன்!—உன்னிடம் இப்போது ஓடி வந்திருக்கிறேன்!—இனி நீதான் என் குற்றங்களை மறந்து, என்னை மன்னித்து, ஏற்றுக்கொள்ள வேண்டும்?...அன்னம்! அமிர்தத்தை விஷமெனவும்—விஷத்தை அமிர்தமெனவும் அறிவுத்தடுமாற்றத்திலே தவறாக மதித்துக்கொண்டு விட்டேன்! ஆயிரமிருந்தாலும் அன்னம்தான் நிஜ அமிர்தமென்பது இன்றுதான் என் புத்தியில் பட்டது! உண்மையில் ஆலகால விஷம் நான்தான்! உன் மனசைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் உனக்கு எவ்வளவு தாரம்கொடுமை செய்து விட்டேன்!" என்று சொல்லிக்கொண்டே இருந்தபொழுது, விவரிக்க முடியாத உணர்ச்சிப் பெருக்கால், அவன் நெஞ்சு அடைத்துக் கொண்டு, கண்கலங்கியது.

அன்னபூரணியும் உணர்ச்சிச் சுழலில் அகப்பட்டுக்கொண்டு திணறிக்கொண்டு தான் இருந்தாள். "நான்செய்த நல் வினையல்லவா அங்கே செட்டியார் ரூபத்தில் வந்து உங்களை வழிமறித்தது!" என்று சொல்லி முடிப்பதற்குள் அவளுக்கு அழுகையே வந்து விட்டது!

திடீரென்று விச்வநாதனின் பாதங்களில் விழுந்து தேம்பினாள். "கடவுள்தான் உங்களை எனக்கு மறுபடியும் மீட்டுக் கொடுத்தார்" என்று விம்மினாள். "நான் உங்களை ஏற்பதா? நீங்கள் அல்லவா என்னை மீண்டும் ஏற்க வந்தீர்கள்!" என்று கண்ணீர் உகுத்தாள்.

"கொஞ்சம் இருங்கள்; ஒரு நிமிஷத்தில் வந்து விடுகிறேன்!" என்று சொல்லிக் கொண்டே எழுந்து உள்ளே ஓடினாள்.

ஐந்து நிமிஷங்களில் முகம் கழுவி, திலகம் வைத்துக்கொண்டு, புதுப் புடவை தரித்துக் கொண்டு, சர்வாலங்கார பூஷிதையாக வந்து, சிரித்த முகத்துடனே, விளக்கேற்றி வைத்து விட்டு, பகவானின் படத்திற்கெதிரே மண்டியிட்டு நமஸ்கரித்தாள்.

பின்னர் மதிவதனத்தில் மந்தஹாசம் அரும்ப விச்வநாதன் எதிரே வந்து நின்றாள். அவனை நோக்கிக் கண்களைச் சுழற்றி, மோஹனப் பார்வையில் அவனை மயக்கிக் கொண்டே "இப்போது எப்படியிருக்கிறேன், பாருங்கள்!" என்று கன்னங்குழியச் சிரித்துக் கொஞ்சினாள்.

"அப்ஸரஸைப் போலே இருக்கிறாய்! இனிமேல் அமிர்த பானம் பண்ணலாமல்லவா?" என்றான் விச்வநாதன்.

"என்ன இருந்தாலும் கள்ளின் புளிப்பை உணர்ந்த பிறகு தானே அமிர்தத்தின் இனிமையையும் அறியமுடிகிறது!" என்று சிரித்தாள் அன்னபூரணி.

விச்வநாதன் அவள் வாயை மூடி 'அமிர்த பானம்' பண்ணினான்.

49018

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ சென்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்

ஸிடி ஆபீஸ்கள்:

சைனா பஜார், மாம்பலம், மைலாப்பூர்,
— திருவல்லிக்கேணி, பெரியமேட் —

பிராஞ்சுகள்:

அமதலவாலஸை	கும்பகோணம்	சாலூர்	திருச்சினாப்பள்ளி
அனகாபள்ளி	மதுரை	சீயாழி	திலாறு (சிகாகோல்)
சிதம்பரம்	மருடேரு	தாடபள்ளிக்கூடம்	வேலூர்
சித்தூர் (கொச்சி)	பாலக்காடு	தஞ்சாவூர்	விஜயபுரம் (திருவாரூர்)
காஞ்சிவரம்	பார்வதிபுரம்	திருநெல்வேலி ஜங்ஷன்	விருதுநகர்
ஈரோடு	புதுக்கோட்டை	திருநெல்வேலி டவுன்	விஜயநகரம்
காரைக்குடி			

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் நடத்தப்படும்.

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.

ஜவுளி தினுசுகள்

:: தேவைக்கு!

நம்பிக்கைக்கு உகந்ததாய்த் தற்கால மோஸ்தரில்
உடைக்குத் தக்க போட்டி விலையில்

புதுச் சரக்குக்கள் கிடைக்குமிடம்

M. N. நாகேந்திரம் ஸன்ஸ்

ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்.

(மலைவாசல் உள்மண்டபம்)

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினாப்பள்ளி.

N. B.-உயர்ந்த பனாரிஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன

Regd. No. M. 4405 CAUVER[cut off]



டி. எஸ். ஆர். கோகுல் தைலத்தை

தொடர்ந்து உபயோகித்த இம்மங்கை தனது கூந்தல் அடர்ந்து கவர்ச்சியாக வளர்ந்திருப்பதைக் கண்டு அகமகிழ்கிறாள்.

இம் மகிழ்ச்சியை நீங்களும் எளிதில் அடையலாம்.

டி. எஸ். ஆர்

கோகுல் கூந்தல் தைலம்,

சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம் [cut off]

இவைகள் குற்றால ஸ்நானத்தின் குளிர்ச்சிக்கு நிகரானவை!

மதராஸ் ஸிடி ஏஜண்டு: **புஷ்பவனம் ஸ்டோர்ஸ்** பைக்ராப்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி.

T. S. R. & CO.

PERFUMERS
KUMBAKONAM